
பிரதான ஆசாரியனின்

# அலங்கார ஆடை



ந. ஜான் ஜெயானந்தம்

பிரதான ஆசாரியனின்

# அலங்கார ஆடை

பிரதான ஆசாரியனின்

# அலங்கார ஆடை



ந. ஜான் ஜெயானந்தம்

மோரியா
ஊழியங்கள்

**பிரதான ஆசாரியனின் அலங்கார ஆடை**

**ந. ஜான் ஜெயானந்தம்**

**Holy Garments of the High Priest**

N. John Jeyanandam

© Moriah Ministries 2009

ISBN 81-907600-5-x

பதிப்பு எண்: ***016*** முதல் பதிப்பு ***2009***

---

*Published by*

**Moriah Ministries**

Post Box No. 2540, No. 57/51, East Park Road,
Shenoy Nagar, Chennai - 600 030, India.
Email: <moriahministries@gmail.com>
Phone: 91-044-2664 5010/9444961106

**Moriah Ministries**

C/o Bethany Gospel Hall
16, North St., Mannarpuram, Tiruchirapalli - 620 020, India.

---

*Typeset & Cover Design: Moriah Ministries*
*Printed at: Horeb Print House, Sivakasi.*

## பதிப்பகத்தார் உரை

தன் தாசனாகிய மோசேயின் மூலம் யெகோவா தேவன் கட்டளையிட்ட விவரங்கள் ஒன்றும் தவறாமல் ஆசரிப்புக் கூடாரம் நிறுவப்பட்டது. ஆசாரிய ஊழியத்தைச் செய்வதற்கு தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதான ஆசாரியன் இல்லாதிருப்பாரெனில், ஆசரிப்புக் கூடாரமும், அதிலிருந்த பணிமுட்டுகளும் பயனற்றவைகளாகிவிடும். இக்காரணத்தை முன்னிட்டு, 'யெகோவா' தமது பரிசுத்த ஸ்தலத்தில் பணியாற்றவேண்டிய பிரதான ஆசாரியனைக் குறித்தும், அவன் அணிய வேண்டிய ஆடைகளைக் குறித்தும் மிகத் தெளிவான விவரங்களைத் தந்துள்ளார். தேவன் கற்பித்தபடியே இஸ்ரவேல் மக்கள் ஆசரிப்புக் கூடாரத்தை அமைத்து, அதன் பணிவிடைக் கருவிகளைச் செய்து, ஆசாரிய உடைகளை நெய்து தீர்த்தபோது, "இப்படியே ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்" (யாத். 39:32) என்ற விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகா பிரதான ஆசாரியராக விளங்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு அருமையான நிழல் உருவாக இந்த ஆசரிப்புக் கூடாரமும், ஆசாரியனும், அவன் அணியும் பரிசுத்த ஆடைகளும் இருக்கின்றன. அவற்றின் ஆவிக்குரிய உட்கருத்தை அறிந்துகொள்ளச் செய்வதே இச்சிறு நூலின் நோக்கமாகும். இஸ்ரவேல் மக்களுடைய பிரதான ஆசாரியரின் அலங்கார ஆடைகளை நம் கண்முன் சித்திரமாக்கி, அதன் மூலமாக பரிசுத்த ஆவியானவர் போதிக்க விரும்பும் இறைச்சத்தியங்களையும், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை ஆலோசனைகளையும் இந்நூல் சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

இந்நூலில் முகப்பு அட்டையை அலங்கரிக்கும் பிரதான ஆசாரியனின் அலங்கார ஆடையின் வர்ணப்படம், உள்ளூர் கிறிஸ்தவச் சபைகளிலும், வேதாகமப் பள்ளிகளிலும் சுருட்டி எடுத்துச் சென்று பயன்படுத்தத்தக்க வரைபடம் 4'x 2' (Flexable Chart) எங்களிடம் கிடைக்கும். இச்சிறுநூலுடன் இந்த வரைபடத்தைப் பயன்படுத்துவது நல்ல பயனை வருவிக்கும்.


கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் பலியாகி சிந்திய தூய இரத்தத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் தேவனை நெருங்கிச் சேரக்கூடிய நற்பேறு கிடைத்துள்ளது. அவர்கள் எல்லோரும் "அரசாளும் (இராஜரீக) ஆசாரியர்களாக" உள்ளனர். இத்தகுதிக்கு ஏற்ப வாழ்வதற்குப் பழைய ஏற்பாட்டு ஆசாரிய முறைமை பிரதான ஆசாரிய ஊழியம், அவன் அணியவேண்டிய ஆடை ஆகியவை பற்றி படிப்பது அவசியமாகும். இது நமது உரிமைகளையும், சிலாக்கியங்களையும் அறிந்து செயல்படப் பெரிதும் உதவும். அவ்வகையில் இச்சிறுநூல் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்ற ஜெபத்துடன் இதனை உங்கள் கரங்களில் கொடுக்கிறோம்.

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | திருமறையின் மேன்மைகளும் அதன் வெளிப்பாடுகளும் | 01 |
| 2 | பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் | 07 |
| 3 | ஆடைகள் | 15 |
| 4 | பிரதான ஆசாரியன் ஆரோனும் அவன் குமாரர்களும் | 23 |
| 5 | மெல்லிய பஞ்சு நூல் உள்சட்டை | 32 |
| 6 | ஏபோத்தின் கீழ் அங்கி | 39 |
| 7 | ஏபோத்தும் தோள்பட்டை கோமேதகக் கற்களும் | 49 |
| 8 | இரு இடைக் கச்சைகள் | 57 |
| 9 | நியாயவிதி மார்ப்பதக்கம் | 60 |
| 10 | ஊரீம் தும்மீம் | 68 |
| 11 | பாகையும் அதின் பொற்பட்டமும் | 73 |
| 12 | பிரதான ஆசாரியனுடைய ஊழியம் | 86 |
| 13 | லேவியரின் கூடாரத் திருப்பணி | 94 |

# 1

# திருமறையின் மேன்மைகளும் அதன் வெளிப்பாடுகளும்



**தேவன்** நமது கரங்களில் அருளியுள்ள தூய திருமறை ஓர் அறிவுக் களஞ்சியம். அது ஓர் அதிசய நூல். "அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாய் இருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பு" (எபி. 2:4) என்று கிறிஸ்து அருளிய இரட்சிப்பைக் குறித்து கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தூய வேதமாகிய இந்நூலுக்கும் பொருந்தும்.

## திருமறை ஓர் தீர்க்கதரிசன நூல்

வேதாகமம் ஒரு தீர்க்கதரிசன நூல் என்று கூறுவோமாயின் அது மிகையாகாது. திருமறையில் விளம்பியுள்ள சத்தியங்களையும் முன்னறிவிப்புகளையும் உறுதிசெய்யும் உட்சான்றுகள் அத்திருமறையிலேயே அடங்கி உள்ளன. தீர்க்கதரிசனத்தின் உறைவிடம் தேவனே. அவரிடமிருந்தே இறைவார்த்தைகளும், தீர்க்கதரிசனங்களும் புறப்படுகின்றன. மனுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தமது உள்ளக் கிடக்கைகளையும், தாம் நிறைவேற்றப்போகும் திட்டங்களையும் தம்முடைய தீர்க்கர்கள் மூலமாகவும், சில காட்சிப்பொருள்கள் மூலமாகவும் மற்றும் பல விதங்களிலும் அவர் முன்னதாகவே தெரியப்படுத்தியுள்ளார்.

உலக சரித்திரத்தில் இதுவரை நிகழ்ந்துள்ளவைகளை முன்னதாகவே குறிப்பிட்டுச்சொல்லியுள்ளதும், இனி நடைபெறவிருக்கும் சம்பவங்களை ஏற்கனவே எடுத்துரைத்துள்ளதுமான நூல், தூய

வேதாகமம் ஒன்று மட்டுமே. ஆம், இந்நிலையில் திருமறையோடு இவ்வுலக சமய நூல்களை ஒப்பிடக்கூடாதபடி அது தனிச்சிறப்பு படைத்ததாகும்.

திருமறை என்னும் தீர்க்கதரிசன நூல் தனக்குள் அடங்கியுள்ள சத்தியங்களைப் பலவிதங்களில் உறுதிசெய்யும் வகையில் அத்திரு மறையே நமக்கு விளக்கிக்காட்டுகிறது. எவ்வாறெனில் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள விவரங்கள் பல, இஸ்ரவேல் நாட்டி லும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் நிகழ்ந்து, முன்னறிவிப்புகளாகத் திகழ்கின்றன. இத்தகைய முன்னறிவிப்புகள் பலவகைப்படும். ஒன்று, வசனங்களாக நேரடியான முறையில் முன் னறிவித்தல் ஆகும். இவை எண்ணிக்கையில் அடங்கா. இரண்டா வது, பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளே பின்னர் நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு முன்னடை யாளமாக விளங்குகின்றன. மற்றும் திருமறையில் காணும் கதை களும் உவமைகளும், வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும் விவரங்களாக அமைந்துள்ளன. மேலும் இஸ்ரவேல் மக்கள் கைக்கொள்ளும்படி தேவன் அருளிய பண்டிகைகளைப் பற்றிய கட்டளைகள் அவர்களது வரலாற்றில் நடக்கவிருந்த நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பாகவே உள்ளன. அவை உலக சரித்திரத்தைப் பகுக்கும் கூறுகளாகவும் உள்ளன. இதனோடு ஒரு நூதன முறையும் தூய திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. காட்சிப்பொருள்கொண்டு விளக்கப்பட்ட சில மெய்ப்பொருட் களே அவை.

திருமறையின் திருவார்த்தைகள் தேவனின் ஞானம் - ஞானா சக்தி இவற்றின் நிறைவான பிம்பம் அல்லது வடிவம் என்று கூற லாம். இத்தகைய தேவ ஞானமும் சத்தியும் சேர்ந்து மனித வடி வெடுத்தவரே நம்முடைய இயேசு பெருமான் ஆவார். இறை அருளுரை இளவரசன் சி. எச். ஸ்பர்ஜன் புனித மறையைப் பற்றிக் கூறுவதைக் காண்க:

இறைவசனத்தில் அநேக இரகசிய அறைகள் உள்ளன. பெட்டி களுக்குள் பெட்டிகள்-அதில் பல மர்ம அறைகள் நிறைந்துள்ளன. தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மூலம் ஆவியானவர் பேசும் வரை அவை தங்கள் மர்ம மெத்தையில் அயர்ந்து உறங்குகின்றன. சிக்கி முக்கிக் கல்லில் நெருப்பு இருக்கிறது என்பதை அறிவார்களா? கன்மலை எண்ணெய் பொழியும் என்று தெரியுமா? நாம் மிதிக்கும் இப்பூமியில் உண்ணும் ஆகாரம் உண்டு என்பதை யார் அறிவார்? மனிதன் படைக்கும் நூல்களில் நாம் எதிர்நோக்குபவைகளைக்

காட்டிலும், மிகக் குறைவாகவே கிட்டும். ஆனால் ஆண்டவரின் திருமறையோ அதிர்ச்சியூட்டும் அதிசயங்கள் நிறைந்த பெட்டகம். அது பலவர்ண ஒளிக்கதிர் பிம்பம். ஆச்சரியமான வெளிப்பாடுகள் குவிந்துள்ள மலைச் சிகரம்.

இவ்வகையில் தேவகட்டளையின்படி பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மக்கள் உருவாக்கிய ஆசரிப்பு கூடாரமும், ஆராதனை முறைகளும், பிரதான ஆசாரியனது ஆடைகளும் பின்னர் உலகில் மனிதனாக வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பின் ஊழியத்தையும், பரலோகில் அவருடைய இன்றைய பிரதான ஆசாரிய ஊழியத்தையும், கிறிஸ்துவின் திருச்சபையார் கைக்கொண்டு ஒழுகவேண்டிய ஒழுங்குமுறைகளையும் உருவகப் படுத்தும் மிகத்தெளிவான அழகிய வர்ணச் சித்திரங்களாக அமைந் திருக்கின்றன. ஆகையால் பழைய ஏற்பாட்டில் சொல்லியுள்ள விவ ரங்களை ஏதோ தேவையற்ற விவரங்களாகவும், மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளவைகளாகவும் நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது.

## திருமறையில் காணும் காட்சிப்பொருள்கள்

தம்மைப் பற்றியும், தமது வழிமுறைகளையும் நமக்கு எடுத்துப் போதிக்க தேவன் திருமறையில் பல வழிகளைக் கையாண்டுள்ளார். இவ்வாறு வேதாகமத்தில் உவமைகள், உருவகங்கள், எடுத்துக்காட்டு கள், மாதிரிகள், காட்சிப் படங்கள் போன்ற பற்பல முறைகளில் இறைச் சத்தியங்கள் எழுதி விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நாம் பல ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். இவை பரலோகத்திற்குரியனவாகவும், நித்தியத்திற்குரியனவாகவும் இருப் பதினால், அறிவில் குறைவுள்ளவர்களும், காலத்திற்குக் கட்டுப் பட்டவர்களும், எல்லையில் குறுகியவர்களுமாகிய மனுமக்களா கிய நாம் புரிந்துகொள்வதற்காகப் பலவித வர்ணச் சித்திரங்கள் அவசியமாயுள்ளன. நாம் எளிதில் புரிந்துகொள்ளத்தக்க வகையில் தேவன் ஆழமான சத்தியங்களைப் பல வழிமுறைகளில் அறியச் செய்துள்ளார்.

பழைய ஏற்பாட்டு பட உருவகங்கள், காட்சிப்பொருட்கள் ஆகிய இவைகளுக்கு எபிரெய நூல் "***சாயல்***" அல்லது "***மாதிரி***" (எபி. *9:23*), "***அடையாளம்***" அல்லது "***உருவகங்கள்***" (எபி. *9:24*), "***நிழல்***" (எபி. *10:1*) போன்ற பெயர்களைக் கொடுத்துள்ளது. இவ்வாறு பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டவை, புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய சத்தியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், அவற்றை நம்

அனுபவமாக்கிக்கொள்ளவும் உதவுகின்றன. ஆகையால் பழைய ஏற்பாட்டில் படமாக அல்லது நிழலாக உள்ளவை, இனிமேல் நடைபெறப்போவதாக உள்ளதும், ஆயினும் அச்சமயத்தில் தெளிவாக புலப்படாத வெளிப்பாடாகவும் இருந்துள்ளன.

தேவன் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மூலம், கிறிஸ்துவைப் பற்றி "பங்கு பங்காகவும், வகை வகையாகவும்" வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் (*எபி. 1:1*). இவ்வாறு அவருடைய பலதரப்பட்ட மாட்சிமையை வெவ்வேறு கோணங்களில் திருமறை விவரித்துள்ளது.

மோசேயின் நூல்களாகிய முதல் ஐந்து ஆகமங்கள் ஒரு பெரிய கலைக்கூடம் எனலாம். மாபெரும் பல்கலைக் கலைஞராகிய யெகோவா மிகவும் உன்னிப்பான முறையில் பல அழகிய சித்திரங்களைத் தீட்டியும், சிற்பங்களை வடிவமைத்தும் வைத்துள்ளார். நாம் அவற்றில் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்துவைக் காண்கிறோம். அவருடைய சிலுவை பலியாகிய மரணக்காட்சி தென்படுகிறது. அவைகளின் மூலம் கிறிஸ்துவின் பலவித மேன்மைகளையும், மகிமைப் பிரதாபங்களையும், அவருடைய ஊழியத்தின் சிறப்பையும் நாம் அறிந்துகொள்கிறோம். ஒப்பற்ற அவருடைய பல்நோக்கு மாட்சியையும், அழகையும், கிரியைகளின் மேன்மையையும் விவரிக்க ஒரு உருவகம் மட்டும் போதுமானதாக இல்லை. இதினிமித்தம் பல உருவகப் படங்களும் உவமானங்களும் அவசியமாயுள்ளன. அப்படியிருந்தும், அவைகளின் மூலம், அவருடைய முழுமையான மேன்மையையும், மகத்துவத்தையும் நம்மால் அறிய முடிவதில்லை. சாலொமோன் அரசனின் சீர்சிறப்பைக் கண்ட சேபாவின் அரசி, தான் நேரில் கண்டவைகளில் "பாதியாகிலும் தனக்கு அறிவிக்கப்படவில்லை" (*1 இராஜா. 10:7*) என அறிக்கையிட்டதுபோல், நாமும் பரலோகம் சென்று, அவருடைய உன்னத மாட்சியை நேரில் பார்க்கும்போது, இதே வார்த்தைகளை உச்சரித்து வியப்படைவோம்.

கிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் உண்மையைத் தெளிவுபடுத்த, பழைய ஏற்பாட்டு உருவகப் படமாக கோலில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தைப் பயன்படுத்தினார் (*யோவான் 3:14*). வானத்திலிருந்து அருளப்பட்ட ஜீவ அப்பமாகத் தாம் திகழ்வதை விவரிக்க, இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் வானத்திலிருந்து பொழிந்தருளிய வானத்தின் அப்பமாகிய மன்னாவைப் பயன்படுத்தினார் (*யோவான் 6:31-33*). "மோசே என்னைக் குறித்து எழுதியிருக்

கிறானே" (யோவான் 5:46) என்று அவிசுவாசியான யூத பண்டிதர்களுக்குக் கூறி புரிய வைக்க முயன்றார். தம்முடைய உயிர்த்தெழுதலை நம்புவதற்குத் தயங்கிய, சோர்ந்து தளர்ந்துபோன எம்மாவு சீடர்களுக்கு, "மோசே முதலிய சகல தீர்க்கத்தரிசிகளும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளையெல்லாம்" எடுத்துக்கூறி விவரித்துக் காட்டினார் (லூக்கா 24;27). இவையாவும் முதல் ஐந்தாகமத்தில் அவரைப்பற்றி விவரித்துள்ள உருவகப்படங்கள் அல்லவா?

இத்தகைய நிழல் படங்களை நாம் படிப்பது, இறை உண்மைகளின் அழகையும், மேன்மையையும், அதில் காணும் பல்நோக்கையும் அறிய உதவுகின்றன. இறை உண்மைகள் மிகவும் முக்கியமானவையாதலால், அவைகளை நாம் ஏற்று அப்பியாசப்படுத்திக் கொண்டு, நம் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

மேற்சொல்லியுள்ள இவ்விளக்கங்கள், இப்பொழுது நாம் படிக்கப்போகும் பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியனின் "மகிமையும் அலங்காரமுமான" ஆடைகள், மற்றும் அவனுடைய மேன்மையான ஆசாரிய ஊழியம் இவற்றின் மூலம், வெளிப்படுத்தப்படும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழிய மேன்மைகளுடன், நம்மைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள ஏதுவாகிறது. ஏனெனில் நாம் அவருக்குள் ஒன்றாகவே இருக்கிறோம். நாம் விசுவாசத்தினாலே அவருக்குள் இணைந்திருப்பதினால் இரட்சகரையும் இரட்சிப்பையும், மீட்பரையும் மீட்பையும், அவருக்குள்ளாக நாம் பெற்றிருக்கும் பற்பல ஆசீர்வாதங்களையும் அறிந்துகொள்கிறோம். இவைகளின் மூலம் விசுவாசிகளாகிய நம்முடைய நிலை என்னவென்பதை உணர்ந்து கொள்ளவும் நம் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் உந்தப்படுகிறோம். இதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி புரிவாராக.

## பரிசுத்த ஆசரிப்புக் கூடாரம்

பழைய ஏற்பாட்டில் தேவன் தம் மக்களிடையே வாசம் செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் மக்களின் வனாந்திர பாதையில் அமைக்க வேண்டிய ஆசரிப்பு கூடாரம், மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இதற்குரிய பல விவரங்களுடன், அந்த ஆராதனை கூடாரத்தில் பலிகளைச் செலுத்தி ஆராதனையை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்களும், அவர்களுக்குத் தலைவனாக இருக்க வேண்டிய பிரதான ஆசாரியனும் முக்கிய இடத்தைப் பெறுகின்ற

னர். ஆசாரிய ஊழியம் இன்றி, ஆசரிப்புக் கூடாரத்தில் பயன் ஏது மில்லை. ஆசரிப்புக் கூடாரமும், ஆசாரியத்துவமும் ஒன்றோ டொன்று இணைந்துள்ளன. இதில் ஒரு பங்கு பிரதான ஆசாரியனின் சிறப்பான ஆடையாகும். அவை உருவாக்க வேண்டிய விவரங்கள் மிகத்துல்லியமாகத் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளன. யாத்திராக மம் 25 முதல் 30 வரை உள்ள அத்தியாயங்களில் அடங்கிய 225 வசனங் களில், 43 வசனங்கள் அதாவது 19 விழுக்காடு இவ்வாடையைப் பற் றிக் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் ஆகும். இவ்வளவு தெளிவான விவரங்கள் இதன் முக்கியத்துவத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

வனாந்திர யாத்திரையில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு, கட்டளையிட்ட ஆசரிப்புக் கூடாரத்திற்கு இருவகையான நோக்க முண்டு. ஒன்று: தம் மக்களிடையே தேவன் வாசம் செய்ய வேண்டும் (யாத். 25:8). மற்றது: பாவமுள்ள மனிதன், பரிசுத்தமுள்ள தேவனை அடைவதற்கான வழிமுறைகள் தேவனால் வகுக்கப்படுவது ஆகும். யாத்திராகமம் 28 முதல் 31 -ஆம் அதிகாரம் மட்டுமுள்ள பகுதியில், மனிதன் தூய தேவனிடம் சேர்வதற்காக வழிமுறை உருவகமாக விளக்கப்பட்டுள்ளது. 28 -ஆம் அதிகாரத்தில் ஆசாரியனின் ஊழியத் தில் தொடங்கி, தூபபீடம், சுத்திகரிக்கும் வெண்கலத்தொட்டி ஆகிய வற்றைக் கூறிய பின்னர் 31 -ஆம் அதிகாரத்தின் பின்பகுதியில் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாகக் கைக்கொள்ள வேண்டும் என்ற கட் டளையுடன் முடிவடைகிறது. இது, மனிதன் விண்தேவனைக் கண்ட டையும்போது அவன் இளைப்பாறுதல் பெற்று ஓய்ந்திருப்பான் என்ற உண்மையை உணர்த்துகிறது.

## 2

# பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள்



**ஆசாரியன்** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெயச் சொல்லுக்கு "நெருங்கி வருபவன்" என்பது பொருள் ஆகும். இது அப்பெயருடைய ஆசாரியன் "***தேவனண்டை நெருங்கி வருபவன்***" *(யாத். 19:22; 30:20)* என்பதனைத் தெரிவிக்கிறது. இத்தகைய ஆசாரிய ஊழியம், ஆபேல் தன் மந்தையின் தலையீற்றானவைகளைத் தேவனுக்கு செலுத்தும்படி கொண்டு வந்தபோது, முதன் முதல் வெளிப்பட்டது. ஆசாரியன் என்ற இச்சொல் பழைய ஏற்பாட்டில் முதலில் மெல்கி-சேதேக்கைக் குறிக்கும் வகையில் "உன்னதமான தேவனுடைய ஆசாரியன்" *(ஆதி. 14:18)* என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசாரியன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனாகவே இருந்தான் *(எண். 16:5,7)*. அவன் உன்னதமான தூய தேவனுக்கு ஊழியம் செய்பவன்.

ஆசாரியர்களின் ஊழியம் இருநோக்குடையதாகும். ஒன்று அவர்கள் தேவனைச் சேவித்து ஆராதிப்பவர்கள்; மற்றொன்று தேவனுடைய குணநலன்களையும், அவருடைய கட்டளைகளையும் தம்முடைய மக்களுக்கு வெளிப்படுத்தி எடுத்துரைப்பதாகும். இவ்வாறு ஆசாரிய ஊழியம் முதலில் ***தேவன் முகமாகவும்***, அடுத்து ***மனிதன் முகமாகவும்*** நிறைவேற்றப்பட்டன. ஆரோன் குடும்பத்தாரின் ஆசாரியத்துவம் இவ்வாறே இருந்தது. இன்று புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் ஆற்றும் ஆசாரிய ஊழியமும் இத்தன்மையதே.

நாம் திருமறையை ஊன்றிப்படிக்கும் போது, ஆசாரிய ஊழியத்தைப் பற்றிய வேறு சில கூறுகளைக் காணமுடியும்.

**1.** ஆரம்ப நாட்களிலே "*தனிநபர் ஆசாரியர்கள்*" மட்டுமே இருந்தனர். காயீனும் ஆபேலும் தங்களுக்காகவே ஆசாரியர்களாக தேவனண்டை நெருங்கி வந்ததாகக் காண்கிறோம்.

**2.** பெருவெள்ள அழிவுக்குப் பின்னர், "*குடும்ப ஆசாரியன்*" என்ற நிலையில், தன் குடும்பத்தின் தலைவனாக நோவா தேவனுக்கு பலி செலுத்தித் துதித்ததைக் காண்கிறோம் (*ஆதி. 8:20*). இவ்வாறு யோபு (*யோபு 1:5*), ஆபிரகாம் (*ஆதி. 12:7, 13:18*), ஈசாக்கு (*ஆதி. 26:25*), யாக்கோபு (*ஆதி. 33:20; 35:1,2*) ஆகியோர் தங்கள் சொந்தக் குடும்பத்தின் சார்பில் ஆசாரிய ஊழியத்தைச் செய்து வந்தனர்.

**3.** மெல்கிசேதேக்கு ***அரசனாகவும்***, அதேசமயத்தில் ***ஆசாரியனாகவும்*** விளங்கினான் (*ஆதி. 14:18*); மோசேயும் ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றி வந்தான் (*சங். 99:6*).

**4.** எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் மக்கள், தேவ வல்லமையினால் மீட்கப்பட்டு, ஒரு தேசமாக உருவானபோது, இஸ்ரவேல் தேசம்தானே பிற தேசங்களுக்கெல்லாம் "***ஆசாரிய இராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாகத் திகழ்ந்தது***" (*யாத். 19:6*). ஆனாலும் இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம், "நீர் (மோசே) எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம். தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக. பேசினால் நாங்கள் செத்துப்போவோம்" (*யாத். 20:19*) என்று கூறிய நிலையில் அத்தகுதியை இழந்துவிட்டனர்.

**5.** அடுத்து, லேவி குடும்பத்தினர் இஸ்ரவேல் மக்களுக்கு ஆசாரியர்களாக விளங்கும்படி தெரிந்தெடுக்கப்பட்டனர். யாக்கோபின் முதல் மகனாகிய ரூபன் (*ஆதி. 49:3*) இவ்வுரிமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆயினும் தன் ஒழுக்கமின்மையினால் இவ்வுரிமையை இழந்துவிட்டான். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளிவருவதற்கு அநேக ஆண்டுகளுக்கு முன்னரே, லேவி கோத்திரத்தைச் சார்ந்த தேவ பக்தியுள்ள அம்ராம், யோகேபேத் குடும்பத்தார் (*யாத். 2:1; 6:20*) இஸ்ரவேலருக்கு ஒரு இரட்சகனைப் பெற்றெடுப்பதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்டனர். இஸ்ரவேலர் பொன்னாலான கன்றுக் குட்டியை உருவாக்கி பாவம் செய்தபோது, "கர்த்தருடைய பட்சத்தில் நிற்கிறவர்கள் யார்?" என மோசே விடுத்த அழைப்பிற்கு, லேவியின் புத்திரரே முன்னுக்கு வந்ததினால் இவ்வுரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று சிலர் கூறுவதுண்டு. அது எவ்வாறாயினும், லேவியைத் தெரிந்தெடுத்தது தேவனின் அநாதித் தீர்மானம் என்றே நாம் கொள்ளவேண்டும். ஒரு சிறப்பான அபிஷே

கத்தினிமித்தம் இந்த ஆசாரியத்துவம், ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் அருளப்பட்டது (எண். 18:8). ஆரோனின் கோல் துளிர் விட்டு, பூ பூத்து, வாதுமைப்பழங்களைக் கொடுத்த (எண். 17:1-10) அற்புத அடையாளத்தினால், இந்த அழைப்பு உறுதியாக்கப்பட்டது.

**6.** புதிய ஏற்பாட்டின் சத்தியத்தின் கீழ் செயல்படும் இக் கிருபையின் காலத்தில், கிறிஸ்துவுக்குள்ளான அனைத்து சகோதர சகோதரிகளும் "இராஜரீக ஆசாரியர்கள்" என்றே அழைக்கப்பட்டு, சிறப்பான சிலாக்கியத்தைப் பெற்றுள்ளனர். "நீங்களோ...... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியுமாயும் அவருக்குச் சொந்தமான ஜன மாயும் இருக்கிறீர்கள்" *(1 பேதுரு 2:9)*. "பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார்" *(வெளி. 1:6)*. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மகா பிரதான ஆசாரி யராக இருக்கிறார் *(எபி. 4:14)*. இவ்வாறு இன்று ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் ஆசாரியர்களாக இராமல், அனைத்து மெய்கிறிஸ் தவ விசுவாசிகளும், தேவசமுகத்தில் எப்பொழுதும் தைரியத்துடன் வரத்தக்க ஆசாரியர்களாக உள்ளனர். இவர்களுக்குச் சிறப்பான பட் டப்பெயரோ, அங்கி ஆடை அலங்காரமோ கிடையாது. அனைத்து விசுவாசிகளுக்கும் உரிய சிறப்பாகவே இந்த ஆசாரிய ஊழியம் தந்தருளப்பட்டுள்ளது.

## பழைய ஏற்பாட்டு ஆசாரிய ஊழியம்

"ஆரோன் ஆசாரியனாக எனக்கு ஊழியம் செய்வான்" *(யாத். 28:1)*

இஸ்ரவேல் மக்களிடையே ஆசாரியப் பணியாற்றியவர்கள் நான்கு சிறப்பான தகுதிகளைப் பெற்றிருந்தனர்.

*1. அவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்*

*2. அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள்*

*3. அவர்கள் தேவனுக்கென்று பரிசுத்தமானவர்கள்*

*4. அவர்கள் தேவனுக்கு (பலிகள் உட்பட) காணிக்கைகளைச் செலுத்துபவர்களும், தேவன் அருளும் ஈவுகளை மக்களுக்குக் கொண்டு வருபவர்களும் ஆவர்.*

மனிதர்களினிமித்தமே ஆசாரிய ஊழியத்தை தேவன் ஏற்படுத்தி யிருக்கிறார். ஆயினும், அது குறிப்பாக தேவன் முகமாகவே நோக்கி யுள்ளது. எவ்வாறு பரிசுத்த தூதர்கள் தேவனைச் சேவிக்கும் ஆவி

களாக உள்ளனரோ, அவ்வாறே பரிசுத்த ஆசாரியர்கள் தங்கள் ஆசாரிய ஊழியத்தின் மூலம் தேவனைச் சேவிக்கின்றனர்.

இஸ்ரவேல் தேசமே தேவனுக்கு ஒரு ஆசாரிய தேசமாகவும், பரிசுத்த மக்களாகவும் இருக்கும் (யாத். 6) என்பதே தேவனின் தீர்மானம். அவர்களும் "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என (யாத். 19:8) வாக்குக் கொடுத்தனர். ஆனால் அவர்கள் சீனாய் மலையில் தேவனுடைய பரிசுத்தத்தின் பயங்கரத்தைக் கண்டபோது பயந்து அத்தகுதியை புறக்கணித்து விட்டனர் (யாத். 20:18, 19; உபா. 18:16). மற்றும் அவர்களுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தமும், இருதயக் கடினத்தினிமித்தமும், தேவன் அச்சலுகையைத் தள்ளி வைத்து விட்டார். (உபா. 11:24,28; 18:16,17,). தேவன் இதைப் பிற்காலத்தில் நடைபெறக்கூடிய ஒன்றாக மாற்றிவிட்டார். அவர்கள் இழந்த இத்தகுதியைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேலர் அவரைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொண்டபின் திரும்பப்பெறுவர் (ஏசா. 61:6; 66:21). சகரியா தீர்க்கன் மூலமாக வெளிப்படுத்தியுள்ளபடி, "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புற ஜாதியாரில் பத்து மனிதர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக்கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார்" (சகரியா 8:23) என்று கூறும் நாட்கள் அவர்களிடத்தில் இனி நிறைவேறுவதாக உள்ளது. அவர்கள் தங்களுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் மீண்டும் கிறிஸ்துவுடன் அரசாளும் ஆசாரியராக விளங்குவர் (வெளி. 1:6, 5:10, 22:6).

தேவன் இஸ்ரவேலருக்காக ஏற்படுத்தின ஆசாரியத்துவம் இரு நிலைகளில் விளங்கியது. *தேவன் முகமாக,* ஆசரிப்பு கூடாரத்திலுள்ள பரிசுத்தமான பணிகளை ஆரோனின் குமாரர்கள் நிறைவேற்றி பலிகளை முறைப்படி செலுத்தினர். *மனிதன் முகமாக,* அவர்கள் தேவனுக்குச் சாட்சியாக நின்று, தேவனுடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும் போதித்து, தேவ ஆசீர்வாதங்களைக் கூறி வந்தனர். இவ்விரு நோக்கங்களின் அடிப்படையில் பலி செலுத்தவரும் மக்களுக்கு உதவியும், ஆசரிப்புக் கூடார பணிமுட்டுகளில் உதவியும், லேவியர்கள் பலவித ஊழியங்களில் ஈடுபட்டிருந்தனர். ("லேவியரின் கூடாரத்திருப்பணி" என்ற கடைசிப் பகுதியைக் காண்க).

## புதிய ஏற்பாட்டு ஆசாரிய ஊழியம்

புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் ஒரு ஆசாரிய முறைமை உண்டு. "நமக்கு ஒரு பலிபீடம் உண்டு" (எபி. 13:10) இம்முறைமை

இரட்சிக்கப்பட்டுள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் உரித்தான தொன்றாகும். இன்றைய திருச்சபையின் காலகட்டத்தில், ஊழியத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், அனைத்து விசுவாசிகளும் இப்பொழுது அரசர்களும், ஆசாரியர்களுமாக உள்ளனர் (1 பேதுரு 2:5, 9).

ஆனால் பல விசுவாசிகள் அதை உணராதிருப்பது வருத்தத்திற்குரியதாகும். நாம் விண்ணுலகம் சென்றபின் நம்முடைய பாடல், "எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கினீர்..." என்பதாக இருக்கும் (வெளி. 5:10). இதனை நாம் செம்மையாக உணரும் போதே, பேதுரு தன் முதல் நிருபத்தில் எடுத்துரைத்துள்ள ஆசாரியத்துவத்தைச் சரியான முறையில் செயல்படுத்துகிறவர்களாக இருப்போம்.

கிறிஸ்துவே மகா பிரதான ஆசாரியர். உயிர்த்தெழுந்து மகிமையடையவிருக்கிற புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் கிறிஸ்துவுடன்கூட ஆட்சி செய்யும் உரிமையையும் பெறுவார்கள்.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ ஆசாரியத்துவம், கத்தோலிக்கர்கள் மற்றும் பல பாரம்பரிய திருச்சபைகளிலும் காண்பது போன்று பிரித்தெடுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குருத்துவ பட்டம் பெற்றுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டும் உரிய சிலாக்கியம் அல்ல. கிறிஸ்தவ விசுவாசிகளைக் குருமார்கள் (Daiety) என்றும் பொதுவிசுவாசிகள் (Laity) என்றும் இருவகுப்பாராகப் பிரிப்பதற்கு புதிய ஏற்பாடு இடம் கொடுக்கிறதில்லை. சில கிறிஸ்தவ சபைகளில் காண்பதுபோல் சிறப்புப் பட்டமளித்தல் போன்றவைகளுக்கும் இடமில்லை. அனைத்து விசுவாசிகளின் ஆசாரிய ஊழியம் ஒரு சடங்காச்சார முறைமை அல்ல

## புதிய ஏற்பாட்டு ஆசாரிய ஊழியத்தின் நோக்கம்

ஒவ்வொரு விசுவாசியும், தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் பெருகி, தான் தேவனிடமிருந்து பெற்றுள்ள இந்த சிலாக்கியத்தைப் பயன்படுத்தி, தேவனைச் சேவிக்கிறதிலும், துதித்து தொழுதுகொள்வதிலும் வளர வேண்டும். பேதுரு அப்போஸ்தலன் தன் நிருபத்தில் எடுத்துரைத்திருப்பதுபோல், இந்த ஆசாரிய ஊழியத்தின் நோக்கத்தை நாம் முதலாவது அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

நாம் "கிறிஸ்துவின் புண்ணியங்களை அறிவிக்கும்படியே" இந்த ஆசாரியத்துவத்தைப் பெற்றுள்ளோம் (1 பேதுரு 2:9). யாத்திராகமம் 19:6-ஆம் வசனத்தையே பேதுரு இங்கு மேற்கோளாக எடுத்

துக்காட்டியுள்ளார். தேவன் மோசேயின் மூலமாக எடுத்துக் கூறியுள்ளது என்னவெனில், தம்முடைய மக்கள் அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டால், அப்பொழுது அரசாளும் (இராஜரீக) ஆசாரியத்துவத்திற்குரிய சிறப்பான ஆசீர்வாதச் செல்வத்தைப் பெறுவர் என்பதேயாகும். தேவனுடைய துதியைச் சொல்லிவரும்படியே, நாம் அவருக்கென்று ஏற்படுத்தப் பட்டுள்ளோம். (ஏசாயா 43:21- காண்க). இந்த நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாளை - கர்த்தருடைய நாளை - அவருக்கென்றே பிரித்து வைத்துக்கொண்டு கர்த்தருக்காகச் செலவிடுவது விசுவாசிகளாகிய நமக்கு ஏற்றதாயிருக்கும்.

கிறிஸ்துவின் புண்ணியங்களை யாருக்கு அறிவிப்பது? இது விசுவாசிகள் மத்தியில், அவர்கள் கூடிவரும் சபையில் அறிவிப்பது மட்டுமல்ல, சபைக்கு புறம்பேயும் சொல்லுவதாகும். அவர்கள் வாரத்தின் முதல் நாளில் சபையாகக் கூடிவந்து அப்பம் பிட்டு கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூருவதன் மூலம் தேவனை ஆராதிக்கின்றனர். சொல்லி முடியாத ஈவாகக் குமாரனைக் கொடுத்த பரலோகப் பிதாவைத் துதித்து தொழுகின்றனர். தங்களுக்காகச் சிலுவையில் ஜீவனை நல்கிய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பாடு மரணத்தை அப்பம்பிட்டு நினைவுகூர்ந்து அவரை மேன்மைப் படுத்துகின்றனர். மற்றது, சபைக்கு புறம்பே கிறிஸ்துவின் மகிமையான இரட்சிப்பின் சுவிசேஷத்தை, அதனை அறியாத எல்லா மக்களுக்கும் அறிவித்து, அவர்களையும் கிறிஸ்துவின் மந்தைக்குள் கொண்டுவர முனைகின்றனர். இது நித்திய அழிவிற்குச் சென்று கொண்டிருப்பவர்களைத் திசை மறித்து, நித்திய ஜீவனுக்குள் திருப்பிவிடும் ஊழியமாகும். இந்த இன்ப சுவிசேஷத் தொனியை உலகின் எல்லாத் திக்குகளிலும் பரப்புவதும் ஆசாரிய ஊழியத்தின் திருப் பணியாக உள்ளது.

அனைத்து கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் உரியதான இன்றைய புதிய ஏற்பாட்டு அல்லது திருச்சபையின் ஆசாரியத்துவம், ரோமர் 12:1-2 - இல் நாம் உற்சாகப்படுத்தப்பட்டுள்ளபடியே ஒவ்வொரு விசுவாசியும் தன்னையே தேவனுக்கு மெய்யான பலியாகச் செலுத்தி, தேவனுக்கு ஆராதனை செய்வது மட்டுமின்றி, தன் உடன் விசுவாசிகளுக்கும், உடன் ஊழியர்களுக்கும் உதவியும், அவர்களுக்குக் கை கொடுத்தும் பணிவிடை செய்ய வேண்டும்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் நிறைவேற்ற வேண்டிய ஆசாரிய ஊழியப் பணிகளாவன:

### அ. தேவன் முகமாக ஆற்றும் பரிசுத்த ஆசாரியத்துவ ஊழியம் (1 பேதுரு 2:5)

1. அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை கிறிஸ்துவின் மூலமாக செலுத்தும் ஆசாரிய ஊழியம் (எபி. 13:15).

2. கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கும் பலியைச் செலுத்துதலாகிய ஆசாரியத்துவம் (பிலி. 4:18).

3. ஜெபத்தின் மூலமாக நிறைவேற்றும் ஆசாரிய ஊழியம் (1 தீமோ. 2:1) எல்லா மனிதர்களுக்காகவும் விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல், ஸ்தோத்திரம் செலுத்துதல். பரிசுத்தமான கைகளை உயர்த்தி வேண்டுதல் செய்தல் (1 தீமோ. 2:8).

4. நம் சொந்த சரீரத்தைத் தியாகமான ஜீவபலியாகச் செலுத்தும் ஆசாரியத்துவம் (ரோமர் 12;1).

5. சுவிசேஷச் செய்தியினை பிரபலப்படுத்தும் ஆசாரிய ஊழியம் (ரோமர் 15:15). பவுல் தன்னை சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியன் என்று கூறியுள்ளபடி, தேவனுக்கு பிரியமான பலியாக விளங்கும் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றுதல்.

### ஆ. மனிதன் முகமாக ஆற்றும் இராஜரீக ஆசாரியத்துவம் (1 பேதுரு 2:9)

1. இருளின் அந்தகாரத்திலிருந்து மகிமையுள்ள ஒளியிடம் வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியான ஊழியம். இது நாம் குடியிருக்கும் இவ்வுலகில் தேவனுக்காகச் செய்யும் பொறுப்பாக உள்ளது. இஸ்ரவேல் மக்களோ ஆசாரியனை நோக்கிப் பார்த்து அவனுடைய மகிமையும் அலங்காரமுமான ஆடையைக் கண்டனர். அவ்விதமாகவே நம்மைச் சுற்றியிருக்கும் பிற மக்கள் கிறிஸ்துவின் அழகையும் மகத்துவத்தையும் நம்மிடத்தில் காண வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியும் முதிர்ச்சியும், நாம் கிறிஸ்துவுக்கு ஒப்பாக எல்லா சமயத்திலும் நடந்து கொண்டு அவரை வெளிப்படுத்துவதிலேயே அடங்கியுள்ளது.

2. பிற மக்களுக்கு நன்மையும் உதவியும் செய்தலாகிய ஆசாரியத்துவம் (எபி. 13:16). லூக்கா 10 -ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள, தூர விலகிச்சென்றுவிட்ட ஆசாரியனைப்போல் நாம் இராமல் தேவையுள்ளவர்கள் அனைவருக்கும் உதவுவது.

3. பிறருக்காகவே நம் வாழ்க்கையை நடத்துதலாகிய ஆசாரியத்துவம் (பிலி. 2:17). பிறருடைய விசுவாசப் பலியின்மேலும், ஊழியத்தின் மேலும் வார்க்கப்படுதல்.

அதுமட்டுமின்றி, அப்போஸ்தலன் அறிக்கையிட்டிருக்கும் வண்ணம், "நான் அவரையும் (கிறிஸ்துவையும்) அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும்" அறிந்து, நாம் நம்மையே தகுதியாக்கிக் கொள்ள வேண்டும் (பிலி. 3:10). நாம் இலவசமாகப் பெற்றுள்ள நித்திய இரட்சிப்பில் மனநிறைவு பெறுகிறோம். ஆயினும், அத்துடன் நின்றுவிடாமல் கிறிஸ்துவுக்குள் முனைந்து முன்னேறி, நம் சபைகளிலும், சபைக்கு புறம்பேயும், கிறிஸ்துவின் ஒப்பற்ற இறை அன்பை வெளிப்படுத்திக் காட்டுகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள்ளாகத் தேவனுடைய மகா பரிசுத்த இடத்திற்குச் சென்று, கிறிஸ்துவானவர் நம் இருதயங்களில் வாசம் செய்யவும், அவருடைய அன்பில் வேரூன்றி நின்று, அவ்வன்பின் வியாபகத்தை உணர்ந்து, தேவனுடைய சகல முழுமையினாலும் நிரப்பப்பட்டு சாட்சிகளாகவும் திகழ்வோமாக (எபே. 3:16-19).

# 3

# ஆடைகள்



**தேவனுடைய** வார்த்தையாகிய திருமறையில், ஆடை ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. மனிதன் செய்த முதல் தொழில் தனக்கு ஆடைகளை உருவாக்குதல் ஆகும் (ஆதி. *3:7*). மேல் ஆடை ஒருவருடைய குணப்பண்பை எடுத்துக்காட்டுகிறது. ஆதியாகமம் நூல் ஒன்றே இதற்குப் போதுமான சாட்சியாகும். மற்ற பகுதிகளில் மேல் ஆடையைப் பற்றிய குறிப்புகள் பல உண்டு எனினும், ஆதியாகமத்திலிருந்து ஒருசில எடுத்துக்காட்டுகளை இங்கு காண்போம்.

## ஆதாம் ஏவாளின் ஆடை

பாவத்தில் வீழ்ந்த மனிதன் உருவாக்கிய ஆடை அவனுடைய பாவத்தின் அருவருப்பையே எடுத்துக்காட்டியது. ஆயினும் இவ்விடத்தில்தான் தேவனுடைய கிருபையும் கருணையும் வெளிப்பட்டு, ஆணுக்கும் பெண்ணுக்கும் தோலினால் உடைகளை உண்டாக்கினதுமல்லாமல், அவரே அவ்வாடைகளினால் அவர்களை உடுத்தியும் விட்டார் (ஆதி. *3:21*). இதுவே தேவன் தமது கிருபையின் பெருக்கத்தினால் மனிதனின் பாவத்திற்காகச் செய்த முதல் பரிகாரச் செயலாகும். இவ்வாறு தேவன் உண்டுபண்ணின ஆடைகள் "***இரட்சிப்பின் ஆடைகளாக***" இருந்தன. இதற்கு மாறாக யாத்திராகமத்தில் விவரித்துள்ள பிரதான ஆசாரியன் அணிய வேண்டிய ஆடைகளோ, "***ஆசாரிய ஊழிய***" ஆடைகளாகும்.

## நோவாவின் ஆடை

தொடர்ந்து ஆதியாகமம் 9 -ஆம் அதிகாரத்தில் நோவாவின் குமாரர்களாகிய சேமும், யாப்பேத்தும், ஒரு ஆடையுடன் பின்புறமாக

வந்து தங்கள் தகப்பனுடைய நிர்வாண வெட்கத்தை மூடுவதாகப் படிக்கிறோம் (ஆதி. 9:20-27). நோவாவை இவ்வாறு மூடின ஆடை, இரட்சிப்பின் ஆடை அல்ல; மாறாக, தாங்கள் கனம்பண்ண வேண்டிய தகப்பனுக்குக் கொடுத்த "*பரிவின் ஆடை*" ஆகும்.

## யோசேப்பின் ஆடைகள்

தன்னுடைய பிரியமான மகனுக்கு, யாக்கோபு உண்டுபண்ணின "பலவர்ண அங்கி" (ஆதி. 37:3) "***தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவன்***" என்ற நிலையில் அவனுக்கு அணிவிக்கப்பட்ட ஆடையாகும்; தகப்பனின் பிரியம் அம்மகன் மேல் தங்கியிருந்ததை இது வெளிப்படுத்துகிறது. இதனை "***அன்பின் ஆடை***" என்றும் கூறலாம். யோசேப்பு போத்திபாரின் மனைவி வசம் விட்டுவிட்ட மேலாடை (ஆதி. 39:15,16), அவனுடைய உயர்ந்த உத்தியோகப் பொறுப்பை வெளிப்படுத்தும் அடையாளமாகும். அதுவே அவன் பிசாசின் தாக்குதலை வென்று, "***வெற்றியின் ஆடை***" யாக மாறினது. பின்னர் சிறைச்சாலையில் அவனுக்கு உடுத்துவித்த சிறைச்சாலை ஆடையை (ஆதி 41:14) "***பாடு அனுபவிக்கிறவனின் ஆடை***" என்று அழைக்கலாம். அதை அடுத்து மாவரசன் பார்வோன் அவனுக்கு உடுத்துவித்த மெல்லிய ஆடையும், சரப்பணியும், "***கனம் பெற்றவனின் ஆடை***" (ஆதி. 41:42) ஆகிறது. இவையாவும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியவைகளாம்.

விசுவாசிகளாகிய நமக்கு கிறிஸ்துவின் பரிசுத்தம் என்ற "***நீதியின் ஆடை***" அணிவிக்கப்பட்டிருக்கிறது (வெளி. 19:8). புதிய ஏற்பாட்டில் நமக்கு வாக்குச் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும், இவ்வுலக இம்மைக்குரிய பொருளாதார ஆசீர்வாதங்களாயிராமல், "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய" (எபே. 1:3) ஆசீர்வாதங்களாகவே இருக்கின்றன. இவற்றின் மதிப்பை பூமிக்குரிய, பூமியிலுள்ள பொருட்களைக் கொண்டு ஒருபோதும் மதிப்பிட முடியாது.

சர்தை சபையுடன் கர்த்தர் ஈடுபட்டபோது, தங்கள் ஆடைகளைத் தூய்மையாகக் காத்துக்கொண்டவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அத்தகையோர் வெண் ஆடை அணிந்து, ஆண்டவருடன் நடப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது (வெளி. 3:4-5). நம்முடைய சிந்தையிலும் தூய்மை காணப்பட வேண்டுவது எத்தனை அவசியம். இங்கு இவ்வாடை "***ஜெயம் கொள்ளுகிறவன் ஆடை***" ஆகிறது.

இவ்வாறு வேதாகமம் விவரிக்கும் ஆடைகள், நம்மைப் பாது காத்து, சரீரத்தை அழகுபடுத்தி, நம்முடைய மேன்மையை எடுத்துக் காட்டும் ஆடைகளாக இராமல், பாவத்தால் வீழ்ந்துள்ள மனிதனின் குணப்பண்பை தெரிவிவிப்பவையாகவே உள்ளன. மேற்கூறிய இவ் விவரங்கள், இப்பொழுது நாம் காணப்போகும் பிரதான ஆசாரி யனது ஆடையின் மேன்மையையும், சிறப்பையும், அவனுடைய ஊழியத்தின் தன்மையையும் எடுத்துக்காட்ட உதவும்.

## பிரதான ஆசாரியனின் ஆடைகள்

மேற்கண்டபடி, திருமறையில் குறிப்பிட்டுள்ள ஆடைகள், அதை அணிகிறவரின் குணப்பண்பை வெளிப்படுத்துகின்றன. இதுவரை சரித்திரத்தில் எந்த பிரபுவோ, அரசனோ, சமய ஆசாரி யனோ அணிந்திராத, பலவித சிறப்பு அம்சங்களைக் கொண்டதும், அழகும் அலங்காரமும், சிறப்பும் சிங்காரமும், கனமும் கண்ணியமு முடைய ஆடையாக அது அமைந்திருந்தது.

### பரிசுத்த ஆடைகள்

"ஆரோனுக்கு ***மகிமையும் அலங்காரமுமாக*** இருக்கும் பொருட்டு ***பரிசுத்த ஆடைகளை***" உண்டுபண்ணவேண்டும் (யாத். 28:2). ஆரோன் அழைக்கப்பட்ட உன்னத ஊழியத்திற்கு மகிமையான ஆடை அவசி யமாக இருந்தது. அவனிடம் சுயமான மகிமை ஏதுமில்லாதிருக்கை யில், அந்த மகிமையை அந்தப் பரிசுத்த ஆடைகளே அவனுக்குக் கொண்டுவந்தன.

ஆரோன், அணியத்தக்கதாக உருவாக்கப்பட்ட ஆடைகள் "***பரி சுத்த ஆடைகள்***" (யாத். 28:2) என அழைக்கப்பட்டன. இத்தகைய தூய்மை, அவ்வாடைகளை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்களில் அடக்கமாக இருப்பதில்லை அல்லது அதை அணிந்த ஆரோனுடையதுமில்லை. மாறாக, அவை உருவாக்கப்பட்ட உன் னத நோக்கத்தையே சார்ந்துள்ளன. அவை ஆரோனை மற்ற இஸ்ர-வேலரிடமிருந்து பிரித்து தனித்து நிறுத்தின. அவை தேவ சமுகத்தில் நிற்பதற்கு தகுதிப்படுத்தின ஆடைகளாக இருந்தபடியால், அவை பரிசுத்த ஆடைகள் எனப்பட்டன.

தேவன் இஸ்ரவேலருடன் ஈடுபட ஆரம்பித்த நாள் முதற் கொண்டு "பரிசுத்தம்" என்பது முதன்மையான இடத்தைப் பெற்றுள் ளதை நாமறிவோம். தேவன் மோசேயுடன் "தேவ பர்வதமாகிய ஓரேப்"பின் அண்டையில், முதல் முதல் காட்சியளித்தபோது, "நீ

நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என விளம்பினார் (யாத். 3:5). அவர்கள் ஒன்று கூடி வருதல், "பரிசுத்த சபை கூடுதல்" என அழைக்கப்பட்டது (யாத். 12:16). அவர்களுடைய தேவன், "பரிசுத்தத்தில் மகத்துவ முள்ளவர்" என அழைக்கப்பட்டார் (யாத். 15:11). மீட்கப்பட்ட இஸ்ரவேல் மக்களை அவர் "பரிசுத்த வாசஸ்தலத்திற்கு" நேராக வழி நடத்தி வந்தார் (யாத். 15:13). இம்மக்கள் யெகோவா தேவனுக்கு "பரிசுத்த மக்கள்" ஆகவே இருந்தனர் (யாத். 22:31). இவற்றின் நிமித்தம் "மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்" செல்லக்கூடிய பிரதான ஆசாரியனும், அதிக தூய பண்புடையவனாகவே இருக்க வேண்டும்.

## மகிமையும் அலங்காரமுமான ஆடை

பிரதான ஆசாரியன் அணியும் இந்த ஆடை "***மகிமையும் அலங்காரமும்***" ஆக அமைந்திருக்கும் என தேவன் விளம்பினார் (யாத். 28:2,40). "***மகிமை***" என்ற சொல், "சிறப்பு, புகழ், பேரழகு, மாட்சி" என்று பொருள்படும். "***அலங்காரம்***" என்ற சொல்லை, பார்வைக்கு அழகும், "மேன்மைக்குரியது" என்றும் கூறலாம். இப்பொருள்களை இணைத்து நாம் பார்க்கும்போது, அவற்றை அணியும் பிரதான ஆசாரியனை மற்ற மக்களிடமிருந்து பிரித்து, அவனை சிறப்பித்துக் காட்டியது.

இங்கு "***அலங்காரம்***" என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை, வேதாகமத்தின் வேறு சில இடங்களில் 'கனம்', 'கீர்த்தி', 'மேன்மை', 'மகத்துவம்' போன்ற சொற்களால் நம் தமிழ்த் திருமறையில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம் (உபா. 26:19; நியா. 4:9; சங். 71:8; எரே. 33:9). ஆகையால் யாத்திராகமம் 28:2- ஐ "மகிமையும் கனமுமான ஆடைகள்" எனவும் மொழி பெயர்க்க முடியும். இவ்வாறு ஆரோன் அணியும்படியாக தேவன் கட்டளையிட்ட ஆடைகள் மகிமையும், கனமும், அலங்காரமும் உடையதாக விளங்கி, அவன் ஆற்றிய திருப்பணிக்கு உகந்த சிறப்புடையதாக விளங்கின.

அவை பார்வைக்கு மிக கவர்ச்சியாக இருந்தன. ஆரோன் தன்னில்தானே இந்த மகிமையையும், சிறப்பையும் பெற்றிருக்கவில்லை. அவனுடைய ஆடைகளே அவனுக்கு இத்தகைய சிறப்பைக் கொடுத்தன. இவைகளுக்கெல்லாம் மெய்ப்பொருளாக விளங்கும் மகா பிரதான ஆசாரியரான நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ, தம்மில்தாமே மாட்சிமையும், கவர்ச்சியும், அழகும் உடையவராக இருந்தார். அவருக்கு இத்தகைய "***மகிமையும் அலங்***

*காரமுமான*" ஆடைகள் அவசியமாக இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பேசி போதித்த யாவும், அவர் பிறருக்கு அருளிய மறு மொழிகள் யாவும், அவருடைய அனைத்து செய்கைகளும் மகிமை யுடையதாக, அவருக்கு கனத்தைக் கொண்டு வருவதாகவே இருந் தன. மெய்யாகவே அவர் ஒருவரை மட்டுமே "மகிமையும் அலங் காரமும்" ஆனவர் என அழைக்க முடியும்.

ஆரோன் அணிந்த ஆடைகள் அவனை ஒப்பற்றவனாக மாற் றின, வேறு ஒருவரும் அவ்வாடைகளை அணியக்கூடாது. "ஆசாரி யத்துவ ஊழியம் ஆரோனை மேன்மைப்படுத்தியது, ஆனால் கிறிஸ்துவோ, ஆசாரிய ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறார்" என ஒரு வேத பண்டிதர் எடுத்துரைத்திருக்கிறார்.

## ஆரோனின் ஆடைகளை உருவாக்கியவர்கள்

"ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவ னைப் பரிசுத்தப்படுத்தும்படி, அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக் கும் பொருட்டு, நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" *(யாத். 28:3)* என்று தேவன் மோசேயிடம் கூறினார். யாத்திராகமம் *31:1* முதல் *6* வரை உள்ள வசனங்களின் மூலம் பெசலெயேலும், அகோலியாபும் ஆசரிப்பு கூடாரத்தையும், பிரதான ஆசாரியனின் ஆடைகளையும் உருவாக்குவதைக் கண்காணித்து மேற்பார்வை பார்க்கிறதற்கென்று தேவனால் சிறப்பாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அறி கிறோம். இப்பணிகளைச் செய்வதற்கு ஆவியினால் நிரப்பப்பட்ட வேறு பலரும் இருந்தனர் என்பதை *31:6*- ஆம் வசனம் தெரிவிக்கிறது.

எகிப்து தேசத்தில் பல ஞானிகளும், கைவண்மை மிக்க கலை ஞர்களும் இருந்தனர். அத்தகைய கலை ஞானம் உடையவர்களைக் கொண்டு ஆசரிப்பு கூடாரமும் ஆசாரியனின் ஆடையும் உருவாக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனிதர்களின் ஞானம் முற்றிலும் வேறுபட்டதாகும். ஆனால் ஆசரிப்புக் கூடாரத்துடன் சம் பந்தப்பட்டவைகளை உருவாக்குவதற்குத் தேவையான ஞானத்தை அவர்களுக்குத் தேவனே கொடுத்தார். ஏனெனில் அவர்தாமே ஞானத்தின் ஆவியினால் அவர்களை நிரப்புவேன் என்றார். எகிப்- திய ஞானிகள், மந்திரவாதிகள் ஆகியோரின் ஞானமும் அறிவும் "பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகிக சம்பந்த மானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்தது மாயிருக்கிறது" *(யாக். 3:15)*. மோசே இச்சிறப்பான பணிகளுக்

காகத் தெரிந்து கொண்டவர்களின் ஞானம் "பரத்திலிருந்து இறங்கி வருகிற" ஞானமாய் இருந்தது (யாக். 3:17). தேவன் மலையின்மேல் மோசேக்குக் காண்பித்த மாதிரிக்கேற்றபடியே இவர்கள் அவற்றை உருவாக்க வேண்டும். இவ்வாறு பரத்திலிருந்து பெறும் ஞானம் வேத வசனங்களுக்கு முற்றும் கீழ்ப்படிவதினாலேயே கிடைக்கும்; அதுவே உண்மையான ஞானம். உலக ஞானத்தைக் கொண்டு கர்த்தருடைய பணியை நிறைவேற்ற முடியாது. உலக ஞானம் சுயத்தைச்சார்ந்துள்ளது; அது தேவனைக் கனம் செய்வதாக இராது.

இத்தகைய இறை ஞானத்தைத் தானியேலும் பெற்றிருந்ததாகக் காண்கிறோம். "பரிசுத்த தேவர்களுடைய ஆவி" (தானி. 4:18) அவனுக்குள் இருந்ததால் பெற்றுக்கொண்ட ஞானமே இத்தகைய ஞானம் ஆகும். இது கல்வி அறிவினாலும், அனுபவத்தினாலும், மனித முயற்சி மற்றும் முதிர்ச்சியினாலும் பெறும் ஞானம் அல்ல. இது முற்றிலும் வேறுபட்ட இறை ஞானம் (தானி. 5:11). நாம் செய்யத்தக்க இறை ஊழியங்களுக்கு இத்தகைய ஞானமே தேவை. இத்தகைய ஞானமே நம்மை இவ்வுலகில் இறை மக்களாக நிலை நிறுத்துகிறது.

இன்று கர்த்தருடைய திருப்பணியில் ஈடுபட விரும்பும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் அனைவரும், உலக ஞானத்தையும் முறைமைகளையும் ஒருபோதும் சார்ந்து நிற்கக் கூடாது. தேவன் தம் ஊழியத்திற்கென்று அழைக்கிறவர்களுக்கு அவர் வரங்களை அருளுகிறார். ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் இத்தகைய வரங்களையே பயன்படுத்தவேண்டும். ஆவிக்குரிய பலன்களை வருவிக்கத்தக்கதாக, நிறைவேற்ற வேண்டிய ஆவிக்குரிய வேலைகளைச் செய்ய, ஆவிக்குரிய வரங்களே அவசியம் (1 கொரி. 12-14 அதிகாரங்கள், எபே. 4:7-16, ரோமர் 12:6-8 ஆகிய வேத பகுதிகளைக் காண்க). தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட தெய்வீகப் பணிகளை நிறைவேற்ற, இன்று கிறிஸ்தவ விசுவாசிகள் இவ்வாறே தகுதியாக்கப்படுகின்றனர். சிலர் சுவிசேஷகர்கள், சிலர் போதகர்கள் மேய்ப்பர்கள், சிலர் உதவிக்காரர்கள், சிலர் உதவுவோர். இத்தகைய இறை ஊழியத்தில், உலக அலுவலகங்களில் உள்ளதுபோல் படிப்படியாக உத்தியோக உயர்வு பெறும் நிலை கிடையாது. எல்லா விசுவாசிகளுக்கும் ஏதோ ஒரு வரம் தேவனால் அருளப்பட்டிருக்கிறது. அது என்ன என்பதை அவர்கள் உணர்ந்து, அதை அப்பியாசப்படுத்தி வளர்க்க வேண்டும். பிரதான ஆசாரியனின் ஆடைகளை உருவாக்கியவர்களை அன்று தேவன் தகுதிப்படுத்தியவாறே, இன்றும் தேவபணிக்குத் தேவை

யான ஞானத்தையும், திறமையையும் அவரே வழங்குகிறார். அவரவர் அழைக்கப்பட்டிருக்கும் ஊழியத்திற்குத் தகுதிபடுத்துபவர் தேவனே.

கொடுக்கப்பட்ட விவரங்களின்படியே, மலையில் மோசேக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியும், அவற்றில் ஒன்றும் பிசகாமல் எவ்வாறு அவ்வாடைகளை உருவாக்க வேண்டியதாயிருந்ததோ, அவ்வாறே இன்றும் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய சட்டதிட்டங்களுக்கும், சத்தியத்திற்கும் சற்றேனும் மாற்றமில்லாதவாறு நிறைவேற்றப்பட வேண்டும். இதுவே நம்முடைய பொறுப்பாக உள்ளது. இவ்வொழுக்கங்களை நாம் நம் சொந்த படிப்பு, ஞானம் ஆகியவற்றைக்கொண்டு கூடுதல் சிறப்புடையதாக்க முடியாது. சகலமும் கர்த்தருக்காகவே நிறைவேற்ற வேண்டும். அவை அனைத்தும் அவருடைய மகிமைக்கென்று அவர் திருநாம மேன்மைக்காகவே, அழகுற, உண்மையுடன் நிறைவேற்றல் வேண்டும்.

### பிரதான ஆசாரியனின் ஆடைகளின் விவரங்கள்

பிரதான ஆசாரியனின் ஆடைகள் என்னென்னவென்பதை யாத்திராகமம் *28:4*-ஆம் வசனம் விவரிக்கிறது.

*1. மார்ப்பதக்கம் (யாத். 28:15-30)*

*2. ஏபோத் மற்றும் தோள்பட்டை கோமேதகம் (யாத். 28:5-14)*

*3. ஏபோத்தின் கீழ் அங்கி (யாத். 28:31-35)*

*4. விசித்திரமான உள்சட்டை (யாத். 28:39)*

*5. பாகையும் பொற்பட்டமும் (யாத். 28:36-38)*

*6. இடைக்கச்சை (யாத். 28:39)*

இவற்றுடன் அவனுடைய நிர்வாணத்தை மூட, இடை தொடங்கி முழங்கால் மட்டும் உடுத்த சணல் நூல் சல்லடங்களையும் (யாத். *28:42-43*) உருவாக்கவேண்டும்.

இவ்வுடைகளின் விவரங்களை நாம் காண்கிறபோது, அவன் பாதத்தில் அணியத்தக்க காலணிகளைப்பற்றி ஏதும் சொல்லவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஆசாரியரோ, பிரதான ஆசாரியரோ காலணிகளை அணியக் கூடாது; ஏனெனில் ஆசரிப்புக் கூடாரம் பரிசுத்த கூடாரமாகும். மோசே எரிகிற முற்செடியினண்டை கற்றுக்கொண்ட பாடம் இதுவே (யாத். *3:5*). வீட்டிற்கு வரும்

விருந்தாளிகள் வாசலருகே தங்கள் காலணிகளைக் கழற்றி விடுவது அவ்வீட்டிலிருப்பவர்களைக் கனப்படுத்தும் செயலாகும். இதுவே கீழ்நாடுகளின் கலாச்சாரம். ஆசரிப்புக் கூடாரம் தேவன்தாமே வாசம் செய்யும் புனித வீடு. ஆகையினால் அங்கு காலணிகளைப் பயன் படுத்தாதிருப்பது தேவனைக் கனப்படுத்துவது மட்டுமல்ல, அவருக்கு ஆராதனை செலுத்தும் செயலாகவும் உள்ளது.

# 4

# பிரதான ஆசாரியன் ஆரோனும் அவன் குமாரர்களும்

*(வேதபகுதி: யாத்திராகமம் 28. 1-5)*



**மோசேயின்** மூலமாக தேவன் கொடுத்த கட்டளையின்படி பாலைவனத்தில் இஸ்ரவேல் மக்கள் அமைத்த ஆசரிப்புக் கூடாரம் எல்லா நிலைகளிலும் "பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருந்தது" (எபி. 8:5). ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியஞ்செய்த ஆசாரியர்கள் புது உடன்படிக்கையின்படி மீட்கப்பட்ட திருச்சபை விசுவாச மக்களின் பரம ஆசாரியத்துவத்துக்கு முன்னடையாளமாயிருந்தனர். பிரதான ஆசாரியனாகிய ஆரோன், நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன். ஆசாரியர்களாயிருந்த ஆரோனும் அவனுடைய குமாரரும் அவன் பின்சந்ததியாரும், கிருபையின் காலத்தில் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாயிருக்கிற தேவ மக்களுக்கு முன்னடையாளமாயிருக்கின்றனர். இவ்வாறு கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபை மக்களுக்கும் முன்னடையாளமாய் ஆரோனும் அவன் குமாரரும் உள்ளனர்.

## ஆரோன்

'***ஆரோன்*** என்கிற இப்பெயரின் பொருள் குறிப்பிடத்தக்கது. "***மிகவும் உயர்ந்த***" அல்லது "***கனத்துக்குரிய ஒருவர்***" என்று அது பொருள்படும். அவன் எல்லோருக்கும் மேலானவன்; தன் வீட்டாரிலும், ஏனைய இஸ்ரவேலரின் தலைவர்களிலும், பிரதான ஆசாரியன் என்ற நிலையில் மிகவும் உயர்ந்தவனாக இருந்தான். உண்மையாக கனத்துக்கும், மேலான பதவிக்கும் அவன் பாத்திரன் என்று

இஸ்ரவேல் ஜனங்கள் கருதினர். அவனுடைய ஆசாரிய ஊழியத்தினிமித்தம் மேலானவன் என்று எல்லாரும் அவனைக் கனப்படுத்தினர். இந்நிலையில் அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாக விளங்குகிறான். நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய கர்த்தர் இயேசு கிறிஸ்து, ஆரோனைக் காட்டிலும் எல்லா வகையிலும் மேலானவராய் இருக்கிறார். அவர் "வானங்களிலும் உயர்ந்தவராய்" இருக்கிறார் (எபி. 7:26). "பூமியின் இராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவராய்" இருக்கிறார் (சங். 89:27). அவர் வானத்தின் வழியாகப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் (எபி. 4:14) என்று விவரிக்கப்பட்டிருக்கிறார்.

## கிறிஸ்துவின் ஆசாரியத்துவம்

மேற்கண்டவாறு பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன், மெய்யான ஆசாரியராகத் திகழும் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு சித்திரமாக அமைந்திருக்கிறான். அவனுடைய ஊழியங்கள், அவன் பெறும் அபிஷேகம், அவன் அணியும் ஆடை இவையாவும் கிறிஸ்துவையும், அவருடைய ஆசாரிய ஊழியத்தையும் எடுத்தியம்புகின்றவையாக உள்ளன. கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராக இருப்பினும் (சங். 110:4; எபி. 5:6; 6:20; 7:20), அவர் ஆரோனின் முறைமையின்படியான ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றியவராகவும் உள்ளார். ஆரோனுடைய ஆசாரியத்துவத்தை மரணம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்; ஆகையால் மெல்கிசேதேக்கின் முறையின்படியாக கிறிஸ்து, "நீதியின் அரசராகவும், சமாதானத்தின் அரசராகவும் விளங்கி, முடிவில்லாத ஆசாரிய ஊழியத்தைப் பெற்றவராயுள்ளார்" (எபி. 7:23, 24). பாவ நிவாரணத்திற்காகப் பலி செலுத்துவதிலும், உயிரோடுள்ள யாவருக்கும் போதுமான, பரிந்துபேசும் முழுமையான ஊழியத்தை நிலைவரமாக நிறைவேற்றும் மகா பிரதான ஆசாரியராகத் திகழும் இயேசு கிறிஸ்துவைப் படம் பிடித்துக்காட்ட மெல்கிசேதேக்கு, ஆரோன் ஆகிய இருவரின் நிழல் படங்களும் அவசியமாக உள்ளன.

ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கும், நம்முடைய மகா பிரதான ஆசாரியர் கிறிஸ்துவுக்கும் உள்ள வேற்றுமைகளை இங்கு பட்டியலிட்டுக் காட்டியுள்ளோம்.

| ஆரோன் | கிறிஸ்து |
|---|---|
| 1. லேவி குடும்பத்தான் | 1. யூதா குடும்பத்தார் |
| 2. மாற்றப்படும் நியாயப் பிரமாணத்தின்படி தெரிந்தெடுக்கப்பட்டவன். | 2. முடிவில்லாத ஜீவனுடையவராக, நித்திய உடன்படிக்கையின்படி ஏற்படுத்தப்பட்டவர். |
| 3. முதல் பிரதான ஆசாரியன். | 3. மகா பிரதான ஆசாரியர் (எபி. 4:14). |
| 4. மனிதரிடையே இருந்து தெரிந்து கொள்ளப்பட்டவன் (எபி. 5:1) | 4. இவர் தேவகுமாரன் (எபி. 4:14; 5:5). மரித்தோரிடையே இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவர். |
| 5. பூமியில் ஊழியஞ்செய்யும் பூலோக ஆசாரியன் | 5. தேவ சந்நிதியில், தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து ஊழியஞ் செய்யும் பரலோக ஆசாரியர் (எபி. 8:1; 9:24). |
| 6. பழைய உடன்படிக்கைக்குரிய ஒரு ஆசாரியன் | 6. சிறந்ததோர் புதிய உடன்படிக்கைக் குரிய ஆசாரியர் (எபி. 8:6,7). |
| 7. ஆணையின்றி ஆசாரியனாக்கப் பட்டவன் (எபி. 7:20). | 7. தேவ ஆணையின்படி, மெல்கிசேதேக்கின் முறையின்படி ஆசாரியராக்கப்பட்டவர் (எபி. 7:20). |
| 8. ஆரோன் வழியில் வந்தவர், தகப்பனிடமிருந்து மகனுக்கு கடந்து வரக் கூடிய ஆசாரிய ஊழியம் பெற்றனர். | 8. என்றென்றும் நிலையான ஆசாரிய ஊழியத்தை உடையவர். |
| 9. மரணத்திற்கு உட்பட்டிருப்பது மின்றி, என்றென்றைக்கும் ஆசாரியனாயிருக்கக் கூடாத ஆசாரியன் (எபி. 7:23). | 9. என்றென்றும் ஜீவிக்கிறவராயிருப்பதினாலே, மாறிப் போகாத நிலையான ஆசாரியர் (எபி. 7:24). |
| 10. முதலாவது தன் சொந்தப் பாவங்களுக்காகவும், பின்னர் இஸ்ரவேலரின் பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டிய ஆசாரியன் (எபி. 7:27,28). | 10. பாவம் சற்றும் இல்லாதவராகிய இவர் தம்மைத்தாமே பலியிட்டதினாலே, மீண்டும் மீண்டும் பலியிட அவசியம் இல்லாது, ஒரே தரம் செய்து முடித்த ஆசாரியர் (எபி. 7:27). |
| 11. மகிமையையும் அலங்காரத்தையும் தனக்கு அளிக்கும் பரிசுத்த ஆடைகளை அணியும் ஆசாரியன் (யாத். 28:2). | 11. மகிமையினாலும், கனத்தினாலும் அவர்தாமே முடிசூட்டப்பட்டிருக்கிற நிலையான ஆசாரியர் (எபி. 2:9). |
| 12. பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துபவன். | 12. தம்முடைய மக்களுக்காகத் தம்மையே பலியாகச் செலுத்தியவர். |

## ஆரோனும் அவன் குமாரர்களும்

ஆரோனும் அவன் குமாரரும் யெகோவா தேவனுக்கு உன்னதமான ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

### ஆசாரிய ஊழியத்திற்கான வயது

ஆசாரிய ஊழியத்திற்கான வயது என்ன என்பது எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை அவர்கள் இருபது வயது முதற்கொண்டோ (எண். *8:24*) அல்லது முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களாகவோ (எண். *4:3, 23, 30, 35, 47*) இருந்திருக்கலாம். இவ்வூழியம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு ஒரு நிழல்படமாக இருப்பதினால், அவர் ஊழியத்திற்கு வந்த 30 வயதுடையவர்களாக அவர்கள் இருந்திருக்க வேண்டுமென (லூக்கா *3:23*) எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும்.

### ஆசாரிய ஊழியத்திற்குரிய வரையறை (லேவி. 21:7-15)

பிரதான ஆசாரியன் ஒரு விதவையையாகிலும், கற்பு குலைந்தவளையாகிலும், வேசியையாகிலும் திருமணம் செய்யாது, தன் மக்களுக்குள் ஒரு கன்னியையே மனைவியாகக் கொள்ள வேண்டும். மணவாட்டியாம் திருச்சபையின் நாயகராயுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பிரதான ஆசாரியன் நிழலாக உள்ளபடியால், கிறிஸ்துவின் தூய்மையை அவன் தன் வாழ்க்கையில் வெளிப்படுத்த வேண்டும். தேவனே அவனைப் பரிசுத்தமாக்குகிறவர் (லேவி. *21:15*); தேவனுடைய பரிசுத்த அபிஷேகத் தைலமாகிய கண்களுக்குப் புலப்படாத கிரீடம் அவன்மேல் உள்ளபடியினால், அவன் ஒரு பிரேதத்தண்டையும் செல்லலாகாது; தன்னுடைய தாய் தந்தையின் மரணத்திலுங்கூட அவன் தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாது. மற்றும் ஆரோனின் சந்ததியில் அங்கவீனமுள்ள ஒருவனும், இந்த ஆசாரிய ஊழியத்திற்குத் தகுதி உடையவன் அல்லன் (லேவி. *21:16-23*); அப்படிப்பட்டவர்கள் இறைமகனாம் கர்த்தருடைய முழுமையையும், பரிசுத்தத்தையும் அசுசிப்படுத்துவர். "உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினால் அவனும் (ஆரோனும்) உனக்கு (மோசேக்கு) முன்பாகப் பரிசுத்தனாயிருப்பானாக" (வ. *8*).

## ஆசாரிய ஊழியத்திற்கான ஆயத்தம்

இந்த உயர்வான ஊழியத்திற்கென அவர்களைப் பரிசுத்தம் பண்ணி, அபிஷேகம் செய்வதற்கான ஒழுங்கு முறைமைகளை யாத்திராகமம் 29 -ஆம் அதிகாரத்தின் முதற்பகுதி விவரிக்கிறது. ஆரோனும் அவனுடைய குமாரரும் இஸ்ரவேல் மக்களினின்று தெரிந்தெடுக்கப்பட்டு ஆசாரிய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டனர் (யாத். 28:1), அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு, பின்னர் இரத்தம் பூசுதலுக்கும், அர்ப்பணித்தலுக்குமுரிய ஆட்டுக்கடாவின் இரத்தத்தின் மூலம் தேவனுக்காகப் பிரித்து எடுக்கப்பட்டனர். இவ்வாறு வந்த அவர்கள் கீழ்ப்படிந்தவர்களாகி கீழ்ப்படிதலுக்குள் வந்து தங்களையே காணிக்கையாக்கினர் (யாத். 29:1, 7) இந்நிலை பேதுரு அப்போஸ்தலன் தன் முதல் நிருபத்தில் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நம்மைக் குறித்து எழுதியுள்ளவற்றை அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. விசுவாசிகள் பிதாவாகிய தேவனால் முன் அறியப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். அவர்கள் ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலுக்கும், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்பட்டுக் கீழ்படிதலுக்குள்ளும் வந்தவர்கள் (1 பேதுரு 1:2). பழைய ஏற்பாட்டுப் படவுருவத்தில் காணும் சத்தியமே, புதிய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்தவ விசுவாசிகளுடைய அனுபவமாக இருப்பதைச் சிந்தித்து உணர்ந்து தேவனைத் துதிப்போமாக!

ஆரோன் கிறிஸ்துவுக்கும், அவன் குமாரர்கள் திருச்சபையின் விசுவாச மக்களுக்கும் முன் அடையாளமாக உள்ளனர். இப்பகுதியில் ஆரோன் சிறப்பான இடத்தைப் பெறுகிறதைக் காண்கிறோம்.

> “ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் முன்பாகப் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவ வேண்டும்” (யாத். 29:4).

ஆரோன் தண்ணீரினால் கழுவப்பட்டு சுத்தம் அடைதல், கிறிஸ்துவானவருக்கே உரிய அதிதூய நிலையைக் குறிக்கிறது. அவன் குமாரருடைய சுத்திகரிப்பு, திருச்சபை விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள்ளாகப் பெற்றிருக்கும் பரிசுத்தத்தைக் குறிப்பதாகும். தண்ணீரினால் சுத்திகரிக்கப்படும் இச்செயல், தேவனுடைய திருவசனத்தினால் சுத்திகரிக்கப்படுவதை எடுத்துக் காட்டுகிறது. (எபே. 5:26, 27 காண்க)

> “அபிஷேகத் தைலத்தையும் எடுத்து, அவன் (ஆரோன்) தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகம் செய்வாயாக” (யாத். 29:7).

இவ்வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு ஒன்றுண்டு. ஆரோன் பலி மிருகத்தின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவதற்கு முன்னதாக அபிஷேகம் பண்ணப்பட்டான். ஏனெனில் கிறிஸ்துவுக்கு அவன் ஒரு சித்திரமாகத் திகழ்கிறான். கிறிஸ்து சிலுவையில் இரட்சிப்பின் கிரியையை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே, தம்மில்தாமே தூய்மையுடையவராக, முன்னரே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்டவராக இருந்தார். மாறாக, ஆரோனின் குமாரர்களோ, மிருகத்தின் இரத்தம் சிந்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே அபிஷேகம் பெற்றனர்.

"பின்பு மற்ற ஆட்டுக்கடாவையும் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள். அப்பொழுது அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனின் வலதுகாது மடலிலும், அவன் குமாரரின் வலதுகாது மடலிலும், அவர்கள் வலதுகையின் பெருவிரலிலும், அவர்கள் வலதுகாலின் பெருவிரலிலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து.." (யாத். 29:19, 20).

இவ்வாறு அவர்களுடைய கை, காது, கால் எல்லாம் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவனுக்கென்று ஒப்புவிக்கப்பட்டவைகளாயிருந்தன.

"பலிபீடத்தின் மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேகத் தைலத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும், அவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவனுடைய குமாரர் மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிப்பாயாக" (யாத். 29:21).

## புதிய ஏற்பாட்டு விளக்கம்

திருச்சபையின் விசுவாசிகளாகிய நம்மைப் பொருத்தமட்டில், கிறிஸ்து சிலுவையில் சிந்திய திருஇரத்தமே எல்லாவற்றிற்கும் அடித்தளமாக உள்ளது. திருச்சபையின் சிரசாக விளங்கும் கர்த்தர், பரலோகம் ஏறிச் சென்ற பின்னரே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் திருச்சபை பெற்றது. இதனை அப்போஸ்தலர் *2:32, 33* வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இதை யோவான் *7:39*, அப். *19:1-9* வசனங்களுடன் ஒப்பிட்டுக் காண்க. ஆபேலின் காலம் முதற்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவே, ஆத்துமாக்கள் புத்துயிர்பெற்று, புதுப்பிக்கப்பட்டு, தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிகளைச்

செய்வதற்குத் தகுதியாக்கப்பட்டனர். ஆனால் திருச்சபை விசுவாசிகளுடன் சம்பந்தப்பட்டோ, வெற்றி சிறந்தவராகிய நமதாண்டவர், பரலோகம் ஏறிச்சென்ற பின்னரே, பிதாவானவர் வாக்கருளியுள்ள பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெறுகின்றனர். புதிய ஏற்பாடு முழுவதிலும் இச்சத்தியம் தெளிவாகவும் நேரடியாகவும் போதிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஏற்பாட்டு உண்மை, நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிற உருவகப் படத்தில், (ஆரோன் அவனுடைய குமாரருடைய ஆசாரிய ஊழியத்தில்) மிகத் தெளிவாக வெளிப்படுவதைக் காண்கிறோம். தனக்காக இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்னரே கிறிஸ்துவுக்கு அடையாளமாயுள்ள ஆரோன் அபிஷேகம் பண்ணப்பட்டான் (யாத். 29:7). ஆனால் விசுவாசிகளுக்கு அடையாளமாக நிற்கும் அவனுடைய குமாரர்களோ அவ்வாறு இன்றி, சுத்தமாக்கப்பட்ட பின்னரே அபிஷேகம் பெற்றனர்.

இதுமட்டுமன்று, குமாரனாகிய இயேசு கிறிஸ்து மேன்மையும், முதன்மையானவராகவும் உள்ள நிலையை திருவசனம் பல இடங்களில் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. "நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர். ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும், உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" (சங். 45:7; எபி. 1:9). தேவ மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டிய சத்தியமாக இது உள்ளது. கிறிஸ்துவே எல்லாவற்றிலும் முதன்மையானவர். அனைத்திற்கும் அவரே சிரசாக விளங்குகிறார்; அவர் திருச்சபையின் சிரசு; அவர் படைப்புகளுக்கெல்லாம் ஆதாரமானவர்; தூதர்களுக்கும் அவரே சிரசாக உள்ளார். அண்டசராசரங்களுக்கெல்லாம் ஆண்டவரும் அவரே! பரிசுத்த ஆவியினால் அவரே அபிஷேகம் செய்யப்பட்டவர். நாம் அவருடைய சிலுவை பலியினாலே அவரண்டை மிக நெருக்கமாக வந்திருப்பினும், அவர் நம்மை சகோதரர்கள் என அழைத்திருப்பினும், நம்முடைய தாழ்மையான நிலையையும், அவருடைய மேன்மையான உயர்வையும் ஒருபோதும் நம்முடைய சிந்தையிலிருந்து அகற்றிவிடக்கூடாது.

"தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்" (எபி. 4:14) "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி. 7:26). "மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரி

யர் நமக்கு உண்டு" (எபி. 8:2). "தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினால்..." (எபி. 10:21) இவ்வாசகங்களும், வேதாகமத்தில் இவை போன்ற மற்றும் பல வாசகங்களும், இயேசு கிறிஸ்துவே நம்முடைய பிரதான ஆசாரியர் என்பதைத் தெளிவாய் எடுத்துக்காட்டுகின்றன.

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறியுள்ளான் (வெளி. 1:6). இன்றைய அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவத்தைப் பற்றிக் கூறுகையில், பேதுருவும் "இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என எழுதுகிறார் (1 பேதுரு 2:5). தேவனை விசுவாசித்து அவருடைய மக்களாயிருப்பவர்கள், "இராஜரீக ஆசாரியக் கூட்டம்" (1 பேதுரு 2:9) என அழைக்கப்படுகிறார்கள்.

யாத்திராகமத்தில் ஆசாரியரின் உடைகளின் விவரங்களை விவரிக்கிறதும், ஆசாரிய ஊழியத்துக்குப் பிரதிஷ்டை செய்கிற முறைமையைப் பற்றிக் கூறுகிறதுமான இரண்டு அதிகாரங்களிலும் "ஆரோனும் அவன் குமாரரும்" என்ற சொற்றொடர் திரும்பத் திரும்ப வருகின்றது (யாத். 28:1, 4, 41; 29:4, 9,10, 15, 19, 20, 21, 24, 32, 35, 44). இஸ்ரவேல் மக்களிடையே ஊழியஞ்செய்த ஆரோனும், அவன் குமாரரும் ஆராதிப்பவர்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்காகத் தேவனுடைய சந்நிதியில் பிரவேசிக்கையில் "இதோ, நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்" என்று கூறுகிறதினாலே, ஆரோனுக்கும் அவன் குமாரருக்குமிருந்த அதேவித உறவு, இயேசு கிறிஸ்துவுக்கும் அவரை விசுவாசிக்கிற நம் அனைவருக்கும் உண்டு (எபி. 2:13).

கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளுடைய புதிய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் நிபந்தனையற்றது. எவ்வாறு ஆரோனின் குமாரர்கள் தங்கள் குடும்பப் பிறப்பின் அடிப்படையில், இந்த ஆசாரிய ஊழியத்தைப் பெற்றுள்ளனரோ அவ்வாறே, நாமும் இந்த இராஜரீக ஆசாரியத்துவத்தை தேவ பிள்ளைகள் என்ற முறையில் கிருபையால் பெற்றுள்ளோம். இஸ்ரவேலரைப் பொருத்த மட்டில், இச்சிலாக்கியம்

லேவி கோத்திரத்தில் ஆரோனின் குடும்பத்தாருக்கு மட்டும் உரிமை யுடையதாயிருக்க, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுடன் சம்பந்தப் பட்டு, இரட்சிக்கப்பட்ட எல்லாருக்கும், ஆண் பெண் வேறுபாடு இன்றி, இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது.

# 5

# மெல்லிய பஞ்சு நூல் உள்சட்டை

*(வேதபகுதி: யாத். 28:39-41; லேவி. 8:4-13; 16:1-5)*



**ஆரோனைப்** பிரதான ஆசாரியனாக அபிஷேகம் செய்கிற முறையில் முதல் பாகம் கழுவுதலாகும். அதாவது அவனுடைய சரீரத்தைத் சுத்த நீரால் கழுவி சுத்தம் செய்யவேண்டும் (லேவி. 8:6). பின்னரே அவனுக்கு ஆசாரிய உடைகள் அணிவிக்கப்படும் (லேவி. 8:7-9). அதற்கு பின் அவன் அபிஷேகம் செய்யப்பட வேண்டும் (லேவி. 8:10-12).

ஆசாரிய உடைகளைப் பற்றி விவரித்திருக்கும் ஒழுங்குமுறை, யாத்திராகமம் 28 -இல் சொல்லியிருப்பதற்கு மாறாக லேவியராகமம் 8 -ஆம் அதிகாரத்தில் கூறியிருப்பதைக் காண்கிறோம். யாத்திராகமம் 28 -ஆம் அதிகாரம், பிரதான ஆசாரியனின் வெளித்தோற்றம் காண்கிற காட்சியை விவரித்திருக்க, லேவியராகமம் 8-ஆம் அதிகாரம், பிரதான ஆசாரியன் அவற்றை அணிகிற ஒழுங்கைப் பற்றிக் கூறுகிறது. அவன் தன் தூய அலங்கார ஆடைகளை அணிகிற முறைமையின்படியே நாம் அவைகளை இங்கு படிக்க விழைவோம்.

## சணல்நூல் சல்லடங்கள் (யாத். 28:42, 43)

ஆசாரியனுடைய நிர்வாணத்தை மூடி, இடுப்புத்தொடங்கி முழங்கால் மட்டும் தரிக்க வேண்டிய சணல் நூலால் நெய்த அரைச் சல்லடம் (அரையினின்று முழங்கால்வரை இடும் சல்லடம்) இஸ்ரவேல் நாட்டைச் சுற்றியிருந்த நாடுகளில் நிலவியிருந்த பாலுறவு கலந்த இறை ஆராதனை முறைமைகளுக்கு ஒரு மாற்றாக அமைந்திருந்தது. இந்தச் சணல்நூல் சல்லடங்கள் உடலுடன் ஒட்டிக்கொண்டு, சரீரத்தை மூடும் வகையில் இருந்திருக்க வேண்டும். இது பிற

நாடுகளில் உள்ள பண்பாடுகளுக்கு மாறான ஒரு முறை. இதில் தேவனின் தூய்மை உணர்த்தப்படுகிறது. "என் பலிபீடத்தின் மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்" *(யாத். 20:26)* என்று தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த கட்டளையை இத்துடன் ஒப்பிட்டுக் காண்க.

நிர்வாணத்தோடு சம்பந்தப்பட்டு மற்றுமொரு முக்கிய குறிப்பு பழைய ஏற்பாட்டில் உண்டு. இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதைத் தொழுதுகொண்டபோது, "ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக, ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான்" *(யாத். 32:25)*. தூய தேவனை ஆராதிக்கும் முறை இத்தகைய புற இனத்தவரின் ஆராதனை முறைமைகளினின்றும் முற்றும் வேறுபட்டு இருக்கிறது என்பது இதிலிருந்தும் தெளிவாகிறது.

இந்நாட்களில் நாகரீகம் எனக்கருதி, ஆண்கள் பெண்கள் தங்கள் சரீரத்தை மிகச்சாதாரணமாக வெட்கம் இன்றித் திறந்து காட்டும் நடக்கைகளும், அது சார்ந்த விளம்பரங்களும் நம் கர்த்தருக்கு அருவருப்பு என்பதை கிறிஸ்தவ விசுவாச மக்கள் உணர வேண்டும். பிற மதத்தினரின் ஆராதனை முறைமைகள், சிலைவணக்கம் இவையாவும் பாலியல் ஆராதனையுடன் தொடர்புடையனவாகும். ஆகையால் இதைப் பொதுமக்கள் அருவருப்பாகக் கருதுவதில்லை.

இதனிமித்தம் மெய்யான ஆவிக்குரிய தேவ ஆராதனை என்பது, குதித்தலும் கூத்துமல்ல, கூச்சலும் குழப்பமுமல்ல; ஆட்டமும் பாட்டமும் அல்ல. அது சரீரத்தையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி, பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் ஆத்துமாவில் தேவனை முன்நிறுத்தி, பக்தியோடும் வினயத்தோடும் அவர் பாதத்தில் தாழ்த்தி ஏறெடுக்கும் ஆவிக்குரிய ஆராதனையாக அமைய வேண்டும். இதுவே தேவன் ஏற்கும் ஆராதனை பலி *(எபி. 13:15)*.

## பஞ்சு நூல் வெண்ணிற உள்சட்டை

மெல்லிய பஞ்சு நூலால் நெய்யப்பட்ட வேலைப்பாடுகள் கொண்ட உள்சட்டை வெண்ணிறமானது. பிரதான ஆசாரியன் மற்ற ஆடைகளை அணிந்த பிறகு, இந்த உள்சட்டையின் கை ஓரம் மட்டுமே வெளியே காணக்கூடும். மற்ற பாகம் அதற்கு மேல் அணியும் அங்கியினால் மறைக்கப்பட்டுவிடும். இந்த உள்சட்டை கம்பளி நூலினாலோ, பட்டு நூலினாலோ அல்ல, மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்டதாகும். வேதத்தில் ஆடை எதைச் சிறப்பிக்

*கிறது? வெளி. 19:8-இல் கூறியிருக்கிறபடி, மெல்லிய ஆடை பரிசுத்த வான்களுடைய நீதியைக் குறிப்பதாகும்.*

> உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்த வான்கள் கெம்பீரிப்பார்களாக... அதின் ஆசாரியர்களுக்கு இரட் சிப்பை உடுத்துவேன் (சங். 132:9,16).

*இவ்வசனம் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களுக்கு மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டு ஆசாரியர்களாக விளங்கும் அனைத்து விசுவாசி களுக்கும் பொருந்தும்.*

## மகா பிரதான ஆசாரியர் நீதியும் தூய்மையுமுள்ளவர்

*நம்முடைய மகா பிரதான ஆசாரியர் ஒரு மனிதர். ஆயினும் அவர் பிறப்பில் பரிசுத்தரும், செயல்களில் குற்றமற்றவரும், மாசில் லாதவரும், இருதயத்தில் பாவிகளுக்கு விலகினவருமாயிருக்கிறார் (எபி. 7:26). அவருடைய கரங்கள் செய்த நீதியான கிரியைகளை ஜனங்கள் கண்டார்கள். அவருடைய பரிபூரண நீதிக்கு வேதத்தில் பல அத்தாட்சிகள் உள்ளன. அவருடைய பரிசுத்தமே அவருடைய மேன் மையான ஆசாரிய ஊழியத்திற்கு அடித்தளமாக உள்ளது. மெய்யான ஆசாரிய ஊழியத்தைச் சிறப்பித்தவர் அல்லவா அவர்!*

*1. கிறிஸ்துவைக் குற்றப்படுத்தும்படி சனகரிப்பு சங்கம் முற் பட்டபோது, அதற்கான சாட்சியங்கள் ஏதும் அவர்களுக்கு அகப்பட வில்லை (மத். 26:59,60).*

*2. இந்த மனிதன் நீதிபரனாயிருந்தான் (லூக்கா 23:47) என்று சிலுவையண்டையில் நின்ற நூற்றுக்கு அதிபதி அவரைக் குறித்து சாட்சி கொடுத்தான்.*

*3. கிறிஸ்துவாகிய நீதிபரருடைய வருகையை முன்னறிவித்த வர்களை யூதமக்கள் கொலை செய்தார்கள் என்று ஸ்தேவான் அவ ரைப் பற்றி எடுத்துக் கூறினான் (அப். 7:52). தேவன் தன்னைத் தெரிந்து கொண்டதைப் பற்றி அனனியா கூறியதை தமது இன மக்க ளுக்கு எடுத்துக்காட்டிய சந்தர்ப்பத்தில், "தேவனுடைய திரு வுளத்தை அறியவும், (கிறிஸ்துவை) நீதிபரரைத் தரிசிக்கவும்" (அப். 22:14) என்கிற வார்த்தைகளைப் பவுல் பயன்படுத்தியுள்ளதைக் காண்க.*

*4. பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்தீர்கள் என்று பேதுரு யூதரைக் குற்றஞ்சாட்டினான் (அப். 3:14). கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிப் பேசும்போது, பேதுரு "அநீதியுள்ளவர்களுக்*

குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடு பட்டார்" *(1 பேதுரு 3:18)* என்று குறிப்பிடுகிறார். மரணத்திலும் கிறிஸ்து நீதியுள்ளவராயிருந்தார்.

5. அவர் ஆசாரியராக நமக்காகப் பரிந்துபேசுகிறார் என்பதை அப்போஸ்தலன் யோவான் கூறுகிறபோது, "ஒருவன் பாவஞ் செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" *(1 யோவான் 2:1)* என்று அவருடைய நீதியைச் சுட்டிக்காட்டுகிறார்.

6. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் போதித்திருப்பது அவருடைய நித்திய நீதியை நமக்குத் திட்டமாய் விளக்குகிறது. "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" *(2 தீமோ. 4:8)*.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீதியுள்ளவர் மட்டுமல்லர், அவர் எவ்வகையிலும் மிகத் தூய்மையுடையவர் என்பதை பல வகையான சாட்சிகள் எடுத்துக் கூறியுள்ளதைப் புதிய ஏற்பாடு பதிவு செய்துள்ளது. அதன் விவரங்களையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம்.

1. அவரை விசாரித்த பிலாத்துவின் சாட்சி *(யோவான் 18:38; 19:4)*

2. பிலாத்துவின் மனைவி கொடுத்த சாட்சி *(மத்தேயு 27:19)*

3. ஏரோது அரசன் கொடுத்த சாட்சி *(லூக்கா 23:13-15)*

4. சிலுவையில் அறையப்பட்ட கள்வன் எடுத்துரைத்த சாட்சி *(லூக்கா 23:39-41)*

5. உரோம நூற்றுக்கதிபதி அளித்த சாட்சி *(லூக்கா 23:46,47)*

6. இரத்த சாட்சி ஸ்தேவானின் அறிக்கை *(அப்போஸ்தலர் 7:52)*

7. பேதுரு அப்போஸ்தலனின் அறிக்கை *(1 பேதுரு 2:22)*

8. பவுல் அப்போஸ்தலனின் அறிக்கை *(2 கொரிந்தியர் 5:21)*

9. யோவான் அப்போஸ்தலனின் அறிக்கை *(1 யோவான் 3:5)*

10. அசுத்த ஆவிகள் கொடுத்த சாட்சி *(மாற்கு 1:23-24)*

11. பரிசுத்த ஆவியானவரின் சாட்சி *(யோவான் 1:32)*

*12. பிதாவாகிய தேவன் அருளிய சாட்சி (மத்தேயு 17:5)*

*13. ஆண்டவர்தாமே தம்மைப்பற்றிக் கூறிய அறிக்கை (யோவான் 8:46).*

இந்த வெண்பஞ்சு உள்சட்டையின் மிகுதியான பாகம், அதனுடன்கூடிய அங்கி முதலான மற்ற மேல் ஆடைகளினால் மூடப்பட்டிருந்தது, வெகு குறைவான பகுதியே பிறர் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவ்வாறே நமது ஆண்டவருடைய தூய்மையும் நீதியும் தெய்வீகமும் மற்றவர்களால் பார்க்க முடியாதபடியே இருந்தன. அவை காட்சிப்பொருளாக இராமல், பரமபிதாவின் பிரியத்திற்கும் திருப்திக்கும் உரியவனவாகவே இருந்தன.

## ஆரோனுடைய குமாரர்களின் ஆடைகள்

பிரதான ஆசாரியனின் ஆடையைப் பற்றியுள்ள பல விவரங்கள், பிற ஆசாரியர்களுடைய உடைக்குக் கொடுக்கப்படவில்லையாயினும், அவையும் மகிமையும் அலங்காரமுமான ஆடைகளாகவே இருந்தன. ஆரோனுடைய குமாரரின் ஆடைகள் பிரதான ஆசாரியனுடையதைப் போன்று அத்தனை கனத்திற்குரியதாக இல்லை. ஆயினும் ஆசாரியனாக இருப்பது கனத்திற்கு உரியதாகும். பிரதான ஆசாரியனுக்கு இருந்தது போன்ற ஏபோத், விலையுயர்ந்த கற்கள், மார்ப்பதக்கம், ஊரீம் தும்மீம், பொன்பட்டை போன்றவை பிற ஆசாரியர்களுக்கு இல்லை. பிரதான ஆசாரியனுடைய ஆடைகளோ நமது மகா பிரதான ஆசாரியராக விளங்கும் இயேசு கிறிஸ்துவுக்கு ஏற்றாற்போல் மிகச்சிறப்புடையதாக இருந்தன.

ஆயினும் ஆசாரியர்களின் உடை சில வகைகளில் பிரதான ஆசாரியனுடைய ஆடைக்கு ஒப்பாக இருந்தது. இத்தத்துவத்தை யோவான் அப்போஸ்தலன் தன் முதல் நிருபத்தில் நமக்கு தெளிவுபடுத்தியுள்ளார். "அவர் சுத்தமுள்ளவராக இருப்பதுபோல, (விசுவாசியும்) தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3). அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் தங்களைச் சுத்தமுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளவேண்டும். ஆசாரியர்கள் தங்கள் ஊழியத்தை நிறைவேற்ற வெண்கல பலிபீடத்தண்டை செல்லும் போதும், மக்களண்டை செல்லும்போதும், பலிகளைச் செலுத்தும் போதும் இந்த ஆடைகளை அணிந்திருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் மரிக்க நேரிடும். இவ்விதமாகவே பிரதான ஆசாரியனைக் குறித்தும் அவன் தன் பரிசுத்த ஆடையை அணிந்திருக்க வேண்டுமென யாத்திராகமம் 28:35 -ஆம் வசனம் கட்டளையிட்டிருக்கிறது.

1. துதியின் பலிகளைச் செலுத்தும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற விசுவாசிகளாகிய நாமும் (எபி. 13:15) நம்முடைய அன்றாடக வாழ்விலும், ஊழியத்திலும் சுத்தமுள்ளவர்களாகக் காத்துக்கொண்டு, வசன ஒழுங்கின்படியே செயல்படவேண்டும். ஆரோனுடைய குமாரரும் மெல்லிய பஞ்சு நூலால் செய்த விசித்திர உள்சட்டையை அணிந்திருந்தனர் (யாத். 28:40). ஏனெனில் தேவனுடைய ஆசாரியர் யாவருக்கும் "***நீதியின் கிரியைகளே***" ஏற்ற உடையாயிருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொரு விசுவாசிக்கும் இரண்டு ஆடைகள் உள்ளன. ஒன்று "***அவருக்குள் தேவனுடைய நீதி***" (2 கொரி. 5:21). தங்கள் நிர்வாணத்தை அத்தி இலைகளினால் மூடிக் கொண்ட ஆதாமையும் ஏவாளையும் தேவன் தோலினால் ஆன ஆடைகளை உண்டுபண்ணி உடுத்துவித்தது இதற்கு முன்னடையாளம் (ஆதி. 3:21). பாவமற்ற இயேசு என்னும் தேவ ஆட்டுக்குட்டி நமக்காகப் பாடுபட்டு பலியாக்கப்பட்டதினாலே நாம் "அவருக்குள் தேவனுடைய நீதியாகிறோம்."

2. இரண்டாவது, ஆசாரியர்களின் உடை "***பரிசுத்தவான்களின் நீதி***" என்பதற்கு அடையாளமாக உள்ளது. இப்பொழுது தேவனுடைய ஆசாரியர்களாக விளங்கும் புதிய ஏற்பாட்டு தேவ மக்கள் பூமிக்குரியவர்களல்லர்; அவர்கள் பரத்துக்குரியவர்கள். ஆகையினாலே அவர்கள் இப்பொழுது மனிதர்கள் காணும்படி வெளிப்பிரகாரச் சிறப்புடன் காட்சியளிக்கும் உடைகளை அணிகிறதில்லை. அவர்கள் உள்ளான மனிதனில் நீதி (தேவ நீதி அல்லது கிறிஸ்துவின் நீதி) என்னும் கண்ணுக்குப் புலப்படாத தூய்மையாகிய வெண் ஆடையை அணிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" (ரோமர் 13:14). "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனிதனைக் களைந்துபோட்டு... மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே. 4:22-24).

## அதிதூய இடத்தில் செல்லும் பிரதான ஆசாரியன்

இஸ்ரவேலின் பிரதான ஆசாரியன், முதலாவது தனக்காகவும் பின்பு இஸ்ரவேல் மக்களுடைய தப்பிதங்களுக்காகவும் ஆண்டின் ஒருமுறை மட்டும் பலி செலுத்தி, அந்தப் பலியின் இரத்தத்தோடே அதிதூய இடத்தில் இருந்த கிருபாசனத்தின் மேல் இரத்தத்தைத்

*தெளித்து பாவநிவர்த்தி செய்யும்போது, பிரதான ஆசாரியன் மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களை அல்ல, பரிசுத்த வஸ்திரங்களைத் தரித்திருந்தான் (லேவி. 16:4,23). இக்காரியத்தில் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் இருக்கிற வேற்றுமை குறிப்பிடத்தக்கது: "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார்" (எபி. 9:11,12). இது எத்தனை மேன்மையான மீட்பு!*

# 6

# ஏபோத்தின் கீழ் அங்கி

*(வேதபகுதி: யாத். 28:31,32; 39:22-26; லேவி. 8:7)*



**பிரதான ஆசாரியனாகிய** ஆரோன் மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட விசித்திரமான உள்சட்டையை அணிந்தபின், அதன்மேல் ஏபோத் அங்கியை அணிகிறான். "அங்கி" என்ற சொல் முதன் முதலில் திருமறையில் இவ்விடத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது[1]. ஏபோத்தின் கீழாக இருக்கும் இவ்வங்கியில் காணும் சிறப்புத் தன்மைகளை நாம் அறிந்துகொள்ள, அதைப் பற்றி பின்வரும் மூன்று தலைப்புகளில் சிந்திப்போம்.

### *(1) அதன் நீல நிறம் (யாத். 28:31)*

அங்கி எவ்விதமான துணியினால் செய்யப்படவேண்டும் என்ற விவரம் சொல்லப்படவில்லை. அவ்வாறே அதன் நீளம் என்ன என்பதும் குறிப்பிடப்படவில்லை. அது கால்பாதம் வரை இருந்திருக்கும் என நாம் ஊகிக்கலாம். இவை இங்கு முக்கியம் அல்ல. ஆயின் அதனுடைய நிறமே முக்கியம். வானத்தின் நிறம் நீலம் என்று அறிவோம். ஆகவே, தூய வேதத்தில் "**நீலம்**" என்பது "**பரத்துக்குரிய**" அல்லது "**தெய்வீகமான**" என்ற பொருளை உணர்த்துகிறது. நம்முடைய மகா பிரதான ஆசாரியருடைய அங்கி நீல நிறமானது. அதாவது அவர் தேவ மனிதர். நமக்காக வேண்டுதல் செய்யும்படி தூய இடமாகிய பரலோகத்தில் அவர் பிரவேசித்திருக்கிறார் (எபி. 7:25; 8:1,2). ஆரோனுடைய ஆசாரியத்துவம் **பூமிக்குரியது**. ஆனால் தேவ குமாரனாகிய இயேசுவின் ஆசாரியத்துவமோ **பரலோகத்தில்** தேவப் பிரசன்னத்தில் உள்ளது.

அவர் **வானத்திலிருந்து** வந்த "ஜீவ அப்பம்" (யோவான் *6:32, 35, 41*). *பரத்திலிருக்கிற "மனிதகுமாரர்"* (யோவான் *1:18; 3:13*). அவர் **வானங்களின்** வழியாய்ப் பரலோகத்துக்கு ஏறிச் சென்றவர் (எபி. *4:14*). அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர் (மாற்கு *16:19*; அப். *1:11*). அவர் **வானங்களிலும்** உயர்ந்தவராய் இருக்கிறார் (எபி. *7:26*). சீக்கிரத்தில் அவர் ஆரவாரத்தோடு **வானத்திலிருந்து** இறங்கி வருவார் (*1* தெச. *4:16*). அதன் பின்பு தம்முடைய பரிசுத்த வான்களோடு "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர் களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் **வானத்திலிருந்து** வெளிப்படுவார்" (*2* தெச. *1:7,8*).

சிலுவையில் மரிக்குமுன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடையவர்களுக்காக வேண்டிக்கொண்டபோது: "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" என் றார். அவரைப்போல, அவரால் மீட்கப்பட்டவர்களும் பரலோக வாசிகளே! தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்ட வேண்டும் என்று இஸ்ரவேலருக்குத் தேவன் கட்டளையிட்டிருக்கி றார் (எண். *15:38*). நம்முடைய அழைப்பு பரம அழைப்பு (எபி. *3:1*). நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது (பிலி. *3:20*). நம் முடைய சுதந்தரமும் பரலோகத்திலிருக்கிறது (*1* பேதுரு *1:5*). ஆகையால் நாம் இப்பிரபஞ்சத்திற்கு (இப்பூவுலகிற்கு) ஒத்த வேஷம் தரியாமல் (நாடகம் நடத்தாமல்) தேவனுடைய நன்மையும், பிரிய மும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நம்முடைய மனம் புதிதாகிறதினாலே நாம் மறுரூபமாக வேண்டும் (ரோமர் *12:2*). நாம் எப்போதும், எல்லாச் சூழ்நிலைகளிலும் பரலோகவாசிகளே! அதற்கேற்றபடி நாம் நடந்துகொள்கிறோமா?

***(2) அதன் கட்டு***

அதன் நடுவில் பிரதான ஆசாரியனின் தலை நுழையத்தக்கதாக ஒரு துவாரம் இருக்கவேண்டும். துவாரத்தைச் சுற்றிலும் நெய்யப் பட்ட வேலையான ஒரு நாடா அமைந்திருக்கவேண்டும். அங்கி ***கிழி யாதபடிக்கு*** அந்தத் துவாரம் மார்க்கவசத்தின் துவாரத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும் (யாத். *28:32*).

இங்கு கவனிக்க வேண்டிய ஒரு குறிப்பு உண்டு. பிரதான ஆசாரியனின் ஆடை ஒருபோதும் கிழிக்கப்படக்கூடாது.

இதை லேவியராகமம் 21:10- ஆம் வசனம் தெளிவுபடுத்துகிறது. ஆசாரியன் அபிஷேகம் பெற்றவன். அவனுடைய ஆடை பரிசுத்த ஆடை. இவையாவும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்களாயுள்ளன. ஆகையால் அவனுடைய ஆடைகள் ஒருபோதும் கிழிக்கப்படலாகாது. அவ்வாறு செய்யின், அது மெய்ப் பொருளாக விளங்கும் நமது மகா பிரதான ஆசாரியரான கிறிஸ்துவை மறுதலிப்பதும், அவமரியாதை செய்வதுமாகிவிடும். அப்படியிருந்தும், கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, அன்றைய பிரதான ஆசாரியனாக இருந்த காய்பா, இவன் தேவனைத் தூற்றினான் எனக் கூறி, தன் ஆடையைக் கிழித்துக் கொண்டான் (மத். 26:65). இச்செய்கை ஆண்டவராகிய கிறிஸ்துவை அவமதித்து புறக்கணித்துத் தள்ளின செயலாக மட்டுமின்றி, பழைய ஏற்பாட்டு ஆசாரிய முறைமை கிறிஸ்துவின் சிலுவை மரணத்துடன் முடிவுபெற்று விட்டது என்பதையும், இனி மானிடருக்கு அவர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு ஆசாரியன் தேவையில்லை, தேவ குமாரனே என்றென்றுமுள்ள தேவனால் அங்கிகாரம் பெற்றுள்ள மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார் என்பதையும் தெரிவிக்கிறது.

நம்முடைய பிரதான ஆசாரியர் எல்லாவகையிலும் குறையற்றவர். அவர் தம்முடைய சித்தத்தை அல்ல, தம்மை அனுப்பின பரம தகப்பனின் சித்தத்தையே செய்ய இந்த உலகத்தில் வந்தார் (யோவான் 6:38). ஆரோனின் கழுத்தைச் சுற்றிலும் அங்கி கிழியாதபடி, அங்கியில் பின்னல் வேலை செய்யப்பட்டிருந்தது. நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோ, தேவ குமாரர், தம்முடைய ஊழியம் முழுவதிலும், ஒரே ஒரு நோக்கத்தினால் அவர் கட்டப்பட்டவராயிருந்தார். (லூக். 2:49; 22:42, யோவான் 4:34, 18:11; எபி. 10:5-7 ஆகிய வசனங்களைக் காண்க) இப்போதும் அவ்வாறே இருக்கிறார்; அதுவே பிதாவின் சித்தமும் நோக்கமுமாகும்.

இயேசு இந்த உலகில் இருந்தபோது, அவருடைய அங்கியைக் கிழிக்கவும், பிதாவின் சித்தத்திலிருந்து அவருடைய சித்தத்தை மாற்றவும் சாத்தான் தீவிரமாய் முயற்சித்தான். ஆனால் அவன் தோல்வியுற்றான். காரணம் "எழுதியிருக்கிறதே" என்ற வார்த்தையோடு ஆரம்பித்த அவருடைய பதிலில், தேவத் திருச்சித்தத்தோடு அவர் கட்டப்பட்டிருந்ததை யாதொன்றாலும், யாரொருவராலும்

பிரிக்க முடியாது என்பது தெளிவாயிருந்தது. பிதாவின் சித்தமும் தமது சித்தமும் வெவ்வேறாயிருக்க அவர் கிஞ்சித்தும் இடம் கொடுக்கவில்லை. இருவரின் திருச்சித்தமும் எப்போதும் இசைந்து ஒன்றாயிருந்தது. தற்காப்புக் கவசம் போன்றுள்ள சட்டையின் கட்டைப்போல, அவருடைய கழுத்தைச் சுற்றிலும் தேவ வசனம் ஒரு அழகிய கட்டாக இருந்தது. யூதேயா, சமாரியா, கலிலேயா நாடுகளைச் சுற்றித் திரிந்தபோது அவர் அணிந்திருந்த சட்டை இதற்கோர் எடுத்துக்காட்டு. அவர் அணிந்திருந்த அங்கி தையலில்லாமல் மேல் தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அதனாலே அவரைச் சிலுவையில் அறைந்த போர்ச் சேவகர்கள் அதைப் பங்கிட்டுக் கொள்ள தங்களுக்குள்ளே சீட்டுப்போட்டார்கள். "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்" *(சங். 22:18; யோவான் 19:23, 24)*. அவருடைய சித்தத்துக்கும் பரம பிதாவின் சித்தத்துக்கும் எப்போதும் எவ்வித வேறுபாடும் சற்றேனும் இருந்ததில்லை. நாமும் தேவ சித்தத்திற்கு ஒத்ததாகவே நம் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு முரணாக உள்ள எதையும் நம்முடைய சிந்தையிலிருந்து அகற்றிவிட வேண்டும். தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்து அறியும்படி, நம்முடைய மனதைப் புதுப்பித்து மறுரூபப்படுத்திக்கொள்ளவேண்டும் *(ரோமர் 12:1)*.

### *(3) அதன் கீழோரம்*

> அங்கியின் கீழோரங்களில் இள நீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல் வேலையால் செய்யப்பட்ட மாதளம் பழங்களையும், அவைகளுக்கு இடையிடையே சுற்றிலும் பொன்மணிகளையும் அதின் ஓரங்களில் சுற்றிலும் தொங்கும்படி பண்ணிவைக்க வேண்டும். அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம் பழமும், ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக (யாத். 28:33,34).

பிரதான ஆசாரியனின் ஆடைகளில் இந்த அங்கி ஒன்றில் மட்டும் கீழோரம் இருந்தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் கீழோரத்தில் பொன்மணிகளும், மாதுளை பழங்களும் மாறி மாறித் தொங்கவேண்டும் என்பது சற்று விசித்திரமாகவே நமக்குக் காணப்படுகிறது. சாலொமோன் மாவரசன் கட்டுவித்த தேவாலயத்தின் மண்டபத்திற்கு முன்னர் நிறுத்தப்பட்டிருந்த இரு வெண்கலத் தூண்களின் மேல் கும்பங்களில், விம்மிய இருநூறு மாதுளைப்பழங்கள் இருந்ததாக நாம் காண்கிறோம் *(1 இராஜா. 7:20)*.

***(அ) மாதுளை கனிகள்:*** மாதுளை பழத்தின் விதைகள் முத்துப் போன்று வரிசையாக அடுக்கியுள்ள மினுக்கும் செந்நிறமுள்ளவை களாகும். இவை அழகான அலங்காரப் பொருளாக இங்கு உள்ள தாக நாம் கருத முடியும். உன்னதப்பாட்டில் தலைவன் ரூபவதி யாகிய தன் பிரியத்தின் முக்காட்டிற்கு நடுவே காணப்பட்ட கன்னங் கள், "வெடித்த மாதுளம் பழம்" போலிருந்ததாக விவரிக்கிறான். இவ்வித ஒப்புமை அவளுடைய மெய் அழகை வெளிப்படுத்து கிறது. இதை அடுத்து 13 -ஆம் வசனத்தில் அவன், "உன் தோட்டம் மாதளஞ் செடிகளும், அருமையான கனி மரங்களும்" என்று கூறி அதனுடன் ஒப்பிட்டுப் பேசுகிறான். இவ்வித விவரங்களும் மாதுளை பழத்துடன் ஒப்பிட்டுக் கூறுதலும், மனையாட்டியாகிய திருச்சபை யின் அலங்காரத்தையும், இனிய கனி கொடுக்கும் வாழ்க்கையையும் குறித்துக் காட்டுவனவாகும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன் குறிக்கும் ஆசாரியனின் ஆடை, அவர் பதினா யிரங்களில் அழகுள்ளவர் என்பதை மட்டுமல்ல, அவர் மிகுந்த கனி களைத் தந்து பிதாவை திருப்தி செய்தவராவார் என்பதையும் இவ் வுவமை வெளிப்படுத்துகிறது.

நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் பரிசுத்த ஜீவியத்தின் கனியை அல்லாமல் வேறு எதை மாதளம் பழம் குறிக்கும்? அவரு டைய இந்த உலக ஜீவியம் நீதியின் கனிகளால் நிறைந்திருந்தது. அதிதூய பரலோக இடத்தில் அவர் இன்று நிறை வேற்றிவரும் ஊழிய மும் அதைப்போன்றே கனிகளால் நிறைந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்தபோது அவர்களுக்கு மாதளம்பழம் இல்லா திருந்தது. அங்கே அவர்களுக்கு மீன், வெள்ளரிக்காய், வெங்காயம், உள்ளிப்பூண்டு முதலியவைகள் ஏராளமாய்க் கிடைத்தன. ஆனால் எகிப்தியர் அருமையாகக் கருதிவந்த மாதளம் பழம் கிடைக்க வில்லை. வனாந்தரத்திலும் அவர்களுக்குக் கிடைக்க வாய்ப் பில்லை.

இஸ்ரவேல் சபையார் சீன் வனாந்திரத்திலே சேர்ந்தபோது, அவர்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேயினிடம், "...அத்திமரமும், திராட்சசெடியும், மாதுளஞ் செடி யும் ... இல்லாத இந்தக் கெட்ட இடம்" *(எண். 20:5)* என தாங்கள் பயணம் செய்த வழியை விவரித்தனர்.

கோத்திரத் தலைவர்கள் வேவுபார்க்கும்படி கானானுக்குச் சென்றபோது அங்கே அவர்கள் மாதளம்பழத்தைக் கண்டார்கள்

(*எண். 13:23*). தேவன் தம்முடைய மீட்கப்பட்ட ஜனங்களுக்குக் கொடுக்கச் சித்தங்கொண்டதும், வாக்களித்ததுமான தேசத்தில் கோதுமை, வாற்கோதுமை, திராட்சை, அத்தி, மாதுளை, ஒலிவ எண்ணெய், தேன் முதலியவை மிகுதியாகக் கிடைத்தன (*உபா. 8:8*). எகிப்தில் இஸ்ரவேல் மக்கள் பார்வோனுக்கு அடிமையாயிருக்கும் காலங்களில் அவர்கள் நல்ல பழங்களைக் காணமுடியவில்லை. கானான் தேசம் நமக்குச் சுட்டிக்காட்டும் பரலோகத்தில் மட்டுமே இவ்வித அருமையான கனிகளைக் காணலாம் (*வெளி. 22:2*).

ஆவிக்குரிய கனிக்கு அநேக நல்ல பெயர்களைப் புதிய ஏற்பாடு வழங்குகிறது: "ஆவியின் கனி" (*கலா. 5:22*). "வெளிச்சத்தின் கனி" (*எபே. 5:9*). "நீதியின் கனி" (*பிலி. 1:10*). "உதடுகளின் கனி" (*எபி. 13:15*).

*மாதுளங் கனிகள் - ரிம்மோன்:* இந்த மாதுளங் கனிகளைப் பற்றி, திரு. சி. எச். ரேவன் என்ற இறை போதகர் "தேவனுடைய புனித இடம் - ஆசாரிப்புக் கூடாரத்தைப் பற்றிய தியானங்கள்" என்ற நூலில் எழுதியுள்ளதை நாம் சுருங்கக் காண்போம்.

மாதுளை என்பதற்கான எபிரெயப் பதம் "ரிம்மோன்" என்பதாகும். இஸ்ரவேலில் ரிம்மோன் என்ற பட்டணமும் (*யோசுவா 15:32, 19:7; 1 நாளா. 4:32, 6:77 சகரியா 14:10*), ஒரு கன்மலையும் (*நியா. 20:45,47, 21:13*), ஒரு தனி இஸ்ரவேலனும் (*2 சாமு. 4:2,5,9*) இருந்துள்ளதைக் காண்கிறோம். இவ்வார்த்தை சீரியனான நாகமானுடன் தொடர்புடையதாகவும் உள்ளது. யெகோவா தேவன் மேல் தனக்குள்ள பற்றுறுதியை அவன் ஏற்கனவே வெளிப்படுத்தி விட்டான். அவன் தன் கொடிய குஷ்டரோகத்திலிருந்து ஆச்சரியமான முறையில் சுகமாக்கப்பட்டுள்ளான். யாத்திராகமம் 20:24-இல் கூறியுள்ள படி, மண்ணினால் பலிபீடம் நாட்டி, ஜீவ தேவனுக்கு சர்வாங்க தகன பலிகளைச் செலுத்துவதற்கு ஏதுவாக இரண்டு பொதி மண்ணை இஸ்ரவேல் தேசத்திலிருந்து எடுத்துச் செல்லவும் அவன் அனுமதி பெற்றுக்கொண்டான்.

சீரியா நாட்டு அரசன் - நாகமானின் எஜமான் - ரிம்மோன் கோவிலுக்குள் செல்லும்போது அவனுக்குக் கைலாகு கொடுத்து அக் கோவிலில் பணிய வேண்டியுள்ள தன் அலுவலகப் பொறுப்பைப் பற்றிய விவரத்தைத் தெரிவிக்கிறான். இது இப்பொழுது அவன் பற்றிக் கொண்ட புதிய விசுவாசத்திற்கு ஏற்றதல்ல. தேவ ஊழியனோ சமாதானத்துடன் செல்லும்படி கட்டளை கொடுத்தான். நாகமான்

ஜீவனுள்ள தேவன்மேல் தன் நம்பிக்கையை ஏற்கனவே பதிய வைத்துள்ள நிலையில், அவன் விசுவாசத்தால் நீதிமானாக்கப் பட்டுள்ளான் என நாம் தீர்க்க முடியும்.

ஆசாரியனுடைய கீழ்தொங்கலைப் பற்றிய விவரம் இவ்வொரு இடத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. நமது மகா பிரதான ஆசாரியராக உள்ள இயேசு கிறிஸ்துவினுடைய ஆடையின் தொங் கலைத் தொட்ட அனைவரும் சுகம் பெற்றனர் (மத். 9:21; 14:36). அத் தகையத் தொடுதல் அவர்மேல் தாங்கள் கொண்ட விசுவாசத்திற்கு ஒரு அடையாளமாக விளங்கியது. ஆகையால் ஆசாரியனது அங்கி யின் தொங்கலும், அதிலுள்ள மாதுளையும் விசுவாசத்தினால் ஒருவன் நீதிமானாக்கப்படுவதுடன் தொடர்புபடுத்தக் கூடியதாகும்.

திருவாளர் சி. எச். ரேவன் கொடுத்துள்ள இந்த விளக்கம், சற்று முயற்சி செய்து, எட்டிப் பிடிக்கத்தக்கதாக இருப்பினும், இது நம் சிந்தனையைத் தூண்டிவிடுகிறது.

***(ஆ) பொன் மணிகள்:*** ஆசாரியன் நடக்கும்போது பொன் மணி கள் எழுப்பும் இனிய மெல்லிய சத்தம், பேசும் வார்த்தைகளையும், சாட்சியையும் குறிப்பனவையாம். மகா பிரதான ஆசாரியராகிய நமது ஆண்டவரின் சொல்லும், செயலும், நடையும் எப்பொழுதும் சிறந்து விளங்கினது மட்டுமின்றி, அவை முதலிலிருந்து இறுதிவரை எப்பொழுதும் ஒன்று போலவே சிறப்புற்றுச் சீராக விளங்கின (மாற்கு 7:37; யோவான் 7:37). அங்கியின் தொங்கலில் உள்ள பொன் மணிகளின் அசைவினால் எழும் ஒலியைப் போன்றே கிறிஸ்துவினு டைய இன்ப சுவிசேஷ தொனியும் உள்ளது. பரம தூய தேவசமுகத் தில் சென்றிருக்கும் நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவே இதற்கு ஆரம்ப கர்த்தராயிருக்கிறார். "உங்களிடத்தி லிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயா விலும் தொனித்தது" (1 தெச. 1:8) என்று பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கேயா சபையாரின் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தைப் பாராட்டிப் பேசினார். நம்முடைய சுவிசேஷ அறிவிப்பு ஊழியம் உலக மக்களிடையே இன்னிசையை எழுப்பி வருகிறதா?

மற்றும், ஆரோன் ஆராதனை செய்யக் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்த இடத்தில் சேர்ந்தபோதும், வெளியே வரும்போதும் சாகாத படிக்கு அதின் பொன்மணியின் சத்தம் கேட்கும்படி அவன் அணிந் திருக்க வேண்டும் (யாத். 28:35). இந்த பொன் மணிகள் ஆரோனு டைய பலியும், ஆராதனையும் தூய தேவனால் ஏற்றுக்கொள்ளப்

பட்டுள்ளதை அறிவிக்கும் இன்னிசையாக உள்ளன. ஆம்! விசுவாச மக்களாகிய நமக்கும் இவ்வோசை எவ்வளவு ஆத்தும நிச்சயத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவருகிறது. நீதியுள்ள தேவ சமுகத்திற்குச் செல்ல தூய தேவனால் அங்கிகரிக்கப்பட்ட கிறிஸ்துவின் பலி மரணத்திற்காக நாம் தேவனை உயர்த்தித் துதிப்போமாக.

***(இ) அபிஷேக தைலம்:*** மணி, மாதளம்பழம் இவைகளைத் தவிர, அங்கியின் ஓரத்தில் மற்றவர் காணாததும் கேட்காததுமான வேறொன்று இருந்தது. அது பரிசுத்த அபிஷேக தைலம். "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கு ஒப்பாயிருக்கிறது" *(சங். 133:1,2)*. இப்படியாக ஏபோத்தின் ஓரத்தில் மூன்று விலையேறப்பெற்ற பொருட்கள் இருந்தன. அதில் காணக்கூடிய மாதளம் பழம் - கண்ணுக்கு விருந்து, கேட்கக்கூடிய பொன் மணிகள் - செவிக்கு இன்பம், விலையேறப் பெற்ற தைலம் - நுகர்வதற்கு சுகந்த வாசனை.

கிறிஸ்துவின் திருச்சபையில் உள்ள விசுவாச சகோதரருக்குள்ளே எப்பொழுதும் காணவேண்டிய ஐக்கியத்துக்குப் பரிசுத்த அபிஷேக தைலத்தின் மதுரமான வாசனை ஓர் எடுத்துக்காட்டு ஆகும் *(சங். 133:1, 2)*.

பிரதான ஆசாரியன் ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள யெகோவாவின் பிரசன்னத்தில் செல்லும்போது, பொன்மணிகளின் சத்தம் கேட்கும் *(யாத். 28:35)*. நம்முடைய மகா பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச்சென்று, தேவனுடைய வலது பாரிசத்திலே அமர்ந்தார். அப்போஸ்தலர் *1:9-11* -இல் அவர் பரத்துக்கு ஏறின விவரம் கூறப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கியவுடனே ஆவியின் விலையேறப்பெற்ற கனி, அவரைப் பின்பற்றுகிறவர்களின் ஜீவியத்தில் காணப்பட்டது *(அப். 2:4-22)*. இச்சுவிசேஷத் தொனி, பொன் மணிகளின் ஓசைபோல தொனித்தது *(அப். 2:8, 14, 41)*. சகோதரர் ஒருமித்து வாழும் மதுரமான நற்கந்தம் சபை கூடும் இடங்களில் பரிமளம் வீசியது *(அப். 2:44, 46)*. நம்முடைய சபைகளின் சாட்சி, சூழ இருப்போர் நுகர்ந்து இன்புறத்தக்கதாயுள்ளதா?

நிலைத்திராத, நெகிழும் தன்மையுடைய, கடந்து போகிறதான மூன்று அடையாளங்கள் பெந்தெகோஸ்தே நாளில் காணப்பட்டன.

அவையாவன: பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் (அப். 2:2), அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் (அப். 2:3). கூடியிருந்த 14 நாடுகளில் வசிக்கும் யூத மக்கள் வெவ்வேறு மொழியினராகிய தேவனுடைய மகத்துவத்தைக் கேட்கும்படி அந்நிய மொழிகளில் பேசினது (அப். 2:4). மேலே கூறப்பட்ட இந்த அடையாளங்கள் நிகழ்ந்த உடனே மறைந்துவிட்டன. அவை திரும்பக் காணப்படவில்லை. ஆயினும் ஆவியின் கனி, அதாவது ஆவியின் வல்லமையில் பிரசங்கித்தலும், விசுவாசிகளின் மத்தியில் ஆவியின் ஒருமைப்பாடும் திருச்சபையின் காலகட்டம் முழுவதும் நிரந்தரமாய் நிலைத்திருப்பவைகளாகும்.

திருச்சபையின் சபாநாயகரும், மகா பிரதான ஆசாரியருமான அவர், இப்பொழுதும் பரலோகத்தின் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து கொண்டு, பூமியிலுள்ள தமது விசுவாச இறை மக்களின் மூலமாய் தம்முடைய கிரியைகளையும், பிரசங்கத்தையும் தொடர்ந்து நடத்தி வருகிறார். கிறிஸ்துவின் திருச்சபையை அவருடைய அங்கியின் தொங்கலின் ஓரத்திற்கு ஒப்பிடலாம். இயேசுவானவர் இந்த உலகத்திலிருந்த காலத்தில், நோயாளிகள் அவருடைய ஆடையின் ஓரத்தைத் தொட்டுச் சுகமடைந்தனர் (மத். 9:20-22; 14:34-36). இன்று பாவப் பிணியினால் வருந்தி, ஆத்தும சுகத்தை வாஞ்சிக்கும் அநேகர், அவருடைய ஆடையின் ஓரத்தைத் தொட விரும்புகின்றனர். ஆனால் பரிதாபம்! அவர்கள் விசுவாச கிறிஸ்தவர்களாகிய நம்மில் ஆவியின் கனியைக் காணாததினாலும், சுவிசேஷ மணிகளின் ஒலி தொனிக்காததினாலும், ஆவியின் ஒருமைப்பாட்டின் வாசனை நம்மில் மணக்காததினாலும், அவர்கள் உலக இரட்சகரை நம் மூலமாய்த் தொடமுடியவில்லை. அவருடைய உயரிய பண்பும் தேடுகிறவர்களுக்கு எட்டுகிறதில்லை. கனி கொடுப்பதிலும், சுவிசேஷ சாட்சி பகர்வதிலும், ஆவியின் ஒருமைப்பாட்டைக் காட்டுவதிலும் நாம் ஏன் இவ்வளவு குறையுள்ளவர்களாய் பயனற்று இருக்க வேண்டும்?

பரலோகத்தில் இன்று தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேன்மையையும், மகத்துவத்தையும், அவர் பாவமக்களின் பேரில் வைத்திருக்கும் அன்பையும், கிருபையையும் அறிந்துகொள்ளும் வண்ணமாக நம் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையையும், சபையின் சாட்சியையும் கருத்தாய்க் காத்துக்கொள்வோமாக.

சென்னை பிராட்வே (Broadway) கிறிஸ்தவ சபையில் ஐக்கியமாக இருந்த, காலஞ்சென்ற சகோதரர் திரு. அ. கல்யாணசுந்தரம் இயற்றியுள்ள கீழ்க்கண்ட கவிகள், மேற்கூறிய இறைக்கருத்துக்களை மிக அழகுற படம் பிடித்துக் காட்டுகின்றன.

## பொன் மணிகளும் மாதுளைக் கனிகளும்

1. கர்த்தரின் திருநய நாமம் விளங்கும்,
பரிசுத்த வாசஸ்தல மதிலே,
ரத்தினம் மிளிரும் ஏபோத்தை, மார்பினில்
தரித்தவன் ஆசாரியனவனே!
அங்கியின் தொங்கலில் பொன்மணி தொங்கும்
அடுக்காக மாதுளைக் கனிகளோடே,
பரிசுத்த ஸ்தலத்தில் அவன் சேரும் வேளையில்
பாங்காய் தொனிக்கும் இசைஇனிதே!
*இசைக்கும் ஒரு பொன்மணி, அசைக்கும் ஒரு மாதுளை,*
*ஒலிக்கும் அப்பொன்மணி, அடுத்தொரு மாதுளையே!*

2. பரிசுத்த வாசஸ்தலமு முண்டு - இன்றும்
பலியதின் பீடமும் அதிலே உண்டு,
பரிசுத்த ஆசாரியக் கூட்டம் உண்டு - என்றும்
கர்த்தரின் வழிமுறை இன்றும் உண்டு;
அத்து மீறுதல் அங்கு இருந்தால் - அது
கர்த்தரின் வாசஸ்தலமாகுமோ?
கர்த்தரின் நியதி வழிமுறை அதனுடன்
கூட்டினும் கழிப்பினும் முறையாகுமோ?
*மாதுளை அங்கில்லை, ஆயின் மணியின் இசை உண்டு,*
*இசைக்கும் மணிஓசை, மணி ஓசையே உண்டு!*

3. பாவ அறிக்கை செய்து பணிந்தால் நம்
ஜீவன் தேவனில் இணைந்து நிற்கும்,
பாவ சிந்தனை விட்டொழித்தால் உள்ளம்
ஆவியின் கனிகளால் நிறைந்துவிடும்.
தாபமாய் கர்த்தரின் கிருபையைப் பற்றினால்
மேவிய மெல்லிசை இசைந்து விடும்-
தூய ஆசாரிய ஆடையின் தொங்கலும்
நேயமாய் நேர்த்தியாய் இலங்கிடுமே!
*இசைக்கும் ஒரு பொன்மணி, அசைக்கும் ஒரு மாதுளை,*
*ஒலிக்கும் அப்பொன்மணி, அடுத்தொரு மாதுளையே!*

# 7

# ஏபோத்தும் தோள்பட்டை கோமேதகக் கற்களும்

*(வேதபகுதி: யாத். 28:5-14; 39:1-3, 6-7)*



**"ஏபோத்"** என்கிற வார்த்தை ஆங்கிலம் அல்லது தமிழ் மற்றும் வேறு எந்த மொழியிலும் இல்லாத, ஒரு வார்த்தை; அது ஓர் எபிரெயச் சொல். இவ்வார்த்தையின் பொருள் நமக்குப் புலப்படவில்லை. ஆரோனின் குமாரர்களான ஆசாரியர்கள் இந்த ஆச்சரியமான பற்பல வர்ணமுள்ள ஆடையை ஒருபோதும் அணிந்ததில்லை. இது பிரதான ஆசாரியனுக்கே உரியது.

## சிறப்பான அலங்கார ஏபோத்

இந்த ஏபோத் மேலிருந்து கீழாக கவர்ச்சியாக நெய்யப்பட்டிருந்தது. இது மிகவும் அழகான முறையில், அலங்காரத்துடன் நெய்யப்பட்டதாகும். இந்த ஆடை, அந்தஸ்து, பதவி, உத்தியோகம், பண்பு ஆகியவற்றிற்கு அடையாளமாயிருக்கிறது (யோபு 29:14, ஏசாயா 59:17, 61: 10). விரிவான வானத்தின் வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் இந்த மேலாடை, மகா பிரதான ஆசாரியருடைய தெய்வீகத்தை எடுத்துரைக்கிறது. அது பிரதான ஆசாரியனுக்கு மாத்திரமே உரியதாகும்.

"ஏபோத்" என்கிற சொல் வேத புத்தகத்தில் இரண்டு வகையான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். சாமுவேல் தன் இளவயதிலும் சாதாரண ஆசாரியரும் சில வேளைகளில் பஞ்சு நூலால் செய்த ஏபோத்தை அணிந்திருந்தனர் (1 சாமு. 2:18; 22:18). இந்த ஏபோத் பிரதான ஆசாரியன் அணிந்த ஏபோத் போன்றதல்ல, அவை சாதாரணமானவை. அவைகளில் பல வர்ணங்களில்லை; பொன் நூல் இழை இல்லை, விலையுயர்ந்த கற்கள் அதில் பதிக்கப்படவில்லை, விசித்திரமான

கச்சையும் அதற்கு இல்லை. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து தாவீது கொண்டு வந்தபோது, சணல் நூலினால் நெய்யப்பட்ட ஓர் ஏபோத்தை அணிந்து கொண்டான் (2 சாமு. 6:13, 14). இந்த ஏபோத் பிரதான ஆசாரியன் அணிந்ததற்கு ஒப்பான அலங்காரமில்லாதிருந்தது.

கனத்தையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தும் இந்த அழகிய, கவர்ச்சிமிக்க ஏபோத் ஒப்பற்ற ஆடையாக இருந்ததினால், காலப் போக்கில் இதற்கு சில போலியானவைகளும் இஸ்ரவேலர் மத்தியில் எழுந்து, விக்கிரக ஆராதனையை உருவாக்கும் நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை நியாயாதிபதிகள் 17:5; 18:14 போன்ற வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. கிதியோனும் கூட இவ்வலையில் சிக்கிக் கொண்டான். இது பின்னர் இஸ்ரவேல் மக்கள் விக்கிரக ஆராதனையில் விழக் காரணமாயிற்று (நியா. 8:24-27). இவ்வாறே இன்றும், பல கள்ள கிறிஸ்துக்கள் எழுந்து, அநேகரை வஞ்சித்து மக்களைத் தங்கள் வலைக்குள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நியாயாதிபதிகள் 8 - ஆம் அதிகாரத்தில் எழுதியிருப்பதுபோல, எவ்வாறு இஸ்ரவேலரெல்லாரும் "அதைப்பின்பற்றிச் சோரம்" (வச. 27) போனார்களோ, அவ்வாறே இன்றைய கிறிஸ்தவ உலகில் இவ்வாறு சோரம் போனவர்கள் ஏராளம் ஏராளம். நாம் விழிப்புடனிருந்து, "இயேசுவின்" பெயரில் எழும் கள்ளப்போதகர்களுக்கு விலகிக்கொள்வோமாக.

இன்று கத்தோலிக்கத்திருச்சபையின் போப்பும், பற்பல பாரம்பரிய கிறித்தவ சபைகளின் பிஷப்மார்களும், வேறு சில குழுக்களின் தலைவர்களும் அணிந்துவரும் பலவர்ண அலங்கார ஆடைகள் எல்லாம், இந்தப் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண முறைமையின் மறு உருவங்களாகவே உள்ளன. புதிய ஏற்பாட்டில் இவைகளுக்கு எவ்வித ஆதாரமுமில்லை.

பிரதான ஆசாரியன் அணிந்த ஏபோத் மிகவும் சிறப்பானது, அது பிரதான ஆசாரியன் மட்டுமே அணியக்கூடிய பிரத்தியேகமான உடை. இந்த ஏபோத் இரத்தாம்பரம், சிவப்பு நூல், திரித்த பஞ்சு நூல் ஆகியவற்றால் விசித்திர பூ வேலையுடன் நெய்யப்பட்டு, அதனிடையே பொன் இழைகள் ஓடிப் பிரகாசித்தன. இதில் பொன் இழைகள் இல்லையேல், ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள திரைகள், வாசல்களுக்கு ஒப்பானதாக இருந்திருக்கும். இதன் வர்ணங்கள் எல்லாம் நமது மகா பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவை சுட்டிக் காட்டுபவையாகும். தற்காலத்தில் இஸ்ரவேலுக்கு ஒரு பிரதான ஆசாரியன் இல்லை, ஏபோத்தும் இல்லை; இவ்வாறு ஓசியா 3:4 -

இல் முன்னுரைத்தது நிறைவேறியுள்ளது. ஆனால் தேவனுடைய உன்னதமான மக்கள், இந்தக் கிருபையின் காலத்தில் "எங்களுக்கு ஒரு மகா பிரதான ஆசாரியர் இருக்கிறார்" என்று அறிக்கையிட்டு, ஆவிக்குரிய நற்பயனை அடைய முடியும் (எபி. *4:14*).

ஏபோத் இரண்டு பாகங்களாயிருந்தன எனலாம்; ஒரு பாகம் பிரதான ஆசாரியனுடைய முதுகையும், மற்றொரு பாகம் மார்பையும் மூடியிருந்தன. இவ்விரு பாகங்களும் தோள்பட்டையில் சேர்க்கப் பட்டிருந்தன. இவ்வாறு சேர்த்து வைத்திருப்பது, தையல் வேலை யாயிராது இருபாகமும் ஒரே நெசவாக இருந்திருக்க வேண்டும் என்பது சில வேத பண்டிதர்களின் கருத்து. அவை ஏபோத்தின் வேலை களுக்கு ஒப்பாகவே நெய்யப்பட்ட விசித்திரமான ஒரு கச்சையினால், பிரதான ஆசாரியனுடைய இடுப்பில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் (*யாத். 28:8; 39:4*). இந்த கச்சை *28:39*- ஆம் வசனத்தில் கூறியிருக்கும் இடைக்கச்சையில் இருந்து வேறுபட்டது. இந்த ஏபோத் ஆடையின் நீளம் இன்னதென்று எங்கும் கூறப்படவில்லை. அது இடுப்பு வரை இருந்திருக்க வேண்டும் என்று ஊகிப்பது சரியானதாக இருக்கும். ஏபோத்தின் இரு பாகங்களும் தோள்களின் மேல் சேர்க்கப்படுகிற இடத்தில் இரண்டு கோமேதக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

## கோமேதகக் கற்கள்

இந்த கோமேதகக் கற்களைப் பற்றி ஆதியாகமம் இரண்டாம் அதிகாரத்தில் ஆவிலா நாட்டைப் பற்றிய விவரணையில் முதல்முத லில் காண்கிறோம் (ஆதி. *2:11, 12*). யோபு தன் நண்பர்களிடம் மெய் யான ஞானத்தைப்பற்றி விவரித்து பேசுகையில், "ஓப்பிரின் தங்க மும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல" (யோபு. *28:16*) என்கிறான். தீருவின் அதிபதியாகிய அரசனை, எசேக்கியேல் தீர்க்கதரிசி விவரித்துக் கூறுகையில், அவன் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன் எனச்சொல்லி, கோமேதகம் உள்பட பல விலையுயர்ந்த கற்களால் அவன் அலங் கரிக்கப்பட்டிருந்தான் எனக் கூறுகிறான் (எசே. *28:13*). ஆகையால் இக்கல் மிகவும் விலை மதிப்புள்ளதும், அழகானதும், சிறப்புமானது எனப் புலனாகிறது. ஒவ்வொரு கல்லிலும் யூத கோத்திரங்களின் ஆறு பெயர்கள் பொறிக்க வேண்டியிருந்ததினாலே, அவை அள விலும் பெரியதாகவே இருந்திருக்க வேண்டும்.

## முற்பிதாக்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கோமேதகக் கற்கள்

இந்த விலைமதிப்புள்ள கோமேதக் கற்களில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள், அவர்கள் பிறந்த வரிசையின்படியே வெட்டி பதிய வைக்கவேண்டும் (யாத். 28:9,10). எபிரெய மொழி, நம்முடைய மொழிகளைப்போல் இடமிருந்து வலம் அல்ல, வலமிருந்து இடம் எழுதப்படும் மொழியாகும். இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள் கோமேதகக்கற்களில் கீழ்க்கண்டவாறு வெட்டப்பட்டிருக்க வேண்டும்:

**வலதுபுற கல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நப்தலி | தாண் | யூதா | லேவி | சிமியோன் | ரூபன் |

**இடதுபுற கல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பென்யமீன் | யோசேப்பு | செபுலோன் | இசக்கார் | ஆசேர் | காத் |

இப்பெயர்கள் இஸ்ரவேலின் முற்பிதாக்கள் பிறந்த வரிசைப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு கற்களும் பொன் வளையங்களில், பின்னல் வேலையான இரண்டு சங்கிலிகளில் பூட்டப்பட வேண்டும் (யாத். 28:13, 14). நாம் இந்த விவரத்தை தெளிவாகப் புரிந்து கொள்வதற்குக் கடினமாயிருப்பினும், இதன் கருத்து 12 -ஆம் வசனத்தில் கூறியிருப்பது போல் "ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தன் இரண்டு தோள்களின் மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக் குறியாகச் சுமக்க வேண்டும்" என்பதே முக்கியமாகும்.

இந்த இரண்டு கோமேதகக் கற்களும் ஒன்று போலவே இருந்தன. இரண்டும் ஒரே மதிப்புடையதாக இருந்தன. அதில் பொறிக்கப்பட்டிருந்த கோத்திரப் பிதாக்களின் பெயர்கள், அவர்கள் பிறந்த வரிசையின்படியே இருந்தன. நாம் அனைவரும் பிறப்பின்படியும், மறுபடியும் பிறந்த வகையிலும் தேவனுக்கு முன்னதாக சமமாகவே இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவில் வைத்த விசுவாசத்தின் அடிப்படையில் நாம் தேவ பிள்ளைகள் ஆக்கப்பட்டிருக்கிறோம் (கலா. 3:26).

இஸ்ரவேல் புத்திரர் பிறந்தபோது நன்மையான குணமோ, தீமையான குணமோ அவர்களிடத்தில் காணப்படவில்லை. அவர்களிடத்தில் புகழ்ச்சியான அல்லது இகழ்ச்சியான செய்கைகளும் வெளிப்படவில்லை. அனைவரும் உயர்வு தாழ்வு இன்றி

ஒன்றுபோலவேயிருந்தனர். பட்சபாதமின்றி நம்முடைய மகா பிரதான ஆசாரியர் தம்முடைய மக்கள் அனைவரையும் தம்முடைய வல்லமையினால் தாங்குகிறார் (யாத். 28:28,29). பிதாவின் சமுகத்தில் "இதோ, நானும் தேவன் எனக்குத் தந்தவர்களும்" என்று அவர் கூறுவதினாலே "சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2:18). அவர் "விழாதபடி (இடறாதபடி) காக்க வல்லவராயிருக்கிறார்" (யூதா 24; லேவி. 8:7).

***இரண்டு கோமேதகக் கற்களின் நிறம்:*** கோமேதகக் கல்லின் நிறம் நம்முடைய விரல்களின் நகத்தைப் போன்ற நிறமென்று வைர வியாபாரிகள் கூறுகின்றனர். ஒவ்வொரு தோளின் மேலும் ஒரு கோமேதகக் கல் இருந்தது. அதன் நிறத்திலிருந்து நாம் ஒரு ஆழ்ந்த சத்தியத்தை அறிந்துகொள்ளலாம். இவ்வுலகத்தில் எல்லா கண்டங்களில் வாழும் கருப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறமுடைய மக்களாயினும், எந்த இனம், மொழி மக்களாயினும் அவர்கள் அனைவருடைய விரல் நகத்தின் நிறம் ஒன்றுதான், இதில் வித்தியாசமே இல்லை. தமது இரத்தத்தினால் மீட்கப்பட்ட தம்முடைய மக்களை அவர்கள் எந்த நிறம், இனம், மொழியுடையவராயினும், நமது பிரதான ஆசாரியர் ஒன்றுபோலவே பாவிக்கிறார் என்பதைத் தோளில் அணிந்திருக்கும் கோமேதகக் கற்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

## தோளின்மேல் சுமக்கப்பட்ட கோமேதகக் கற்கள்:

மனிதனுடைய பலம் அவன் தோளிலிருக்கிறது (லூக்கா 15:5). கூலியாட்கள் கனமான மூட்டைகளைத் தங்கள் தோளில் தூக்கிச் சுமக்கிறார்கள். இங்கு இது கிறிஸ்து தமது பிள்ளைகளுக்காகக் கொண்டிருக்கும் சர்வ வல்லமையைக் குறித்துக் காட்டுகிறது. நாம், "தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறோம்" (1 பேதுரு 1:5). இயேசு கிறிஸ்து இராஜாதி இராஜாவாக இந்த உலகத்தை அரசாளுவார் என்று அநேக வேத வசனங்கள் கூறுகின்றன. ஒரு குமாரன் கொடுக்கப்படுவார் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தபோது (ஏசாயா 9:6), "கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும்" என்று விளம்பினான். ஒருமைச் சொல்லாகிய தோளின்மேல் இவ்வுலக ஆட்சியின் பாரத்தைக் கர்த்தர் இயேசு சுமந்து வகிப்பார் என்று காண்கிறோம். இது ஆச்சரியமே! ஆனால் காணாமற் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடித்தபோது, அந்த ஆட்டின் மேய்ப்பன் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு வீடு திரும்பினான் என்று பன்மைச் சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 15:5). தம்முடைய படைப்புகள் அனைத்தையும் ஆளுவது சுலபம். அதற்கு

அவருடைய ஒரு தோள் போதுமானது. ஆனால் ஒரு பாவியை இரட்சிக்க எவ்வளவு அதிகமான பாடுகளையும் வேதனைகளையும் அவர் சகிக்க வேண்டியிருந்தது! இதற்காக அவர் தமது இரு தோள்களையும் உபயோகித்துத் தம்முடையவர்களைத் தாங்க வேண்டியிருக்கிறது பாருங்கள்! இதற்காக நாம் மனதார தேவனைத் துதிப்போமாக!

இஸ்ரவேல் கோத்திரப் பிதாக்கள் அவர்கள் பிறந்த வரிசையின்படியே சிறப்பான இடத்தைப் பெறுகிறார்கள். இதுவே பிரதான ஆசாரியன் தன் தோள்களின்மேல் (பன்மை) அவர்களைத் தாங்கிக் கொள்ளும் தகுதியைத் தந்தது. இவ்வாறே நாம் கிறிஸ்துவின் சுவிசேஷ செய்தியைக் கேட்டு மறுபிறப்படைந்ததின் விளைவாக, இப்பொழுது மகா பிரதான ஆசாரியர் தம் தோளின்மேல் தேவ சன்னதிக்கு நம்மை எடுத்துச் செல்லத்தக்க தகுதியைத் தந்துள்ளது.

பண்டை பாபிலோனியரும், நம் இந்திய நாட்டிலுள்ள ஏனைய மதப் பற்றுடையோரும் செய்யும் வழக்கத்திற்கு இது எவ்வளவு வேறுபட்டிருக்கிறது! அவர்கள் தங்கள் தெய்வங்களைத் "தோளின் மேல் எடுத்து, அதைச் சுமந்து, அதை அதின் இடத்திலே வைக்கிறார்கள்" (ஏசாயா 46:7). கர்த்தருடைய பெட்டிக்கு முன்னதாக பெலிஸ்தரின் கடவுளாகிய தாகோன் "தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது! அப்பொழுது அந்த அஸ்தோத் ஊரார் அதை எடுத்துத் தூக்கி, அதன் இடத்தில் திரும்ப நிறுத்தி வைத்தார்கள்" (1 சாமு. 5:3). இத்தெய்வங்களின் பரிதாபமான நிலையைப் பாருங்கள்! ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்குக் கிடைத்திருக்கும் உன்னத தகுதி எவ்வளவு சிறந்து விளங்குகிறது. அது மட்டுமல்ல, நாம் தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, நமது பெயர்கள் ஜீவநூலில் எழுதப்பட்டிருப்பது மட்டுமின்றி, நம்முடைய வாழ்க்கையின் விவரங்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அவருடைய ஆளுகையிலும், பராமரிப்பிலும் இருக்கின்றன. அவர் நம்மை ஒருபோதும் மறந்துவிடுவதில்லை. அவர் நம்மைத் தம் உள்ளங்கைகளில் வரைந்து (ஏசா. 49:16) கண்மணியைப் போல் காக்கிறார் (சகரியா 2:8). உடன் விசுவாசியே, திடன்கொள்வீராக! அவர் உம்மைத் தமது தோளின்மேல் சுமந்துகொண்டிருக்கிறார்.

## ஏபோத்தின் அமைப்பிலுள்ள இரு பொருட்கள்

### 1. பஞ்சு நூலும், பொன் இழைகளும்

*அது இரு பொருட்களால் செய்யப்பட்டது. பொன் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட செல்வம். நூல் - சணல் நாரிலிருந்து எடுக்கப்படுகிற பொருள். பூமியில் விழுந்து, செத்துப் பின்பு முளைத்து எழுகிறதே சணல். இவ்விரு பொருட்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், உயிர்த் தெழுதலுக்கும் ஒப்பாக அமைந்துள்ளன எனக்கூறலாம். பொன் அவருடைய தெய்வீகத்தைக் குறிக்கும். சணல் நூல் அவருடைய நீதியையும், குறைவற்ற தாழ்மையையும் அடையாளப்படுத்துகின்றது. பசும்பொன்னிலிருந்து எடுக்கப்பட்ட மெல்லிய பொற்கம்பிகளாகிய நூல் இழைகள் எடுக்கப்பட்டு அதனுடன் நீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல் இவைகளையும் சேர்த்து மெல்லிய துணியாக நெய்யப்படுகின்றன (யாத். 39:3). இவ்வாறு பொன் நூலையும், பஞ்சு நூலையும் சேர்த்து நெய்த ஏபோத், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் முழுமையான மனிதத் தன்மையும், முழுமையான தெய்வீகத் தன்மையும் ஒருங்கே உடையவராயிருப்பதை வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் இவ்விரு பண்புகளையும் ஒரு போதும் பிரிக்க முடியாது. அவர் "தேவ குமாரனாகிய இயேசு" (எபி. 4:14). ("ஆரோனுடைய ஆடையின் மேன்மை" என்ற பகுதியைக் காண்க. பக்கம் 18)*

### 2. இதன் மூன்று நிறங்கள்

*அ. நீல நிறம். நாம் முன்னர் பார்த்தபடி உன்னதமானவைகளை அல்லது பரத்துக்குரியவைகளைக் குறிக்கும். நம்முடைய மகா பிரதான ஆசாரியர் பரலோக மனிதர்; இவர் தூய இடத்தில் வாசம் செய்பவர்.*

*ஆ. இரத்தாம்பர நிறம். புற இனத்தவருடைய மகிமையையும், அதனுடன் நமது ஆண்டவர் அவர்களுடைய கையில் பாடு அனுபவித்ததையும் இரத்தாம்பரம் குறிக்கும் (நியா. 8:26; தானி. 5:29; லூக்கா 16:19). ரோம போர்ச் சேவகர்கள் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள், அவருடைய வஸ்திரத்தைக் கழற்றினார்கள். அவருக்கு (இரத்தாம்பர) சிவப்பு அங்கியை உடுத்தினார்கள். அவருக்கு முள்முடி சூட்டினார்கள். "யூதருடைய இராஜாவே வாழ்க!" என்று அவரைப் பரியாசம் செய்தார்கள் (மாற்கு 15:17-20; யோவான் 19:23). இரத்தாம்பர சிவப்பு அங்கி உலக மக்களுக்குப் பெரிய கனம், சிறந்த*

ஆடம்பரம். ஆனால் அதே (இரத்தாம்பர) சிவப்பு அங்கியை ரோம போர்ச் சேவகர்கள் நமது ஆண்டவருக்கு அவமானத்தையும் பரி காசத்தையும், நிந்தையையும் வருவிக்க உபயோகித்தனர், என்ன அகோரம்!


இ. சிவப்பு நிறம். இதைக் குறித்து இருவிதமாகப் பொருள் கூறு வதுண்டு. அது கிறிஸ்து மரித்தபோது அவர் சிந்தின இரத்தத்தைக் குறிக்கும் என்று சிலர் கூறுவர், "சிலுவையில் சிந்திய இரத்தம்". வேறு சிலர் "யூதருடைய இராஜாவாக" உள்ள கிறிஸ்துவுக்குரிய இராஜரீக மகிமையைக் குறிக்கும் என்பர். சிவப்பு நிற அங்கி யூதர் களுடைய மகிமைக்கும் ஆடம்பரத்துக்கும் அடையாளம் என்பதை *2 சாமுவேல் 1:24* - ஆம் வசனம் எடுத்துக் கூறுகிறது. யூதர்களுக்காக எழுதப்பட்ட மத்தேயு சுவிசேஷத்தில் உரோம போர்ச்சேவகர்கள் "சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப்பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து; அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: 'யூதருடைய இராஜாவே வாழ்க' என்று அவரைப் பரிகாசம் பண்ணினார்கள்" என்ற விவரம் கூறப்பட்டுள்ளதைக் காணலாம் *(மத். 27:28, 29)*.

நீலத்தையும் சிவப்பையும் சேர்க்கையில் இரத்தாம்பர நிற மாகிறது. வரப்போகிற நாளில் நம்முடைய மகா பிரதான ஆசாரி யர், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இராஜாதி இராஜாவாக இருப்பார் *(பிலி. 2:9-11)*. அப்பொழுது நம்முடைய கர்த்தராகிய இயேசு மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; மற்றும் அவர் தம் சிங்காசனத் தின்மேல் ஆசாரியராயிருப்பார் *(சக. 6:13)*. அவ்வாறே பரிசுத்த விசு வாசிகள் இராஜாக்களும் ஆசாரியருமாகத் திகழ்ந்து தங்கள் ஆசாரிய ஊழியத்தின் மூலம் தேவனைச் சேவிக்கின்றனர்.

# 8

# இரு இடைக் கச்சைகள்

*(வேதபகுதி: யாத். 28:8,39 ; லேவி. 8:7)*



**பிரதான ஆசாரியனின்** இடுப்பைச் சுற்றி லும் இரண்டு கச்சைகள் இருந்தன. அதில் ஒன்று மெல்லிய பஞ்சு நூலால் ஆனது. மற்றொன்று சித்திரத் தையலாய் நெய்யப்பட்ட ஏபோத்தின் கச்சை. கீழ்நாடுகளில் மேல் ஆடையை தூக்கிக் கட்டிக் கொள்வது, பணிவிடைசெய்ய ஆயத்த மாயிருப்பதைக் குறிப்பதாகும். ஊழியத்திற்கு அடையாளமாகத் திகழ்வதே கச்சை (லூக்கா 17:8; ஏசாயா 22:21).

இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனுடைய இரு கச்சைகள், நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து ஆற்றிய இரண்டு ஊழியங்களை முன்னறிவித்தன. முதலாவது, தேவ குமார னாகிய அவர் தமது மகிமையைத் துறந்து, தம்மைத் தாழ்த்தி, மனித சாயலாகி, இந்த உலகத்தில் தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வந்து, செய்து முடித்த ஊழியத்தைக் குறிக்கும். இந்த விவரங்களைச் சுவிசேஷ நூல்களில் நாம் காண்கிறோம். இரண்டாவது, அவர் கல்ல றையை விட்டு எழுந்து, மரணத்தை ஜெயித்தவராய்ப் பரலோகத்துக்கு ஏறிச்சென்று தேவனுடைய சந்நிதியில் நமக்காகப் பரிந்துபேசும் பணிவிடையாகும். அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத் தின விசேஷத்தில், அவர் பரலோகத்தில் ஆசாரிய ஊழியத்தைச் செய்து கொண்டிருப்பதாக எடுத்துக்காட்டுகிறார்.

## (1) மெல்லிய நூலால் செய்யப்பட்ட கச்சை. (யாத். 28:39):

*"ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டார்." (மாற்கு 10:45; லூக்கா 12:37; எபி. 10:4,7 பார்க்க).* யெகோவாவின் பரிபூரண ஊழியரைப் பற்றி யோவான் 13:4, 5 ஆகிய வசனங்களில் குறிப் பிடத்தக்க ஏழு விவரங்கள் உள்ளன.

1. பந்தியை விட்டெழுந்து
2. தன் ஆடைகளைக் கழற்றி வைத்து
3. சீலையை (துண்டை) எடுத்து
4. அரையில் கட்டிக்கொண்டு
5. பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து
6. சீடர்களின் கால்களைக் கழுவி
7. தாம் கட்டியிருந்த துண்டினால் துடைத்தார்

அவருடைய ஊழியத்தைத் திருமறை பல விதங்களில் விவரிக் கிறது. "இதோ என் ஊழியன் (தாசன் - அடிமை)" என்று தேவன் விளம்பியுள்ளார் (ஏசாயா 42:1). அவர் "அடிமையின் (அடிமை ஊழி யனின்) ரூபமெடுத்துக் கொண்டார்" (பிலி. 2:7). "நான் உங்கள் நடு வில் பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்" (லூக்கா 22:27) என்று அவரே அறிவித்துள்ளார்.

## (2) ஏபோத்தின் மேல் இருக்க வேண்டிய விசித்திரமான கச்சை. யாத். 28:8

*"பொற்கச்சை கட்டியிருந்தார்." வெளி. 1:13.*

***அ. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அற்புதமாய் நோயாளிகளைக் குணமாக்கினார்:*** எங்கும் நடந்து சென்று தரித்திரர்களுக்கு நற் செய்தியை அறிவித்தார்; துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித் தார்; சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்; இறைச் சத்தியங்களைப் போதித் தார். அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்துக் கிடந்தவர்களுக்குத் தமது மரணம், உயிர்த்தெழுதல் மூலமாய்ப் புது ஜீவனை அருளினார். இதுவே நமது ஆண்டவர் உலகத்திலிருந்த காலத்தில் செய்த அருமையான ஊழியம். "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைச் கச்சையுமாயிருக்கும்" (ஏசாயா 11:5) என்று தீர்க்கன் ஏசாயா அவரு டைய ஊழியத்தின் மேன்மையை முன்னறிவித்துள்ளான்.

***ஆ. ஏபோத்தின் மேல் இருக்க வேண்டிய விசித்திரமான கச்சை:*** நம்மு டைய மகா பிரதான ஆசாரியரின் ஊழியத்துக்கு (எபி. 7:25; 9:24)

முன்னடையாளம். பரிந்து பேசும் இந்த ஆசாரிய ஊழியத்தைச் செய்ய அவர் தமது அரையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்.

பரிந்து பேசும் ஊழியம் இரு பிரிவாயிருக்கிறது. ஒன்று நாம் பாவஞ்செய்யும்போது நமக்காகப் பரிந்து பேசி, இரட்சிப்பின் மகிழ்ச்சியை நமக்குத் திரும்பக் கொடுப்பது *(1 யோவான் 2:1,2)*. மற்றது, ஏற்ற சமயத்தில் நமக்கு உதவி செய்து, நாம் பாவத்தில் விழாதபடி நமக்காக வேண்டிக்கொள்வது *(எபி. 4:14-16)*.

ஆரோனுடைய குமாரர் யாவருக்கும் ஒரே ஒரு கச்சை தான் இருந்தது *(யாத். 28:40; லேவி. 8:13)*. இன்று தேவனுடைய ஆசாரியர்களாய் விளங்கும் விசுவாசிகளாகிய நாம் ஊழியஞ் செய்யும்படி ஒரே ஒரு ஆயுட்காலம் மட்டுமே உண்டு. எத்தகைய அருமையான ஆசாரிய ஊழியப் பணிக்காக நாம் நம் அரையைக் கட்டிக்கொண்டிருக்கிறோம் என்று கவனித்துச் செயல்படுவோமாக. நமக்குக்கொடுக்கப்பட்ட பணிகள் சில:

*(1) சாட்சி பகரும் வேலை (எரே. 1:17).*

*(2) தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருத்தல் (1 பேதுரு 1:13).*


*(3) கர்த்தர் மீண்டும் திரும்பி வரும்போது அவரை வரவேற்க ஆயத்தமாயிருத்தல் (லூக்கா 12:35-40).*

கிறிஸ்து நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தபடியே நாமும் இங்கும் அங்கும் எங்கும் சென்று, இயன்ற நன்மைகளைச் செய்து, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்திக் காட்டுவோமாக.

# 9

# நியாயவிதி மார்ப்பதக்கம்

*(வேதபகுதி: யாத். 28:15-29; 39:8-21)*



**ஏபோத்தின் கோமேதகக் கற்கள்** ஆசாரியனின் தோளின்மேலும், நியாயவிதி பதக்கம் அவனுடைய இருதயத்தின்மேலும் இருந்தன. தோள் பட்டை வல்லமையையும், மார்பு அன்பின் கரிசனையையும் வெளிப்படுத்துகின்றன. இந்த ஆசாரிய ஊழியம் எவருக்காக எதற்காக நியமிக்கப்பட்டது? அது இஸ்ரவேலருக்காக, அவர்களுடைய நன்மையை நாடியே பல்வேறு ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆரோனிடத்தில் காணப்பட்ட இந்த உருவகச் சித்திரங்கள், மெய்ப் பொருளாக விளங்கும் மகாபிரதான ஆசாரியராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன. கிறிஸ்துவின் சர்வ வல்லமை அண்ட சராசரங்களையெல்லாம் தாங்கி வருகிறது. அந்த வல்லமையே தம் சொந்த இரத்தத்தினால் விலைக்கிரயமாகக் கொண்ட தம் மக்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய வல்லமையை விவரிக்கவும் கூடுமோ? இயேசு கிறிஸ்துவின் அன்பின் உள்ளம் மீட்கப்பட்ட சபையில் உள்ள மிக எளியவர்கள் மேலும் பாய்ந்து ஓடுகிறது. என்னே நம் விண் ஆசாரியரின் கருணை!

***மார்ப்பதக்கம்*** என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தையின் வேர்ச்சொல் "***ஜொலிக்கும்***" என்ற பொருளுடையதாகும். எபிரெய இனஞ் சார்ந்த அராமிய மொழியில், இச்சொல் "***அழகு***" எனப் பொருள்படும். ஆகையால் இந்த மார்ப்பதக்கம் ஆசாரியனின் உடைகளிளெல்லாம் அதிக மதிப்பையும், மேன்மையையும் பெறுவதை உணர்த்துகிறது. இதுவும் ஏபோத்தைப் போன்றே, பொன், நீலம், சிவப்பு, இரத்தாம்பரம், மெல்லிய திரித்த நூல் இவை

களால் ஆனது. ஒரு சாண் நீளமும், அகலமுமுடைய சதுர வடிவில் ஒரு பையைப் போன்று இது மடித்து வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் பிரதான ஆசாரியன் தன் மார்பில் அணியத்தக்க சரியான அளவு உடையதாகும். இது பிரதான ஆசாரியனுடைய ஆடைகளில் மிக முக்கியமானதும், அதிக விலை மதிப்பு உடையதாகவும் இருந்தது. ஏனைய ஆடைகள் அனைத்தும் இதற்கு ஒரு பின்னணியாகவே இருந்தன.

இது இரண்டு பொன் வளையங்களினால் ஏபோத்தின் தோள் துண்டுடனும், அவ்வாறே வேறு இரண்டு பொன் வளையங்களினால் அதன் கீழ்ப்புறம் இளநீல நாடாவினால் ஏபோத்தின் வளையங்களுடன் கட்டி, பத்திரமாக விழாதபடி வைக்கப்பட்டிருந்தது (*யாத். 28:22-28*). இதன்மேல் இரத்தினக் கற்கள் நான்கு வரிசைகளில், வரிசைக்கு மூன்று மூன்றாக, அந்த அந்த பத்தியில் பொன்னினாலே பதித்து வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கல்லிலும் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்கள் வெட்டப்பட்டிருந்தன. இக்கோத்திரங்கள் ஆசரிப்பு கூடாரத்தைச் சுற்றிலும் முகாமிட்டிருந்த வரிசை ஒழுங்கின் படியே இது இருந்திருக்க வேண்டும். இந்த வரிசையின்படியே தான் அவர்கள் பாலைவனப் பிரயாணத்தில், நான்கு நான்கு வகுப்பாக முன்செல்லும் கோத்திரக் கொடியைப் பிடித்துக்கொண்டு பயணப்பட்டனர். இந்த நான்கு வகுப்பையும் வழிநடத்தினவர்கள் யூதா, ரூபன், எப்பிராயீம், தாண் கோத்திரத்தாவார்கள் (*எண். 2, 10 அதிகாரங்களைக் காண்க*).

> "ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைத் தன் இருதயத்தின் மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலே கர்த்தருடைய சந்நிதானத்தில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ளக்கடவன்" (யாத். 28:29).

"தன் இருதயத்தின் மேலிருக்கும்" என்ற இந்தச் சொற்றொடர், ஆசாரியனுடைய மதிக்கவியலாத பரிசுத்த உத்திர வாதத்தை உணர்த்திக்காட்டுகிறது. ஆரோனின் குமாரராகிய நாதாப், அபியு ஆகியோரின் துக்கமான முடிவை நோக்கிப் பார்க்கையில் (*லேவி. 10:1, 2*) இதன் புனிதத் தன்மை விளங்கும்.

## மார்ப்பதக்கத்தின் இரத்தினக் கற்கள்

> "இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் அவைகளில் வெட்டப்பட்டவைகளுமாய் இருக்க வேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்

களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரை வெட்டாய் வெட்டியிருக்கவேண்டும்" (யாத். 28:21).

இந்த விலை மதிப்புள்ள இரத்தினக் கற்களை இஸ்ரவேல் மக்கள் எங்கிருந்து பெற்றுக்கொண்டனர்? அவர்கள் பயணப்பட்டு வரும் வனாந்திரத்திலிருந்து அல்ல என்பது தெளிவு. இஸ்ரவேல் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்டு வருகையில், யாத்திராகமம் *12: 35, 36*-இல் காண்கிறபடி எகிப்தியரிடமிருந்த இந்தச் சிறப்பான மிளிரும் கற்களைப் பெற்றனர். எகிப்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இரத்தினங்களில், இஸ்ரவேலரின் கோத்திரப் பெயர்கள் பதிக்கப்பட்டிருந்தன.

ஆரோன் மகா தூய தேவ சந்நிதியில் செல்லும்போது இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைத் தன் இருதயத்தின் மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்தில் கர்த்தருடைய சந்நிதியில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ள வேண்டும் (யாத். *28:29*). எகிப்து நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டுவரப்பட்ட இஸ்ரவேல் புத்திரர்கள் இப்பொழுது தேவ சந்நிதியில் ஆரோனின் மார்பில் ஞாபகக்குறியாக சுமக்கப்படுகிறார்கள். இதனையே மல்கியா தீர்க்கன் மூலம் "என் சம்பத்தை ('சம்பத்து' என்னும் சொல் 'சொத்து' என்றும் 'ஆபரணங்கள்' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) நான் சேர்க்கும் நாளிலே, அவர்கள் என்னுடையவர்களாக இருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல். *3:17*). ஆம், எகிப்திலிருந்து மீட்டுக் கொண்டுவரப்பட்ட இஸ்ரவேலர், இப்பொழுது கர்த்தருக்கு மிக அருகில், அவருடைய இருதயத்தில் பதிய வைக்கப்பட்டுள்ளனர். கர்த்தரால் மீட்கப்பட்ட மக்களின் சிறப்பையும் சிலாக்கியத்தையும் காண்க!

இன்றைய திருச்சபையினுடைய கிருபையின் காலத்திலும், இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்ட மக்களும், இத்தகைய சிலாக்கியமும் பதவியும் பெற்றவர்களாகவே உள்ளனர். அல்லேலூயா!

**மார்ப்பதக்கத்தைக் குறித்த நான்கு காரியங்கள்:**

***(1) மார்ப்பதக்கம் இருக்க வேண்டிய இடம்:*** அது ஆரோனுடைய இருதயத்தின் மேலிருக்கும் (யாத். *28:29*). தோள்பட்டை பலத்துக்குரிய இடம் என்று ஏற்கனவே கண்டோம். மார்ப்பதக்கத்தில் ஜனங்களுடைய பெயர்கள் வெட்டப்பட்டிருந்தன. இருதயமானது அன்பு, பாசம், கருணை ஆகியவைகளின் இருப்பிடம். பிரதான ஆசாரியன் யெகோவாவின் சந்நிதானத்தில் பிரவேசிக்கையில் அதை ஞாபகக்

குறியாக அணிந்திருந்தான். "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன்" (கலா. 2:20) என்று இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் நன்றியோடே அறிக்கை செய்ய முடியும். "நமக்காகத் தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்த" (எபே. 5:2) பிரதான ஆசாரியர் இவரே. "தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (வெளி. 1:6) என்று கர்த்தருக்குள் நமக்குண்டான மகிழ்ச்சியோடுகூட நாம் அவரைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தலாம். இவ்வாறு அவர் நம்மை நேசித்ததினாலே, "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி. 4:15). தேவனின் திருநாமம் மகிமையடைவதாக!

*(2) **மார்ப்பதக்கத்தின் அளவு:*** மார்ப்பதக்கம் சதுரமாயிருந்தது (யாத். 28:16). அதில் நான்கு வரிசையாக விலையேறப்பெற்ற கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அது சதுரமானதினால் அதன் நான்கு பக்கங்களும் சம அளவு உள்ளவைகளாயிருந்தன. அதன் நான்கு கோணங்களும் செங்கோணங்கள். "நான்கு" என்கிற எண், நாம் வசிக்கிற இந்த உலகத்தின் நான்கு திசையையும் குறிக்கும். லூக்கா 13:29 பார்க்கவும். "இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்" (யோவான் 13:1). கிறிஸ்துவின் அந்த அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும், அளவிடமுடியாத, அறிவுக்கெட்டாத அந்த அன்பிற்கு (எபே. 3:18,19) சதுர வடிவமாயிருந்த பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கம் ஓர் எடுத்துக்காட்டாயிருக்கிறது.

அதனுடைய நீளம் ஒரு சாண், அதன் அகலம் ஒரு சாண் (யாத். 28:16). ஆகையினால் விலையேறப்பெற்ற கற்களில் வெட்டப்பட்ட நாமங்கள், ஆரோனுடைய கை சாண் அளவுக்குள் அடங்கின. அவற்றில் ஒன்றும் இந்த அளவுக்கு அதிகப்படவில்லை. கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் தங்களுடைய மகா பிரதான ஆசாரியரின் கை சாணில் அடங்கியிருக்கிறார்கள். "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவை ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்

கொள்வதுமில்லை" என்று அவர் நமக்கு உறுதி கூறியுள்ளார் அல்லவா *(யோவான் 10:28)!* அவருடைய "ஒரு சாண்" அல்லது உள்ளங்கை எவ்வளவு பெரிதென்று சிந்தித்துப்பாருங்கள்! அவர் "தண்ணீர் களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களைச் சாணளவாய்ப் பிரமாணிக்கிறார்" *(ஏசாயா 40:12).* உலகத்தையே ஒரு சாணாக அளக்க வல்லவரல்லவா நம் கர்த்தர்?

மா கடல் பெரிது - வானத்தின் உயரமே
மா ஆழியின் ஆழமே என் நேசர் அன்பு,
அருகனற்ற நான் அருள் பெற்றேன்
நேசிக்கிறார் என்னையும் நின்னையுமே!

*(3)* ***மார்ப்பதக்கத்தின் தோற்றம்:*** மார்ப்பதக்கத்தைப் பார்ப்ப வர்கள் அதில் பன்னிரண்டு வெவ்வேறு நிறமுள்ள இரத்தினக் கற்கள் ஜொலிக்கிறதைக் காண்பார்கள். அந்தக் கற்களில் இஸ்ரவேல் கோத்திரப் பிதாக்களின் பெயர்கள் வெட்டியிருந்தன. ஆசாரிய கோத்திரத்தைத் தவிர மற்றெல்லாக் கோத்திரங்களின் பெயர்களும் அதில் வெட்டப்பட்டிருந்தன.


வலமிருந்து இடம் எழுதும் எபிரெய மொழி முறையில் கீழ்க் கண்ட பட்டியலில் உள்ளபடி அவர்களுடைய நாமங்கள் அந்தந்த கற்களில் முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 3 மாணிக்கம் | 2 புஷ்பராகம் | 1 பத்மராகம் |
| 6 வச்சிரம் | 5 இந்திர நீலம் | 4 மரகதம் |
| 9 சுகந்தி | 8 வைடூரியம் | 7 கெம்பு |
| 12 யஸ்பி | 11 கோமேதகம் | 10 படிகைப்பச்சை |

இப்பெயர் வரிசை தோள் மேல்பட்டையில் வைக்கப்பட்டிருந்த கோமேதகக் கற்களில் பதித்திருந்த வரிசையின்படி அல்ல. எண்ணா கமம் 2 -ஆம் அதிகாரத்தில் இந்த வரிசைக் கிரமம் பின்பற்றப்பட் டுள்ளதைக் காணலாம். இஸ்ரவேல் புத்திரர் ஆராதிக்கிறவர்களாக

ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிப் பாளயமிறங்கின காலத்திலும், வனாந்திர பயணத்தில் யுத்த வீரர்களாகவும், பரதேசிகளாகவும் சஞ்சரித்த காலத்திலும், இந்த வரிசைக் கிரமத்தையே அவர்கள் பின்பற்றினர். ஒவ்வொருவருக்கும் தேவனால் நியமிக்கப்பட்ட மேன்மையும், அழகும் இருந்தன. அவைகளுக்கிடையே பலவேறுபாடுகள் இருப்பினும் அழகிய ஒற்றுமை காணப்பட்டது. அவர்கள் தங்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு பவுஞ்சு பவுஞ்சாகப் பயணப்பட்டனர். அவர்களுடைய குணாதிசயங்கள், சூழ்நிலைகள், திறமைகள் வெவ்வேறாயிருப்பினும், யெகோவாவின் சந்நிதியில் பிரதான ஆசாரியன் போனபோது அவர்களைச் சமத்துவமாக தன் மார்பில் ஏந்தி இருந்தான்.

சில வேத பண்டிதர்கள் இஸ்ரவேல் மக்கள் ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி கூடாரமிட்டிருந்த முறைமையின்படியே, கீழ்க்கண்டபடி பன்னிரண்டு இரத்தினக்கற்களும் பொருத்தப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். கொடுத்திருக்கும் வரிசை கிரமத்தைப் பார்க்கும்போது இது சரியென்றே தோன்றுகிறது. அவ்வாறாயின் கீழ்க்கண்டபடி அவர்களின் பெயர்கள் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், பிரதான ஆசாரியன் தேவ மக்கள் அனைவரையும் தன் இருதயத்தில் சுமந்து, தேவ சமுகத்தில் நின்றான் என்பதே இதன் உட்கருத்து.



பிரதான ஆசாரியன் தேவனுடைய மக்களாகிய இஸ்ரவேலரைத் தன் சொந்த இருயத்தில் சுமந்தவனாக இறை சந்நிதியில் கொண்டுவந்து நிறுத்தினான். அந்நிலையிலிருந்து அம்மக்களை அகற்றிப் பிடுங்கிப் போடக்கூடியவர் எவரும் இல்லை. இச்சத்தியத்தையே புதிய ஏற்பாடு "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (ரோமர் 8:36) என வினவி தெளிவாக எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவின் இருதயத்தில் தாங்கப்பட்டவர்களாக தேவன் நம்மைக் காண்கிறார் என்பது, அலைக்கழிக்கப்பட்டும், சோதிக்கப்பட்டும் சோர்ந்து போகும் எளிய மக்களாகிய நமக்கு எத்தனை ஆறுதல், எத்தனை தைரியம்!

> "அந்த ஏபோத்தின்மேல் இருக்க வேண்டிய விசித்திரமான கச்சை அந்த வேலைக்கு ஒப்பாகவே, பொன்னினாலும், இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகமாயிருக்கவேண்டும்" (யாத். 28:8).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவிகளாகிய நம் ஆன்மீகத் தேவைகளைச் சந்திக்கும் நிலையில் வெண்கல பலிபீடத்தண்டைப் பலியாக்கப்பட்டவராக இருப்பது மட்டுமின்றி, இடைக்கச்சை அணிந்தவராக தேவனுடைய வீட்டில் அதிகாரியாகப் பணியாற்றும் பிரதான ஆசாரியராகவும் உள்ளார். அதினிமித்தம் ஆவியானவர் மூலம் அப்போஸ்தலன் எடுத்துரைப்பது போல், நமக்கு "தைரியம் உண்டாயிருப்பதினால்", "ஒருவரை யொருவர் கவனித்து", "அசைவில்லாத உறுதியுடன்", "உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும், (கிறிஸ்துவினண்டை) சேரக்கடவோம்" (எபி. 10:19-24).

கிறிஸ்துவின் சரீரமாக விளங்கும் திருச்சபை அங்கத்தினர்களிடையிலும் இத்தகைய நிலைமையே இருப்பதைக் காண முடியும். ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் பிரதிபலித்துக் காட்டுகின்றனர். அவரவரின் தனிப்பட்ட குணங்களுக்கு ஏற்ப, கிறிஸ்துவின் மகிமை வெளிப்படுகிறது. அனைவருக்கும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு இடமுண்டு. தெய்வீக நியமனத்தின்படி அவரவர் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் பணிகளும் உள்ளன. இவ்வாறு எல்லாரும் தங்கள் தங்கள் நிலையில் கிறிஸ்துவை உயர்த்திப் பிடிக்கின்றனர். அதே விதமாக நம்முடைய மகா பிரதான ஆசாரியர் தம்முடைய ஜனங்களைத் தேவ சந்நிதியில் தம்முடைய அன்பின் உள்ளத்தில் பதிய

வைத்திருப்பதினாலே, நாம் தைரியத்தோடே அடிக்கடி அவருடைய கிருபாசனத்தைண்டை சேருவோமாக.


இத்தகைய ஒற்றுமையும், ஆவிக்குரிய ஐக்கிய ஒருமைப்பாடும், பலதரப்பட்ட விசுவாசிகள் இடையே நிலவத்தக்கதாக அனைவரையும் நமது ஆண்டவர் தம் இருதயத்தில் ஒன்று போலவே வைத்திருக்கிறார். இந்த உணர்வு நம் உள்ளூர் சபை விசுவாசிகளிடம் காணப்பட வேண்டுவது எத்தனை அவசியம்.

*(4)* மார்ப்பதக்கத்தின் பின்னல் வேலையான பசும்பொன் சங்கிலி ஏபோத்திலிருந்து விழுந்துவிடாமல் இதை இணைப்பது என்ன? இதை யாத்திராகமம் *28:22-28* ஆகிய வசனங்கள் தெரிவிக்கின்றன. ஏபோத்தின் தோள்பாகத்திலிருந்த இரண்டு வளையங்களில், மார்ப்பதக்கத்தோடு இணைக்கப்பட்ட இரு சங்கிலிகள் மாட்டப்பட்டிருந்தன. அதோடு இளநீல நூலால் செய்யப்பட்ட நாடாவினால் ஏபோத்திலிருந்து நீங்கிவிடாதபடி இணைக்கப்பட்டிருக்கும் பொன் வளையல்களும், சங்கிலிகளும் நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் தெய்வீக மகிமைக்கு முன்னடையாளங்கள் ஆகும். அவர் நித்திய தேவன் என்று அவை நமக்கு நினைவூட்டுகின்றன. தேவ குமாரனாகிய இயேசு வானங்கள் வழியாய் ஏறிப்போனவர் என்பதை இளநீல நூல் குறிக்கிறது. தேவ மக்கள் இணைபிரியாத அன்பின் கட்டினாலே தங்கள் மகா பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவின் இருதயத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும் வேறு எந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாது" *(ரோமர் 8:38,39)*.

# 10

# ஊரீம் தும்மீம்

*(வேத பகுதி: யாத். 28:30)*



**மார்ப்பதக்கம்** ஒரு பையைப்போல இருந்தது எனக் கண்டோம். இந்த பை, ஏபோத் செய்திருந்த அதே பொருட்களால் செய்யப்பட்டிருந்தது (யாத். 28:15). ஏனெனில் அதற்குள் எபிரெய மொழியிலே "ஊரீம்" "தும்மீம்" என்று அழைக்கப்பட்ட இரு பொருட்கள் இருந்தன. இவை என்ன என்பது நமக்குத் தெளிவாகச் சொல்லப்படவில்லை. இவை விலை மதிப்பிட முடியாத மின்னும் இரத்தினக் கற்களா அல்லது அவை வேறு என்ன கற்கள்? அவை வெள்ளைக் கற்களா அல்லது கருமையான கற்களா? இவற்றிற்குப் பதில் இல்லை. அவற்றின் மூலமாகவே, தேவன் தம்முடைய சித்தத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது பிரதான ஆசாரியனுக்கு வெளிப்படுத்தி வந்தார் என்பதை மட்டும் எண்ணாகமம் 27:21 -ஆம் வசனம் நமக்குத் தெரிவிக்கிறது.

"ஊரீம்" என்கிற எபிரெய வார்த்தைக்கு "வெளிச்சங்கள்" என்றும் (யாக். 1:17; 1 யோவான் 1:5 உடன் ஒப்பிடுக) "தும்மீம்" என்கிற வார்த்தைக்கு "பரிபூரணங்கள்" என்றும் (உபா. 32:4; சங். 18:30 உடன் ஒப்பிடுக) பொருள். இவ்விரு எபிரெயச் சொற்களும் "உயர்வான அல்லது உச்ச நிலையை" உணர்த்தும் பன்மைச் சொற்கள் ஆகும்.

அவை இரண்டும் சேர்ந்து தேவ வசனத்தைக் குறிக்கின்றன எனக் கொள்ளலாம். ஒன்று பழைய ஏற்பாட்டையும், மற்றது புதிய ஏற்பாட்டையும் குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். ஏனெனில் இன்று தேவன் தமது சித்தத்தை வேத வசனங்களைக் கொண்டு

பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே வெளிப்படுத்தி வருகிறார். இது கிறிஸ்துவின் இருதய பதக்கத்தில் பதிந்திருக்கும் தேவ ஞானமும், ஆலோசனைகளும் என்றும், திருச்சபைக்கு வெளிப்படுத்தப்பட்ட இறை உண்மைகள் என்றும் எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும். ஊரீம் தும்மீம் என்பவை விலையேறப் பெற்ற கற்கள் என்பது அநேக வேதபண்டிதர்களுடைய பொதுவான கருத்து. அவை பையைப் போன்ற மார்ப்பதக்கத்துக்குள் இருந்தபடியால் ஒருவரும் அவற்றைக் காணமுடியாது. ஆனால் இஸ்ரவேலர் தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிய விரும்பும்போது, இந்த ஊரீம் தும்மீம் என்பவையே மார்ப்பதக்கத்துக்கு வெளியே காணும்படி பிரகாசிக்கச் செய்ததின் மூலமாய்த் தேவன் தம் மக்களுக்குத் தமது சித்தத்தை வெளிப்படுத்திக் காட்டினார். இக்காலத்தில் தேவன் தமது திருவுளச் சித்தத்தை தம்முடைய திருவசனத்தின் மூலமாகவே வெளிப்படுத்துகிறார். அந்தத் திருவசனம் நம்முடைய கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாகப் பிரகாசிக்கிறது (சங். 119:105). தேவனிடம் ஆலோசனை கேட்டு, தேவ சித்தம் இன்னதென்று அறிய விரும்பும் ஓர் இஸ்ரவேலன், பிரதான ஆசாரியனிடம் வந்து தன் சந்தேகத்தைச் சொல்லுவான். அப்பொழுது பிரதான ஆசாரியன் தேவ சந்நிதிக்குச் சென்று இந்த ஊரீம், தும்மீம் ஆகியவை எவ்வாறு உள்ளன என்று கவனிப்பான். அப்பொழுது தேவனுடைய விருப்பம் அல்லது சித்தம் இன்னதென்று அவன் அறிந்துகொண்டு அதைத் தன்னிடம் விசாரிக்க வந்த இஸ்ரவேலனுக்குத் தெரிவிப்பான்.

## தேவ சித்தத்தை அறியும் முறை

ஊரீம் தும்மீம் ஆகிய இவை பிரதான ஆசாரியனின் இருதயத்திற்கு மிக அருகில் இருந்தன என்பதும், அவை பிறருடைய கண்களுக்குத் தெரியாதவாறு மறைக்கப்பட்டு இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. முதலாவதாக தேவ திட்டங்களும், ஆலோசனைகளும் அவருக்குப் பிரியமாகவும் கிறிஸ்துவின் இருதயத்திற்கு நெருக்கமாகவும் இருந்தனவென்று நாம் அறிவோம். திருமறையைத் தேடி வாசித்து நம் வாழ்விற்கான ஆலோசனைகளையும், நாம் நடக்க வேண்டிய வழிகளையும் அறிய விரும்புகிறவர்கள் தேவனண்டை மிக நெருங்கி வரவேண்டும். தேவ வசனத்தை உலகமக்கள் அஞ்சனம் பார்ப்பது போலவும், குறிபார்ப்பது போலவும் உபயோகிக்கக் கூடாது. இன்று சில கிறிஸ்தவர்களும்கூட தங்கள் வீடுகளில் வைத்திருக்கும் தங்க வசன நாள்காட்டி காலண்டர்களை இவ்விதமாகவே பயன்படுத்துகின்றனர். ஒருசிலர் இத்தகைய திருமறை

வசனங்களைத் தங்கள் மின் அலைபேசியில் (Cell or Mobile) செய்தியாக அனுப்புவதை ஒரு பெரிய ஊழியமாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு வேதவசனங்களை உபயோகிப்பது பயனற்றதாகும். தங்கள் தங்கள் சுய விருப்பங்களையும், நோக்கங்களையும் நிறைவேற்றவே இவை வழிவகுக்கும். நாம் தேவ இருதயத்திற்கு அருகில் தங்கியிருந்து, அவருடைய திருவுளச் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக வாழும்போது மட்டுமே அவருடைய தெளிவான வழிநடத்துதலையும், நம் வாழ்க்கைக்குரிய அவருடைய சித்தத்தையும் அறிய வழி பிறக்கும் (சங். 25:14). அதை நாம் கருத்தாகத் தியானித்து அவர்மேல் உள்ள மெய்பக்தியுடனும், ஜெபத்துடனும் அவரை நெருங்கிச் சேரும்போதே அவர் நம்மை வழிநடத்த முடியும். தேவனுக்கு மிக அருகில் இருக்கும்போதே அவருடைய நடத்துதல்களை நாம் பெற முடியும்.

ஊரீம் தும்மீம் ஆசாரியனின் இருதயத்திற்கு மிக நெருக்கமாயிருப்பதிலிருந்து மற்றொரு உண்மையும் வெளிப்படுகிறது. தேவ மக்கள் தன் வாழ்வுக்கான அவருடைய சித்தத்தை அறிவதும், அதின்படி கீழ்ப்படிவதும் தேவனுக்கும் அவர்களுக்கும் மிகநெருக்கமாக இருக்கவேண்டிய விவரங்களாகும். இத்தகைய தேவசித்தம் விளம்பரம் செய்வதற்குரியதல்ல. இன்றைய கிறிஸ்தவ உலகில் இவ்வாறு விளம்பரப்படுத்தி, அதன்மூலம் சுய ஆதாயம் அடையும் தலைவர்கள் பலர் எழுந்திருப்பதைக் குறித்து நாம் எச்சரிப்பாக இருக்க வேண்டும். தேவ நடத்துதல் தனிப்பட்டவரின் மனநிறைவிற்கும் அனுபவிப்பதற்கும் மட்டுமே உரியவை ஆகும். அவை அவனுக்கு அதிக விலை மதிப்புடையதாக உள்ளதால், அவன் அதைத் தனக்கென்றே வைத்துக்கொள்வான்.

ஊரீம் தும்மீம் மூலம் பிரதான ஆசாரியன் எவ்வாறு தேவ சித்தத்தை அறிந்துகொள்கிறான் என்ற விவரம் சொல்லப்படாதிருப்பதின் காரணம் என்ன? தாவீது அரசன் ஏபோத்தை அண்டி, தனக்கான தேவ வழிகளை விசாரித்தபோது, அவர் எந்த முறையில் தம் சித்தத்தை அவனுக்கு வெளிப்படுத்தினார் என்பதைப் பதிவுசெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் தேவ ஞானம் வெளிப்படுகிறது. தேவன் மனிதரிடம் பேசி, தம் இருதய நோக்கங்களை வெளிப்படுத்துவதற்குக் குறிப்பிட்ட ஒழுங்கு முறை கிடையாது. அத்தகைய ஒரு வழிமுறை இருக்குமாயின், அதனை அவருடைய மக்கள் தவறாகப் பயன்படுத்தக் காரணமாகிவிடும். ஆனால் தேவன் பல வழிகளில் தம் மக்களுடன் பேசுகிறார். அவர் மனுமக்களுடன்

பேசும் முதன்மையான வழிமுறை, தாம் அருளிய திருமறையே ஆகும். அதை நமக்கு விளக்கி, பொருள்படுத்தி நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு அனுபவப்படுத்திக் கொடுப்பவர் அதை நமக்கு எழுதிக்கொடுத்த பரிசுத்த ஆவியானவரே ஆவார். மற்றும் பல சந்தர்ப்ப சூழ்நிலையின் மூலமாகவும், தேவ மக்களின் மூலமாகவும், நம் இருதயத்தில் ஆவியானவர் ஏற்படுத்தும் அழுத்தமான உணர்வுகளின் மூலமாகவும் அவர் தம் விருப்பங்களை வெளிப்படுத்துவார். எப்படி இருப்பினும் இவையாவும் அவருடைய தூய வசனத்திற்கு ஒத்ததாகவே அமைந்திருக்கவேண்டும். திருவசனமே முடிவான தேவ வெளிப்பாடாகும்.

## நியாயவிதி மார்ப்பதக்கம்

இவை "நியாயவிதி மார்ப்பதக்கம்" என அழைக்கப்பட்டன *(யாத். 23:30)*. ஏனெனில் இவற்றின் மூலமாகவே தேவனுடைய நியாயவிதிகளும், பிரமாணங்களும் இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தப்பட்டன *(எண். 27:21)*.

இவற்றை உபயோகித்த மூன்று முக்கியமான சந்தர்ப்பங்களைப் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம்.

*(1)* ***தெளிவு தேவைப்பட்டபோது:*** பாபிலோன் நாட்டில் சிறைப்பட்டிருந்த யூதர்கள் தங்களுடைய எருசலேம் பட்டணத்திற்குத் திரும்பி வந்தபோது, அவர்களில் சிலர் ஆசாரிய ஊழியம் தங்களுக்கு உரியது என்றனர். ஆனால் அவர்களுடைய பெயர்கள் ஆசாரியரைக் குறிக்கும் வம்ச பெயர்ப்பட்டியலில் காணப்படவில்லை. ஓர் ஆசாரியன் இந்த ஊரீம் தும்மீம் உபயோகித்துத் தேவனிடம் கேட்டறியும் காலம் வரையில் அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது *(எஸ்றா 2:61-63; நெகே. 7. 63-65)*. இந்தக் கிருபையின் காலத்திலும் இது போன்ற சந்தேகங்கள் எழுவதுண்டு. நம்முடைய மகா பிரதான ஆசாரியருடைய ஆலோசனையை நாம் நாடும்போது, அத்தகைய ஐயங்கள் தீரும். ஆகையால் நாம் விசுவாசமுள்ளவர்களோவென்று நம்மைச் சோதித்து அறியத்தக்கதாக கர்த்தரிடத்தில் சென்று கேட்போமாக *(2 கொரி. 13:5)*.

*(2)* ***ஆலோசனை அவசியமானபோது:*** தேவன் தமது மக்களுக்காகத் தெரிந்தெடுத்த தலைவர்கள் இக்கட்டான நேரங்களில் செய்வது என்ன என்று அறியாது இருக்கிறார்கள். பல சந்தேகங்கள் எழுகின்றன. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் என்ன செய்யவேண்டும்? இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் பிரவேசித்தபோது, சந்தித்த

யுத்தங்களில் மோசேயின் ஊழியக்காரனான யோசுவா, இஸ்ரவேல் சேனையின் தளகர்த்தனாக நின்று போர் செய்யவேண்டியிருந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தேவனுடைய சித்தத்தை அவன் அறிய வேண்டியது அவசியமாயிற்று. தேவனுடைய சித்தத்தை அறிய அவன் கர்த்தரை நாட வேண்டும். ஆகையால் யெகோவா தேவன் யோசுவாவைக் குறித்து மோசேக்குக் கட்டளை கொடுத்தார். மற்றவர்களைப்போலவே இருந்த யோசுவா இப்பொழுது இஸ்ரவேலாகிய மந்தைக்கு மேய்ப்பனாயிருக்கும்படிக்கும், சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒருவனாயிருந்தான். இதனாலே இஸ்ரவேலர்கள் அவன் சொற்படி நடக்க வேண்டும். தேவனுடைய ஆலோசனையை அவன் அறியத்தக்கதாக ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக வர வேண்டும். அவனிமித்தம் எலெயாசார் கர்த்தருடைய சந்நிதானத்திற்குச் சென்று, ஊரீம் தும்மீம் என்னும் நியாயத்தினாலே தேவனிடம் ஆலோசனையைக் கேட்டு அறியவேண்டியிருந்தது (எண். *27:17-21*). இதைப் போன்றே இன்றைக்கும் தேவனுடைய சபைகளைக் கண்காணிக்கும் மூப்பர்களும், மற்றும் ஊழியர்களும் நம்முடைய மகா பிரதான ஆசாரியரான இயேசு என்னும் தேவ குமாரனுடைய ஆலோசனையைக் கேட்க வேண்டிய அவசியமுண்டு. அவர்கள் அப்படிக் கேட்க தவறுவார்களானால், தவறான வழியில் சென்று "தேவனுடைய ஆலயத்தைக் கெடுப்பார்கள்" (*1* கொரி. *3:17*). ஒரு சந்தர்ப்பத்தில் யோசுவாவும், ஜனத்தின் பிரபுக்களும் கர்த்தருடைய ஆலோசனையை இவ்வாறு கேட்காமல் அவசரப்பட்டு கிபியோனியரோடு உடன்படிக்கை செய்தபோது, விவரிக்க முடியாத உபத்திரவத்திற்குள்ளானார்கள் (யோசுவா *9:14-16*). தாவீதும் இதைப் பயன்படுத்தி பிரதான ஆசாரியனுடைய ஏபோத்தின் மார்ப்பதக்கத்திலிருந்த ஊரீம் தும்மீம் என்பவைகளின் உதவியுடன் கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்டுப் பயனடைந்ததுண்டு. அவர் தந்த ஆலோசனையின்படியே தாவீது நடந்து, தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வாதத்தைப் பெற்றான் (*1* சாமு. *30:7, 8, 19*).

*(3)* ***அக்கிரம சிந்தையுடன் கீழ்ப்படியாதவர்களின் அவதி:*** கீழ்ப்படியாத மக்களுக்கு கர்த்தர் ஊரீம் தும்மீம் என்பவைகளின் மூலமாகவும்கூட தமது சித்தத்தை வெளிப்படுத்துவதில்லை. இது சம்பந்தமாகத் தாவீது அரசன், "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" என்று எழுதியுள்ளான். தாவீது கீழ்ப்படியாமலிருக்கவில்லை.

அதனாலே "மெய்யாய்த் தேவன் எனக்குச் செவி கொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்" என்று சந்தேகமின்றி திட்டமாய்க் கூறமுடிந்தது (சங். 66:18, 19). சவுல் அரசனோ யெகோவாவின் கட்டளையைப் புறக்கணித்தான். அதனாலே கர்த்தரும் அவனைப் புறக்கணித்தார் (1 சாமு. 15:26). சிறிது காலத்துக்குப் பிறகு அவனுடைய சத்துருக்களான பெலிஸ்தியர் தங்கள் சேனையைத் திரட்டிக் கொண்டு வந்து அவனோடு யுத்தஞ் செய்தபோது, அவன் தத்தளித்து, கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்க விரும்பினான். ஆனால் தேவனோ அவனுக்கு மறுஉத்தரவு அருளவில்லை. சொப்பனம், ஊரீம் தும்மீம் அல்லது தீர்க்கதரிசிகள் மூலமாய் அவ னுக்கு ஒரு வெளிப்பாடும் கிடைக்கவில்லை (1 சாமு. 28:4-6). சவுலின் இருதயத்தில் அக்கிரம சிந்தை இருந்தது. ஆதலால் கர்த்தர் அவன் விண்ணப்பத்துக்குச் செவிகொடுக்கவில்லை. தேவன் தனக்கு உத்தரவு அருளாததினாலே சாத்தான் என்ன சொல்லுகிறான் என்று கேட்க சவுல் தீர்மானித்து, அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயினிடம் போனான் (1 சாமு. 28:7-9). இந்நாட்களிலும், தேவனுக்குக் கீழ்ப்படியாத கிறிஸ்தவர்கள், பக்க வழிகளை நாடி "வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போகின்றனர்" (1 தீமோ. 4:1). இத்தகையோர் தங்களையே உயர்த்திக்கொள்ளும் மதத்தலைவர்களிடம் சென்று ஏமாறுகின்றனர்.

நாம் கீழ்ப்படிந்து அவருடைய சித்தப்படி நடக்கும்போது மட்டுமே நம்முடைய மகா பிரதான ஆசாரியரிடமிருந்து ஏற்ற பதிலைப் பெறமுடியும். அவர் தம் வசனத்தின் மூலமாக அனைத்து சந்தர்ப்பங்களுக்கும் தேவையான நல் ஆலோசனையையும், நடத்துதலையும் நமக்குக் கொடுத்து உதவுவார். ஆகையால் நாம் தேவனுக்குப் பிரியமில்லாத எண்ணங்களை அகற்றி, எல்லாக் காரியங்களிலும் தேவ ஆலோசனைகளுக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து, அவருடைய திருவுளச் சித்தத்தைச் செய்து, தேவ வழிநடத்துலைப் பெற்று, நற்பேறு பெற ஜாக்கிரதையாக இருப்போமாக.

## கிறிஸ்துவே மெய்ப்பொருள்

நிழல் படங்களாக விளங்கும் இவைகளுக்கெல்லாம் மெய்ப்பொருளாகத் திகழ்பவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! அவர் மூலமாகவே நமக்குத் தேவனுடைய சிந்தனைகளும், சித்தங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன (மத். 11:27;


யோவான் 1:14; எபி. 1:1, 2). தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் நம்முடைய மகா பிரதான ஆசாரியர் மூலமாகவே நாம் அறிந்துகொள்ள முடியும். எவ்வாறு ஊரீமும், தும்மீமும், மற்றும் கோத்திர பிதாக்களின் நாமங்களை ஏற்று நிற்கும் பன்னிரண்டு விலையுயர்ந்த இரத்தினக் கற்களும் மார்ப்பதக்கத்தில் ஒன்றாக இணைந்து இருந்தனவோ அவ்வாறே, இந்த இறை திட்டங்களும், ஆலோசனைகளும் அவருக்கு மிகப் பிரியமாயுள்ள விசுவாச மக்களுடன் பிரிக்க முடியாதபடி இணைந்தேயுள்ளன. ஜீவனுள்ள தேவனுடைய திருச்சபையும், சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்கிறது (1 தீமோ. 3:15).

மார்ப்பதக்கம் பிரிக்கமுடியாதபடி ஏபோத்துடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தும் பிரதான ஆசாரியனுடைய சிறப்பான ஆடைகளாயிருந்தன. இவை செய்யப்பட வேண்டிய விவரங்களை யாத்திராகமம் 28:22-28 ஆகிய வசனங்களில் காண்கிறோம். உண்மையாகவே ஏபோத்தும், தோள்களின்மேல் இருந்த கோமேதகக் கற்களும், மார்ப்பதக்கமும், இவையனைத்தையும் அவனுடன் இணைத்துப் பிடித்து வைத்திருந்த கச்சைகளும் அவனுடைய ஒரே ஆடையாகவே இருந்தன. இவ்வாடையைப் பிரதான ஆசாரியன் அணிந்துள்ள நிலையில் இஸ்ரவேல் மக்களைத் தம் தோளிலும், மார்பிலும் சுமக்கிறவனாகக் காணப்பட்டான். இவ்வாறு இஸ்ரவேலர் இருவகைகளில் தாங்கப்பட்டு வந்தனர். இவை இன்று நம்முடைய மீட்பர் பரலோகில் நிறைவேற்றும் ஊழியத்திற்கு ஒரு அழகாக பட உருவமாகத் திகழ்கின்றன. இவ்வாறு அவர் தமது வல்லமையை விளங்கப்பண்ணி, தம் மக்களை அன்புடன் தாங்கி, பரம பிதாவானவரிடம் ஒப்படைக்கிறார்.

# 11

# பாகையும் அதின் பொற்பட்டமும்

*(வேத பகுதி: யாத். 28:30-38 லேவி. 8:9; உபா. 33:8)*



**தமிழில் உள்ள "பாகை"** என்பதற்கான ஆங்கிலச் சொல் "mitre" என்பதாம். இதன் பொருள் "சுற்று" அல்லது "சுற்றிக்கட்டு" என்பதாகும். இதை "பரிசுத்த கிரீடம்" என யாத்திராகமம் 29:6-ஆம் வசனம் கூறுகிறது.

'பாகை' என்ற வார்த்தையை எசேக்கியேல் 21:26 -ஆம் வசனத்திலும் காண்கிறோம். அதை ஒருவகையான கிரீடம் எனலாம். இந்த வேத பாகத்தில் அந்திக் கிறிஸ்து (2 தெச. 2:9,10 காண்க) பாகையையும், கிரீடத்தையும் அணிந்து ஆண்டு அதிகாரம் செலுத்துவதோடு, ஆசாரியனாகவும் இருப்பான் என்பதாகக் கூறப்பட்டுள்ளது. பிசாசானவன் மெய்ப் பொருளாக உள்ள இறை உண்மைகள் அனைத்திற்கும் போலியை உருவாக்குபவன் அல்லவா? ஆனால் ஆசாரிய ஊழியத்திற்குரிய பாகையும், அரச ஆளுகையின் சின்னமாயுள்ள கிரீடமும் அந்த அந்திக் கிறிஸ்துவாகிய பொல்லாங்கனிடமிருந்து பிடுங்கப்படும்; அவன் தள்ளப்படுவான். "உரிமைக்காரனானவர்" அதாவது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திரும்ப இந்தப் பூலோகத்திற்கு வரும்போது, இறை அதிகாரத்திற்குரிய மெய்யான பாகையும் கிரீடமும் அவருக்கு மட்டுமே உரியதாக இருக்கும் (எசே. 21:27). ஏனெனில் அப்பொழுது அவர் "மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்" (சகரியா 6:13).

சகரியா தீர்க்கதரிசன நூலின் மூன்றாம் அதிகாரத்தில், அக்காலத்தில் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனான யோசுவா அழுக்கு ஆடைகளைத் தரித்தவனாய்த் தேவ சந்நிதியில் நின்றான். கர்த்தர் அவனு

டைய அக்கிரமத்தை மன்னித்து, அவனுடைய அழுக்கான ஆடைகளைக் களைந்து, அவனுடைய தலையில் ஒரு பாகையை வைத்தார். நம்முடைய மகா பிரதான ஆசாரியர், தேவ குமாரனாகிய இயேசு, மாசற்ற பரிசுத்தர். அவருடைய பாகை எப்போதும் மாசற்ற தூய வெண்மையானதே.

பிரதான ஆசாரியன் அணியும் இந்தப் பாகையைப் பற்றிப் பல முக்கிய அம்சங்கள் உள்ளன. முதலாவது, அதனுடைய பாகங்கள் என்னவென்று பார்ப்போம்.

*(1)* மெல்லிய வெண்மையான பஞ்சு நூல் - இது நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் பரிபூரண நீதியைக் குறிக்கும்.

*(2)* இளநீல நாடா - இது அவருடைய தெய்வீக ஊழியத்தைக் குறிக்கும் (எபி. *9:24*).

*(3)* பொன்- இது அவருடைய தெய்வீகத்துக்கு அடையாளம்.

பாகையின் முற்பகுதியில் பொற்பட்டம் இளநீல நாடாவின் மேல் கட்டப்பட்டிருந்தது. பொற்பட்டத்தில் எழுதியிருந்த வார்த்தைகளுக்கு இருபொருள்களைக் கூறலாம்; ஒன்று "கர்த்தருக்குப் பரிசுத்தம்", மற்றது "கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டது". இந்த இரண்டும் நம்முடைய கர்த்தரின் பரிபூரண பரிசுத்தத்தையும், ஊழியஞ்செய்ய அவர் தம்மைப் பரிபூரணமாய் அர்ப்பணித்திருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றன.

அதிதூயராக இருக்கும் தேவன், தாம் வாசம் செய்ய விரும்பும் இடத்தில் அத்தகைய தூய்மையையே எதிர்பார்க்கிறார். செலுத்தப்படும் எல்லா பலிகளும் மிகத் தூய்மையாகவே இருக்க வேண்டும். இதற்குக் குறைவானது எதையும் அவர் ஏற்றுக் கொள்வதில்லை. இவ்வாறே இன்றைய நாட்களிலும் தேவ மக்கள் கூடிவரும் ஒரு உள்ளூர் சபையிலும், கூடிவரும் விசுவாசிகளிடையிலும், சபையின் சகல நடிவடிக்கைகளிலும், ஊழியங்களிலும் தேவன் நாடும் இத்தகைய தூய்மையே காணப்பட வேண்டும். நம்முடைய நடக்கைகள் யாவற்றிலும் இத்தூய்மை காணப்பட வேண்டும். "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேதுரு *1:15,16*) என்ற கட்டளையை நாம் பெற்றிருக்கிறோமே!

இந்தப் பொற்பட்டை கட்டியிருந்த இடம் ஆசாரியனின் நெற்றியாகும். நெற்றி அறிவுக்கும், புத்திக்கூர்மைக்கும் இருப்பிடம். ஆகையால், பரிசுத்தம் என்றால் என்னவென்றும், அதற்கு தூய தேவன்

கொடுத்திருக்கும் இடம் யாது என்பதையும் உணர்ந்து புரிந்துகொண்ட நிலையில் நாம் கருத்துடன் செயலாற்ற வேண்டும்.

*1. கர்த்தருக்குப் பரிசுத்தம் (யெகோவாவுக்குப் பரிசுத்தம்).* நமதாண்டவர் மிகத்தூய தூயர். ஏசாயா தீர்க்கன் கண்ட தரிசனத்தில், உயரமான ஆசனத்தில் வீற்றிருந்த அவரைப் பற்றி சேராபீன்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டது, "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்பதாம். அவ்வாறே நான்கு ஜீவன்களும் இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்ததாக வெளி. *4:8* - இல் எழுதியிருக்கிறது. இப்பொழுது பல மொழிகளில் பாடுகிற பின்வரும் பாமாலையின் கவி இதை ஏற்றவிதமாய் விளக்குகிறது:

**தூய, தூய, தூயரே, அன்பர் சூழ நின்று**
**தேவ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பாரே,**
**கேரூபின் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று**
**இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!**

*2. யெகோவாவுக்கென்று பிரித்து எடுக்கப்பட்டது.* தமது சத்தியத்தினாலே நம்மைப் பரிசுத்தமாக்கும்படி நம்முடைய மகா பிரதான ஆசாரியர் நமக்காகத் தம்மைத்தாமே பரிசுத்தமாக்கினார். அதாவது அவர் தம்மைத்தாமே பிரித்து வைத்துக்கொண்டார் (யோவான் *17:19*). யெகோவாவின் ஊழியத்துக்கென்று அவர் தம்மைப் பிரித்து வைத்துக் கொண்டதினாலே, அவர் மூலமாய் ஆசாரிய ஊழியம் செய்யும் அவருடைய மக்களாகிய நாமும் அவருக்கென்றும் அவருக்காகவும் நம்மை வேறுபடுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். பிரதான ஆசாரியனின் பாகையிலிருந்த அதே வாசகம் சகரியா *14:20, 21* வசனங்களிலும் உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காண்க. இவ்வசனங்கள் சிறப்பாக தேவனுக்காகப் பிரித்து வைக்க வேண்டிய விவரங்களையும் அவசியத்தையும் தெளிவாகக் கூறுகின்றன.

***(அ)*** குதிரைகளின் மணிகளிலே "கர்த்தருக்குப் பரிசுத்தம்" அல்லது "கர்த்தருக்கென்று பிரித்து எடுக்கப்பட்டது" என்று எழுத வேண்டும். குதிரைகள் பயணத்துக்கு உபயோகப்படுகிறவை ஆகும். ஆதலால் அவை நம்முடைய இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தைக் குறிக்கும்; அதாவது நமது நடையையும், போராட்டத்தையும் குறிக்கும். நம்முடைய அனுதின வாழ்க்கையில் நம்மைக் காணும் பிறர் நாம் தேவனுக்கென்று பிரித்து வேறுபடுத்திக்கொண்டவர்கள் என்பதைக் காண்கின்றனரா?

*(ஆ)* ஆலயத்திலுள்ள பணிமுட்டுப் பாத்திரங்களும் கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவையாம். ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் நாம் தேவனுக்காக நிறைவேற்றும் ஊழியத்தைக் குறிக்கும். நம்முடைய தொழுகை, ஜெபங்கள், கர்த்தருக்காக ஆற்றிடும் ஊழியங்கள், மற்றெல்லாச் செயல்களிலும் நாம் தேவனுக்கென்றுப் பிரிந்து வாழ்கிறவர்களாகக் காணப்படுகிறோமா?

ஜீவனானாலும் மரணமானாலும் அது
கர்த்தருக்கே ஒரு பலியாம் -ஆம்
கர்த்தரே, எங்களை உமக்கென்று
பிரித்து வேறுபடுத்திக்கொள்ளும்.

*(இ)* ஒவ்வொரு நாளும் வீட்டில் நாம் உபயோகிக்கிற பாத்திரங்கள், சட்டிகள், பிறபொருட்கள் அனைத்துப் பணிமுட்டுகளும் கர்த்தருக்கென்று பிரிக்கப்பட்டதாக இருப்பின் மட்டுமே, கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறதாகவும், நாம் உபயோகிக்கிற யாவும் அவருடைய ஊழியத்துக்காக அர்ப்பணம் செய்ததாகவும் கருதப்படும். ஏனெனில் நாம் ஆண்டவராகிய கிறிஸ்துவையே சேவிக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் வெளிப்படையாகச் செய்ய அல்லது சொல்ல வெட்கப்படுகிற காரியங்களைத் தங்கள் வீடுகளில் அடிக்கடி செய்கிறார்கள், பேசுகிறார்கள். நோவாவின் குடிவெறி, ஆபிரகாமின் பொய், ரெபெக்காளின் வஞ்சனை இவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். நம்முடைய வீட்டிலே குடும்பத்தினரோடு நாம் இருக்கும்போதும் முழுவதுமாய் கர்த்தருக்கென்று ஒப்புவிக்கப்பட்டவர்களாகவும் பரிசுத்த நடக்கையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

***3. பாகையில் உள்ள பொற்பட்டம்:*** "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்த காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தீட்டை (தோஷத்தை) ஆரோன் சுமக்கும்படி அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கீகரிக்கப்படும்படி அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்கவேண்டும்" *(யாத். 28:38)*. நம்முடைய தொழுகையில் தேவனுக்குத் துதி தோத்திரங்களைச் செலுத்தும்போதும், நம்முடைய ஜெபங்களிலும், சேவையிலும், குறைவும், தீட்டும் (தோஷமும்) காணப்படுவது சாத்தியமே. என்றாலும் அந்த தீட்டையும் குறைவையும் தாங்குகிற ஒரு மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறாரல்லவா? அவர் நம்முடைய காணிக்கைகளையும், சேவையையும் தம்

முடைய பரிசுத்த ஊழியத்தினாலே, பிதாவானவர் அங்கீகரிக்கும் படி செய்கிறார். நாம் "பிரியமானவருக்குள்" அங்கிகரிக்கப்பட்டிருக் கிறோம் *(எபி. 1:5)*. அவருடைய ஆசாரித்துவம் எவ்வளவு மகிமை யானது! "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" *(எபி. 13:15)*.

பிரதான ஆசாரியனின் சிரசு பாகையினால் மூடப்பட்டிருப்ப தின் காரணம் என்ன?

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் பாரம்பரிய திருச்சபை களின் ஒழுங்கைப் பின்பற்றுகிறவர்கள் அனைவரும் குருக்கள், ஆயர்கள், பேராயர்கள், மேற்றாணியர்கள் போன்றோர் பல வர் ணங்கள் கொண்ட அலங்கார ஆடைகளையும், சிகை பாகைகளை யும் அணிகிறது இன்றும் பழக்கத்தில் உள்ளது. புதிய ஏற்பாட்டுத் திரு வெழுத்துகளில் இத்தகைய சடங்காச்சார முறைமைகளுக்கும், புறம் பான அலங்காரங்களுக்கும் சற்றேனும் இடம் இல்லையென்பதை அறிவோம். நீங்கள் குருக்கள் என அழைக்கப்படவும் கூடாது என்ற கட்டளையை நமதாண்டவரே கொடுத்துள்ளார். இத்தகைய பழக் கங்கள், பெர்கமு சபைக்கு கர்த்தர் எச்சரித்த "நிக்கொலாய் மதஸ்தர்" *(வெளி. 2:15)* கொண்டுவந்த பழக்கமாய் இருக்க வேண்டும். இம் முறை புதிய திராட்சை இரசத்தைப் (புதிய ஏற்பாட்டு சபை உண்மை களைப்) பழைய தோல் துருத்திகளில் (பழைய ஏற்பாட்டு ஆரோ னின் ஆசாரிய முறைமைகளுக்கு அடுத்தவைகளில்) சேர்த்துவைக் கும் ஒருமுறையாக இருக்கிறது. இத்தகைய ஆசாரங்களுக்கு கிறிஸ் தவ விசுவாசிகள் விலகி இருக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டு உள்ளூர் சபை கூடிவருகையில் சகோதரர்கள் தங்கள் சிரசை மூடக்கூாது என்ற கட்டளை பெற்றிருக்க *(1 கொரி. 11:3-16)*, பிரதான ஆசாரியன் பாகையினால் தன் தலையை மூடும் படியான கட்டளை பெற்றுள்ளது *(யாத். 28:40; 39:28)* ஏன் என்ற கேள்வி நம் மனதில் எழுகிறது. இதற்கான ஏற்ற விடையை நாம் காணவேண்டுமாயின் பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்திற் கும், புதிய ஏற்பாட்டு உள்ளூர் சபைக்கும் உள்ள வேறுபாட்டை அறியவேண்டும்.

*1.* இதன் முதல் வேறுபாடு, ஆசரிப்பு கூடாரத்தில் பெண்கள் ஊழியம் செய்ய அழைக்கப்படவில்லை என்பதாம். இந்த கனமான ஊழியத்திற்கு ஆரோனும் அவனுடைய குமாரர்கள் மட்டுமே நிய

மிக்கப்பட்டனர். ஆனால் இன்றைய கிறிஸ்தவ சபையில் ஆண்கள் தேவனுக்கு "இராஜரீக ஆசாரியராக" இருப்பதுபோலவே, பெண் களும் சமஉரிமை பெற்றவர்களாக உள்ளனர். அவர்கள் சபை கூடி வந்திருக்கையில் அமைதலாயிருக்க வேண்டும் என்றும், போதிக்கக் கூடாதென்றும் தடை செய்யப்பட்டிருப்பினும், அவர்களும் ஆசாரி யர்களே.

2. புதிய ஏற்பாட்டுச் சபையில் பெண்கள் இவ்வாறு பங்கு பெற் றிருக்கும் வகையில், படைப்பின் ஒழுங்கின்படியாக, ஆண்டவர், ஆண், பெண் என்ற வரிசை நிலை நிலவுகிறது. (முதலாவது கர்த்தர், அடுத்தது ஆண், மூன்றாவது பெண்) இறை படைப்பில் வெளிப் படும் அற்புதமான தலைமைத்துவம் திருச்சபையிலும் வெளிப்படு வது ஒரு மேன்மையே! இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் கூடி வருகை யில் தெய்வீக தலைமைத்துவம் நிலவி வருவதை உணர்ந்து, அச்சபை யில் அதனை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இதனையே 1 கொரிந் தியர் 11:1-13 ஆகிய வசனங்கள் நமக்குப் போதனையாக எடுத்துக்கூறு கின்றன.

3. இதற்கு மாறாக, ஆசரிப்புக் கூடாரமோ, சபையின் நிலை யிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கிறது. அங்கு பெண்களுக்கு இடமில்லை. மட்டுமின்றி, பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஆண்ட வர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியமும், தெய்வீகத் தலைமைத் துவத்தின் கூறுகளும், அவைகளுக்கிடையில் ஆண்மகனுக்கு உள்ள உறவும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆசரிப்புக் கூடாரத்தில் தேவ னுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவே வெளிப்பட்டது. அதில் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்பட்டு இருந்தான். அந்நிலையில் தன்னு டைய கீழான நிலையை, அவன் தன் சிரசை மூடிக்கொண்டு வெளிப் படுத்திக் காட்டினான். தான் தேவனுக்கு அடங்கினவனாயிருப்பதை மூடிக்கொண்ட சிரசின் அடையாளத்தின் மூலம் காண்பித்தான். மாறாக, ஒரு கிறிஸ்தவ சபையில், ஆண் பெண்ணுக்கு சிரசாக உள்ள தையும், கிறிஸ்து ஆணுக்கு சிரசாக உள்ளதையும், தேவன் கிறிஸ்து வுக்கு சிரசாக உள்ளதையும் வெளிப்படுத்தும் வகையில் ஆண் தன் தலையை மூடாமலும், பெண் தன்சிரசை முக்காடிட் டுக்கொண்டும் இருக்கும்படியான கட்டளையைப் பெற்றுள்ளனர். ஒரு உள்ளூரில் விசுவாசிகள் அனைவரும் சகோதர சகோதரிகளாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாகக் கூடிவரும்போது, தெய்வீகத் தலைமைத்து வமும் இவ்வாறு வெளிப்படுவது, திருச்சபைக்குரிய பெரிய மேன் மையாகும்!

## ஆரோனுடைய ஆடைகளின் மேன்மை

ஆரோன் அணியவேண்டிய ஆடைகள் "மகிமையும் அலங்கார முமாக" இருந்தன (யாத். 28:2, 40) என ஏற்கனவே கண்டோம். மகிமையும், அலங்காரமும் எனக் கூறியிருப்பதின் காரணம் என்ன?

***தேவன் முகமாக உள்ள மகிமை:*** கிறிஸ்துவின் மகிமையைக் குறித்து யோவான் தம் நற்செய்தி நூலில் "(அம்மகிமை) பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14) என விவரிக்கிறார். இந்த மகிமையில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் இருந்தது - அதாவது குமாரனில் விளங்கின அந்த மகிமை பிதாவானவர் ஒருவர் மட்டுமே கண்டு களிகூரக் கூடியதாக இருந்தது.

***மனிதன் முகமாக உள்ள அலங்காரம் (அழகு):*** பாவ மனிதன் அவரைக் கண்டபோது, "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை" என்கின்றனர் (ஏசாயா 53:2). ஆயினும் மீட்கப்பட்டு இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்துள்ள விசுவாச பெருமக்கள் அவரைக் கண்டு இன்புற்று, "அவர் முற்றும் அழகுள்ளவர்" (உன். 5:16) என்று வியந்து பரவசமடைகின்றனர்.

நாம் மீண்டும் இந்த ஆரோனுடைய ஆடையை நோக்குவோம். அது "பொன்னும் இளநீல நூலும், இரத்தாம்பர நூலும், சிவப்பு நூலும், மெல்லிய பஞ்சு நூலும்" (யாத். 28:5) ஆகியவற்றால் ஆனது. பொன் பரலோக மகிமையும், இரத்தாம்பரம் பூலோக மகிமையையும் வெளிப்படுத்துகின்றன. "இவர் என் நேசகுமாரன்", "இவர் அவருடைய (பிதாவினுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாக" இருக்கிறார் (எபி. 1:3). பிரதான ஆசாரியன் தனக்குக் கொடுக்கப்பட்ட இந்த மகிமையின் ஆடையை அணிந்து இஸ்ரவேலர்கள் மத்தியில் நடக்கும்போது, அவன் தன் ஆடைகளுக்கு மெய்ப்பொருளாக உள்ள கிறிஸ்துவின் மகிமையையே உயர்த்திக் காண்பித்தான்!

ஆரோனுடைய குமாரருக்கும் இதற்கு ஒப்பான ஆடையே அணிவிக்கப்பட்டது (யாத். 28:40, 41). இது இச்சிறப்பான ஊழியத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவானவரோ மரணம் இல்லாத நித்தியர். "அவர்கள் (ஆரோனும் அவன் குமாரரும்) பெறும் அந்த அபிஷேகம் தலைமுறை தோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவாயிருக்கும்" (யாத். 40:15). மெய்யாகவே இயேசு கிறிஸ்துவில் தேவ மகிமை மனிதரிடையே உலாவினது எனலாம்!

அடுத்ததாக, ஆரோனுடைய ஆடையின் விவரணை என்ன? "பொன்னும், இளநீலநூலும், இரத்தாம்பர நூலும், சிவப்பு நூலும், மெல்லிய பஞ்சு நூலும்" ஆகும். இவை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் காணப்பட்ட நீதியை வெளிப்படுத்துகின்றன. அவர் "நீதியின் இராஜாவாக" விளங்கினார் (எபி. 7:1,2), ஏற்கனவே அவருடைய நீதியைக் குறித்து விவரித்துள்ளோம் (பக்கம் 37 காண்க).

நாம் பிரதான ஆசாரியனை நோக்கிப்பார்த்து, அவன் அழகை நாம் ஒருவாறு இரசிக்கிறோம்; கிறிஸ்துவினுடைய முழுமையான அழகை தேவன் ஒருவர் மட்டுமே தெளிவாகக் காண்கிறார். "பிதா தவிர, வேறொருவரும் குமாரனை அறியான்" (மத். 11:27). இச்சத்தியம் பிரதான ஆசாரியனின் ஆடையில் வெளிக்கொண்டுவரப் பட்டுள்ளது.

> "ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்ய ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும் பலிபீடத் தண்டைக்குச் சேரும்போதும், அக்கிரமம் சுமந்து அவர்கள் சாகாத படிக்கு, அவைகளைத் தரித்திருக்க வேண்டும்" (யாத். 28:43).

ஆரோனுடைய ஆசாரிய ஆடைகள் கிறிஸ்து இயேசுவுக்கே உரித்தான, தனிப்பட்ட, நித்திய இறைப்பண்புகளையும், மனிதப் பண்புகளையும் தெரிவிக்கின்றன. அவனுடைய குமாரருடைய அங்கிகளும், குல்லாக்களும், திருச்சபையின் சிரசாக விளங்கும் கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசிகள் பெற்றிருக்கும் கிருபையினை விவரிக்கின்றன. எத்தனை கிருபையுடன், ஆச்சரியமான முறையில் யெகோவா தேவன் தம் மக்களின் ஆன்மீகத் தேவைகளுக்குரிய அனைத்தையும் ஆயத்தம் செய்து வைத்துள்ளார் பாருங்கள்!

ஆரோனின் சிரசு முதல் கால்வரை அவன் அணிந்திருந்த ஆடைகள் யாவும் முழுமை பெற்றதாகவும், யெகோவாவின் எதிர்பார்க்குதலுக்கேற்ற வகையிலும், மக்களின் அவசியத்தைச் சந்திக்கக் கூடியதாகவும் இருந்தன. ஆரோனின் ஆடையுடன் சம்பந்தப்பட்டு நாம் சிறப்பாகக் கவனிக்க வேண்டிய குறிப்பு ஒன்றுண்டு. அதை 39-ஆம் அதிகாரத்தில் காண்கிறோம்.

> "அந்தப் பொன்னை, இளநீல நூலோடும், இரத்தாம்பர நூலோடும், சிவப்பு நூலோடும், மெல்லிய பஞ்சுநூலோடும் சேர்த்து விசித்திர வேலையாய் நெய்யும்படிக்கு, மெல்லிய தகடுகளாய் அடித்து, அவைகளைச் சரிகைகளாகப் பண்ணினார்கள்" (யாத். 39:3).

ஆயினும் இதன் உட்கருத்து 28-ஆம் அதிகாரத்திலேயே குறித்துக் காட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். "இளநீலம், இரத்தாம்

பரம், சிவப்பு, மெல்லிய பஞ்சு நூல்" ஆகியவை கிறிஸ்துவின் மனிதத் தன்மையை வெளிப்படுத்துகின்றன என்பதை முன்னரே கண்டோம். மேலே சொல்லியவற்றுடன் பசும்பொன்னை மெல் லிய தகடாக அடித்து, சரிகைகளாகத் திரித்து, ஏனைய நூல்களுடன் விசித்திர விநோத வேலைப்பாடுடன் ஒன்றுபட நெய்யவேண்டும். இவ்வாறு பொன் இழைகள் மற்றவைகளிலிருந்து ஒருபோதும் பிரிக் கக் கூடாததாக இருந்தது. இது நமக்கு எடுத்துக்கூறும் சத்தியம் தெளி வாகவே உள்ளது. நான்கு சுவிசேஷ நூல்களிலுள்ள சில பகுதிகள், கிறிஸ்துவின் தெய்வீகமும், மனிதத்தன்மையும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து பிரிக்கமுடியாதபடி ஒன்றாக இணைந்துள்ளதை மிகத் தெளிவாகவே வெளிப்படுத்துகின்றன. அவ்விடங்களில் இப்பண்பு கள் வெளிப்படையாக எடுத்துரைக்கப்படாவிடினும், நாம் கிறிஸ்து வின் பற்பல செயல்களைப்பற்றிப் படிக்கையில் அவற்றை மிகத் தெளிவாகவே அறிந்துகொள்ள முடியும்.

உதாரணமாக கலிலேயாக் கடலில் கிறிஸ்து படகில் பயணம் செய்வதைப் பாருங்கள். அவர் தலையணை வைத்துப் படுத்து நித் திரை செய்கிறதைக் காண்கிறோம். இது மனிதத் தன்மையின் ஒரு வெளிப்பாடு அல்லவா? ஆயினும் ஒரு சில வினாடிகளில் தன் மெய் யான மனித இயல்பை விடுத்து, தெய்வீகத்தின் மகத்துவ அதிகாரத் தையும், அண்டசராசரங்கள்மேல் தாம் முழு ஆளுகையுள்ளவர் என் பதையும் வெளிப்படுத்தும் வகையில், கொந்தளிக்கும் கொடுங் கடலை அமைதிப்படுத்துகிறார். இதற்காக எவ்வித முயற்சியையும் அவர் எடுக்க வில்லை, பிரயாசப்படவில்லை! ஏதோ சில சாகசங்கள் செய்யவில்லை! இயற்கையான மனிதத் தன்மையின் இயல்பிலி ருந்து தெய்வீகத் தன்மைக்கு உயர்ந்து, "அமைதலாயிரு" என்ற ஒரு வார்த்தையால் அலைக்கழிக்கும் கடலை அமைதிப்படுத்துகிறார். அவர் தேவன் என்பதை, அச்செயல் தெளிவாக்குகிறதல்லவா?

வரி செலுத்துவதைப்பற்றி மத்தேயு 17 -ஆம் அதிகாரத்தின் இறுதியில் எழுதியுள்ள விவரங்களைக் கவனியுங்கள். தேவன் வானத்திற்கும் பூமிக்கும் உரிமையாளர் (ஆதி. 14:19). பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது (சங். 24:1). ஆயினும் இயேசுவினிடம் வரிப்பணம் இல்லை. இது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற் காகத் தம்மைத்தாமே மனமுவந்து வெறுமையாக்கிய மனித நிலை. ஆயினும் அவர் தேவனாக, படைப்புக் கர்த்தராக கடலுக்குள் உள்ள செல்வத்தின்மேல் தம் கரத்தை வைக்கிறார். தேவையான வரிப் பணத்தை மீனின் வாயிலிருந்து எடுக்கிறார்; இது மற்றுமொரு அதி

சயம்! தாம் ஒரு மனிதன் என்பதையும், அடிமைக்கொப்பான ஊழியன் என்பதையும் வெளிப்படுத்தும் வகையில் "அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும், அவர்களிடத்தில் (வரிப்பணமாகக்) கொடு" (மத். 17:27) என்று கூறினார். வரி செலுத்துதல் மனிதருக்குரியது, இவ்வுலகிற்குரியது. ஆயினும் அப்பணத்தைப் பெற்றது தெய்வீகச் செயலன்றோ? கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மனிதத்தன்மையையும் பிரிக்கக் கூடாதபடி, அவை ஒன்றாகப் பிணைந்திருப்பதை இச்சம்பவம் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இலாசருவை உயிரோடு எழுப்பின சந்தர்ப்பத்திலும், கிறிஸ்துவின் இவ்விரு இயல்புகளும் வெளிப்படுவதை நாம் காண்கிறோம். அவர் தம் ஆவியில் கலங்கித் துயரமடைந்ததும், கண்ணீர் விட்டதும் (யோவான் 11:33, 35) அவருடைய மனித இயல்பின் செயலாக விளங்குகின்றன. இவை மனித இருதயத்தின் உணர்வுகளல்லவா? ஆயினும் சர்வ வல்லமையுடையவரும், ஜீவனும் உயிர்த்தெழுதலுமானவரும் (யோவான் 11:25), மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோலை உடையவருமாகிய அவர் (வெளி. 1;18), "இலாசருவே வெளியே வா!" என்று கூவினார். உடனே மரணமும் பாதாளமும் அவருடைய இறைச் சத்தத்திற்குச் செவிகொடுத்தன. மரணம் தன் பலத்த வல்லமைக்குள் கட்டி, சிறைப்படுத்தி வைத்திருந்த இலாசருவை அவிழ்த்துவிட்டது.

இச்சத்தியங்கள் யாவும் பொன் இழைகளுடன் நீலம், இரத்தாம்பரம், சிவப்பு, மெல்லிய பஞ்சுநூல்கள் யாவும் விசித்திர விநோதமாக இணைத்து, ஒன்றுடன் ஒன்று பின்னியிருந்த ஆரோனுடைய ஆடைகள் நமக்குப் பட உருவில் விளங்கப் பண்ணுகின்றன. ஆம், நாம் இச்சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்குக் கடினமாக இருப்பினும், தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீக இயல்பும் மனித இயல்பும் ஆச்சரியமான முறையில் ஒன்றுடன் ஒன்று கலந்து இணைந்து இருந்தன. ஆம் அவர் மெய்யான தேவனும், மெய்யான மனிதனுமானவர்.

முடிவாக, முந்தின பகுதிகளில் நாம் கண்டவைகளை ஒன்று கூட்டிச் சேர்த்துச் சுருங்கக் கூறின் நமது மகா பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவானவர்:

1. அவர் பாவமற்றவர்- மெல்லிய பஞ்சுநூல் உள்சட்டை

2. அவர் விண்ணவர்- ஏபோத் அங்கி

3. அவர் ஊழியம் செய்பவர்- இடைக்கச்சை

4. அவர் மனிதனும் அதே சமயத்தில் தேவனுமானவர்- ஏபோத்

5. அவர் அன்பும் கரிசனையும் உடையவர்- மார்ப்பதக்கம்

6. அவர் கீழ்ப்படிந்து உயர்த்தப்பட்டவர்- பாகை

7. அவர் மாதூயர்- பொற்பட்டம்

# 12

# பிரதான ஆசாரியனுடைய ஊழியம்

*(வேத பகுதி: யாத். 30:1-9; லேவி. 9:5-22; 13:1-3; 16:1-4; 24:1-4; எண். 1:3,4; 6:22-27; 8:1-4, 11, 21; 26:1-4)*



**ஆசரிப்புக் கூடாரத்தில்** அதின் பணிமுட்டுகள் இல்லையேல் அதனால் யாதொரு பயனுமில்லை. இவை இரண்டும் இருப்பினும், அந்தக் கூடாரத்தில் ஊழியம் செய்யும்படியான ஒரு ஆசாரியக் குடும்பத்தார் அவசியம் என்பது வெளிப்படை. இதனிமித்தமே, தமக்கு ஆசாரிய ஊழியம் செய்வதற்கு உன் சகோதரனாகிய ஆரோனையும், அவனோடுகூட அவன் குமாரரையும் இஸ்ரவேலரிடையே இருந்து பிரித்து உன்னண்டைச் சேர்த்துக்கொள் என்ற கட்டளையைத் தேவன் மோசேக்கு கொடுத்தார் (யாத். 28:1).

இஸ்ரவேல் மக்களுக்கு ஆசாரியன் ஒருவன் இருக்க வேண்டிய அவசியம் என்ன? அவர்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டவர்களும், தேசங்களுக்கிடையில் இருந்து யெகோவா தேவனுக்கென்று சிறப்பான சம்பத்தாக தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் ஆவர். தேவனுடைய மேலான வாக்குத்தத்தத்தை உரிமையாகப் பெற்றவர்கள். அவர்கள் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ் வந்தவர்கள். அவர்களுக்கிடையில் யெகோவா தேவன் வாசம்பண்ண விருப்பங்கொண்டிருந்தார். ஆம், தேவன் தம் கிருபையினால் இந்தச் சிறப்பான உறவை நிலைநாட்டினார். இவையாவும் உண்மையாயினும், அந்த உயர் உறவை காத்துக் கொண்டு, தங்களுக்குரிய இச்சிலாக்கியங்களை அனுபவித்துக் களிகூர ஒரு ஆசாரிய ஊழியம் அவசியமாயிற்று.

தேவனை விட்டு விலகி தூரமாக நின்று கொண்டிருக்கும் மக்களை, அவருடைய தூய சந்நிதானத்தில் நித்தமும் நிற்கக்கூடியவர்களாக்கும் வழிமுறையே ஆரோனின் ஆசாரிய ஊழியமாகும். இது

யெகோவா தேவனே அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்த இறைக் கொடையாம்.

யாத்திராகமம் 28 -ஆம் அதிகாரத்தில் நாம் ஆசாரிய ஆடைகளைப் பற்றிய விவரங்களைக் காண்கிறோம். 29 -ஆம் அதிகாரமோ பலிகளைப் பற்றிப் பேசுகிறது. முந்தினதில் மக்களுக்கு அவசியமாயுள்ள தேவையை வெளிப்படுத்துகிறது. அடுத்த அதிகாரமோ தேவனண்டை மக்கள் வருவதற்கு அவசியமாயிருந்த தேவ கோரிக்கைகள் யாவை என்பதைத் தெரிவிக்கிறது. ஆசாரியனின் ஆடைகள் ஆசாரிய ஊழியத்தின் தன்மைகளையும், அதன் பல்வேறு அம்சங்களையும் விவரித்துக்காட்டுகின்றன.

யெகோவா நியமித்துள்ளபடி பிரதான ஆசாரியன் பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டபின், தன் உடைகளை அணிந்து, அபிஷேகம் பெற்று மற்றும் பல ஒழுங்குமுறைகளை அனுசரிக்க வேண்டிய அவசியம் உண்டு. அவையின்றி அவன் செய்ய வேண்டிய பிற ஊழியங்கள் என்ன என்பதைக் காண்போம்.

ஆசரிப்புக் கூடாரத்தின் அனைத்தின் காவலையும் காப்பது ஆசாரியர்களின் கடமையாக இருந்தது (எண். 18:3).

## 1. மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஆண்டுக்கு ஒருமுறை செய்ய வேண்டிய பணிவிடை

ஆசரிப்புக் கூடாரத்தின் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியன் தன் மகிமையும் அலங்காரமுமான உடைகளோடே நாள்தோறும் செல்லக் கூடாது. அவன் ஆண்டிற்கு ஒருதரம் மட்டும் பாவ நிவாரண பலியின் இரத்தத்தோடே பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும்போது வெண்மையான மெல்லிய நூலால் செய்யப்பட்ட சட்டையை அவன் அணிந்திருக்க வேண்டும் (லேவி. 16:1-4; எபி. 9:7).

## 2. பரிசுத்த ஸ்தலத்தில் அனுதினம் செய்யவேண்டிய பணிவிடை

பரிசுத்த ஸ்தலத்தில் ஒவ்வொரு நாளும் செய்யவேண்டிய சில பணிவிடைகள் அவனுக்கு இருந்தன.

***அ. குத்துவிளக்கை ஏற்றுதல் (லேவி. 24:1-4; யாத். 27:20,21; எண். 8:1-4).*** பொற்தண்டின் மேலிருந்த குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கவேண்டும். இது ஆசாரியர்களின் பொறுப்பாகும். இதில் தெளிவான ஒலிவ எண்ணெய் கிறிஸ்துவின் இரட்சண்ய ஊழியத்தினிமித்தம் உருவான பரிசுத்த ஆவியின் கிருபையை

வெளிப்படுத்துகிறது. அடிக்கப்பட்ட பசும் பொன்னினால் செய்யப் பட்ட குத்துவிளக்கு, தேவ குமாரனின் சிலுவைப் பலிமரணத்தைத் தெரிவிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டான கிருபையின் ஒளி, கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தினால் நாடோறும் பாதுகாக்கப்படு கிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும், இன்ப துன்ப நாட்களிலும் இக் கிருபையின் ஒளியைப் பாதுகாக்கவேண்டியது ஆசாரியனின் பொறுப்பாகும். இதைப்போலவே நாமும் விழிப்புடனிருந்து, கிறிஸ்து வினிடமிருந்து பெற்றுள்ள ஒளியை எந்நாளும் பாதுகாக்க வேண் டும். இது விசுவாசிகளுடைய சாட்சியான வாழ்க்கையை வெளிப் படுத்துகிறது.

ஆசாரியன் விளக்கை அடிக்கடி கவனிக்க வேண்டியது அவசி யம். எரிந்து சாம்பலான திரியை நீக்கிச் சுத்தஞ்செய்து, தூண்டிவிட வேண்டும். நாம் இவ்வுலகிற்கு ஒளியாக இருக்கிறோம். "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்" (மத். 5:14) என ஆண்டவர் விசுவாசிகளைக் குறித்து சொல்லியுள்ளார் அல்லவா? "இப் பொழுதோ (நீங்கள்) கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபே. 5:8) என பவுல் அப்போஸ்தலனும் ஆலோசனை கொடுத்துள்ளார். நாம் எப்போதும் அவருக்காக எரிந்து பிரகாசிக்க வேண்டியது அவசியம். ஆகையால் நமது பிரதான ஆசாரியர் நம்மைத் தூண்டிவிட்டு நாள் தோறும் ஒளிவீசும்படி செய்ய இடம்கொடுக்க வேண்டும். நம்மு டைய ஜீவியத்திலும் சேவையிலும் உபயோகமற்றவைகளை அவர் களைய வேண்டும். இஸ்ரவேலின் பிரதான ஆசாரியன் குத்துவிளக் கில் ஒவ்வொரு நாளும் புதிய எண்ணெய் வார்த்தது போலவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளாகிய நாம், அனுதின மும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும். நாம் ஒளி வீசுகிற விளக்கைப்போல திகழவேண்டும் (2 பேதுரு 1:19) என பேதுரு அப்போஸ்தலனும் எடுத்துக் கூறுகிறார்.

*ஆ. தூபங்காட்டுதல் (யாத். 30:1-9).* இந்தச் சிறப்பான சேவைக் காகப் பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு பொற் பலிபீடமும், தூப கலசமும் வைக்கப்பட்டிருந்தன. பிரதான ஆசாரியனும், அவனுடைய குமாரரான மற்ற ஆசாரியர்களும், காலையிலும் மாலையிலும் தூபங்காட்டவேண்டும். தூபங்காட்டுதல் பரிசுத்தவான்களின் ஜெபத்தையும், துதிசெலுத்துதலையும் குறிக்கிறது (சங். 141:2; வெளி. 5:8; 8:3). நம்முடைய மகா பிரதான ஆசாரியர் இடைவிடாமல் நமக்

காக வேண்டுதல் செய்கிறார் (எபி. 7:25; ரோமர் 8:34). அவருடைய பரிசுத்த ஆசாரியர்களாக இருக்கிற நாமும் தினமும் இருவேளைகளிலும் அவருடைய பரிசுத்த சந்நிதிக்குச் சென்று ஜெபதூபங் காட்ட வேண்டும்.

***இ. சமுகத்து அப்பம் படைத்தல் (யாத். 25:30; லேவி. 24:5-9):*** தங்கள் 12 கோத்திரங்களின் இலக்கத்திற்குத்தக்கதாக, மரக்காலில் பத்தில் இரண்டுபங்கு மெல்லிய மாவில் 12 சமுகத்து அப்பங்களைச் சுட்டு, அதனை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரரின் கையில் வாங்கி, மேஜைமீது ஆசாரியர்கள் இரு வரிசையாக அடுக்கி, நித்திய உடன்படிக்கையாக வைக்கவேண்டும். ஒவ்வொரு வரிசை அடுக்கின் மேலும் சுத்தமான தூபவர்க்கம் இட வேண்டும். இது ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகன பலியாக இருக்கும். ஒவ்வொரு ஓய்வு நாளிலும் இது புதுப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு, தேவனுடைய சமுகத்திலே 12 கோத்திரத்தாரும் எப்பொழுதும் இருந்தனர். தேவ மக்களாகிய நம்முடைய நிலையும் இதுவே! கிறிஸ்துவின் தூபவர்க்கமாகிய நற்கந்தம் இவ்வண்ணமாகவே நம்மேலும் உள்ளது? தேவனுக்கு முன்னர் அவர்களைப்பற்றிய நினைவு ஒருபோதும் அற்றுப்போவதில்லை. இது நம்முடைய உத்திரவாதத்தைக் கூட்டுகிறது அல்லவா?

## 3. பலிபீடத்தண்டை செய்யவேண்டிய பணிவிடை

***அ. பாவநிவாரண பலியிடுதல் (லேவி. 9:7).*** மோசே ஆரோனை நோக்கி: "நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே உன் பாவ நிவாரண பலியையும் உன் சர்வாங்க தகன பலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவர்த்தி செய்" (லேவி. 9:7) என்றார். ஆசாரியர் பிரதிஷ்டை செய்யப்படும் போது இந்தப் பாவநிவர்த்தி செய்யப்பட்டது. நம்முடைய மகா பிரதான ஆசாரியரான இயேசு "பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு (தன்) சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை" (எபி. 7:27). முற்றிலும் பரிசுத்தமுள்ள அவர், தம்முடைய சிலுவை மரணத்தினாலே தம்முடைய மக்களின் பாவங்களுக்காக ஒரேதரம் தம்மைத்தாமே போதுமான பூரண பலியாகச் செலுத்தி மீட்பின் கிரியையை முழுமைப்படுத்தியுள்ளார்.

***ஆ. சர்வாங்க தகன பலியின் நெருப்பு (லேவி. 6:9,13; எண். 15:1-16).*** இதையல்லாது, சர்வாங்க தகன பலியின் நெருப்பு இராமுழுதும்

விடியற்காலம்வரை எரிந்துகொண்டே இருக்கவேண்டும் (லேவி. 6:9,13). அதன் சாம்பலை முறைப்படி அப்புறப்படுத்த வேண்டியதும் ஆசாரியனின் பொறுப்பாகும். இச்சர்வாங்க தகன பலியின் நெருப்பு, பவுல் அப்போஸ்தலன் ரோமர் 12:1,2 -இல் எடுத்துரைத்திருக்கிற படி, விசுவாசிகளாகிய நாம் எப்பொழுதும் நம்மைத் தூய்மையாகக் காத்து, தேவனுக்கு முற்றும் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்திருக்க வேண்டிய புத்தியுள்ள ஆராதனையை வெளிப்படுத்துகிறது.

மற்றும், அந்தி சந்தி பலிகளைச்செலுத்துவதும் ஆசாரியர்களுடைய பொறுப்பாகும் (எண். 28:3,4).

## 4. ஆசரிப்புக் கூடார வாசலில் ஆற்றும் அரும்பணி

***அ. ஜனங்களை ஆசீர்வதித்தல் (லேவி. 9:22; எண். 6:22-27).*** பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் ஜனங்களைப் பலமுறை ஆசீர்வதிக்க வேண்டும். ஆகையால் தேவன் இதற்கென்று ஒரு ஒழுங்கு முறையைக் கட்டளையிட்டார் (எண். 6:23-25). இயேசு கிறிஸ்து பரத்துக்கு ஏறிப்போகுமுன் அவர் தமது கைகளை உயர்த்தி சீடர்களை ஆசீர்வதித்ததுபோல (லூக்கா 24:50), நம்முடைய மகா பிரதான ஆசாரியர் இன்றும் தமது ஜனங்களை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கிறார்.

***ஆ. யெகோவாவுக்கென்று லேவியரை பிரதிஷ்டை செய்தல்.*** தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் பணிவிடை செய்யும் பணிவிடைக்காரர் அவருடைய சந்நிதியில் அவருக்கென்று பிரித்தெடுக்கப்பட வேண்டும் (எண். 8:11-12). நம்முடைய மகா பிரதான ஆசாரியரான இயேசுவும், தமது ஊழியர்களைப் பிரித்தெடுத்து, அவர்களுக்கு வெவ்வேறு ஊழியங்களை நியமிக்கிறார். இந்தக் கிருபையின் காலத்தில் புது உடன்படிக்கையின் ஊழியமும் லேவியருடைய ஊழியத்தைப் போன்றே இருக்கிறது. "அவர் உன்னதத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" (எபே. 4:8). அருளப்பட்டுள்ள வெவ்வேறான இவ்வரங்களைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (எபே. 4:12,13). இக்காரணத்தை முன்னிட்டே "பரிசுத்தரும், குற்ற

மற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங் களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி. 7:26).

## 5. இஸ்ரவேலரின் பாளயத்தில் செய்யவேண்டிய வேலைகள்

***அ. குஷ்டரோகிகளைப் பரிசோதித்தல் (லேவி. 13:1-3; 14:1-9).*** ஒருவனுக்குக் குஷ்டரோகம் வருமானால் முதலாவது பிரதான ஆசாரியன் அவனைப் பரிசோதித்து அவன் அசுத்தன் என்று தீர்க்கவேண்டும். அதைப்போல சுத்தமடைந்த குஷ்டரோகி திரும்ப பாளையத்துக்குள் வரவேண்டுமானால் அப்பொழுதும் பிரதான ஆசாரியனே அவன் சுத்தமடைந்தான் என்று தீர்ப்புக் கூறவேண்டும் (லூக்கா 17:14). நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய இயேசு முதலாவது நம்முடைய அசுத்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். பின்பு பரிசுத்தமாக்கும் அவருடைய இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7).

***ஆ. ஜனத்தொகையைக் கணக்கிடுதல் அல்லது குடிமதிப்பு.*** பிரதான ஆசாரியனும் வெவ்வேறு கோத்திரத் தலைவர்களும் ஜனங்களை எண்ணிக் கணக்கிடும் வேலையைச் செய்தனர் (எண். 1:3, 4; 26:1-4). இது ஒரு பிரயாசமுள்ள வேலை. இவ்விதம் குடிமதிப்பு எழுதப்படும்போது ஒவ்வொருவனும் செல்வந்தன், ஏழை என்கிற வித்தியாசமின்றி தன் ஆத்துமாவுக்காக அரைச் சேக்கல் வெள்ளி கொடுக்க வேண்டும் (யாத். 30:11-16). இவ்விதம் மீட்பின் கிரயத்தை மக்களிடமிருந்து பெறாமல் தாவீது அரசன் இஸ்ரவேலின் ஜனத்தொகையைக் கணக்கிட்ட தவறின் நிமித்தமாக அநேக மக்கள் கொடிய வியாதியினால் மாண்டு போயினர்.

***இ. நியாயம் விசாரிப்பதும் நீதி வழங்குதலும்.*** இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரிப்பதும் ஆசாரியனின் பணியாகும் (உபா. 17:8-13; 19:17; 21:5). அம்மக்களிடையே எழும் வழக்குகளைப் பாரபட்சமில்லாது நியாயமாகத் தீர்த்துவைப்பதும் ஆசாரியர்களுடைய பொறுப்பாக இருந்தது. வழக்குகள் எழும்போது இவை, தேவ சந்நிதியில், தேவன் நியமித்துள்ள இடத்தில், தேவன் நியமித்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் தீர்த்துவைக்கப்பட வேண்டும். இவ்வாறு சுய விருப்பங்களும், யூகங்களும் தவிர்க்கப்பட்டன. இந்த வழக்குகளைத் தேவனால் நியமிக்கப்பட்ட ஆசாரியனே தீர்த்துவைத்தான். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், தேவ அதிகாரத்தினாலேயே அவை தீர்த்துவைக்கப்பட்டன. ஒரு தனிஆள் தன்னுடைய

சுய மேன்மையைக் கொண்டு இத்தகைய தீர்ப்புகளை வழங்கக் கூடாது. மக்களும் தங்கள் வாதங்களைத் தேவ சன்னிதியில் வைத்தவர்களாக, வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு இணங்கவேண்டும். இதைக் காட்டிலும் உயர்வான ஒரு நியாயாசனம் இல்லையாதலால், மேல் முறையீடு செய்ய வேறு நீதிமன்றம் இல்லை. தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் தேவகட்டளையாகக் கூறும் தீர்ப்புகளை வாதியும், பிரதிவாதியும் ஏகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கு நாம் மற்றொரு காரியத்தையும் சிந்திக்க முடியும். இவ்வாறு தீர்ப்புப்பெற்ற ஓர் இஸ்ரவேலன் அதன் பிறகு, தங்களைச் சுற்றியுள்ள புற இனத்தவர்களுடைய நீதி மன்றங்களுக்குச் சென்றிருக்கமாட்டான் அல்லவா? அவ்வாறு செய்யின், அது அவர்கள் மத்தியில் வாசம் செய்யும் யெகோவா தேவனை இகழ்வதாக அமையும். பரலோகத் தேவன் தாமே எல்லாவற்றிற்கும் போதுமானவர் அல்லவா?

இச்சத்தியத்தையே பவுல் அப்போஸ்தலன் கொரிந்திய சபையாருக்கு மிகத்தெளிவாகவே எழுதிப் போதிக்கிறார். *1* கொரிந்தியர் *6:1-9* வசனங்களைப் பாருங்கள். இன்று உள்ளூர் சபையில் இரு விசுவாசிகளுக்கிடையில் எழும் பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டுமென்பதின் தெய்வீக அடிப்படை முறையையே, தேவன் தம் மக்களாகிய இஸ்ரவேலருக்கும் வழங்கியுள்ளார். விசுவாசிகளாகிய பரிசுத்தவான்களே வழக்குகளைக் கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியுடன், திருவசனங்களில் கூறியுள்ள பிரமாணங்களின் படியே, தங்களுக்குள்ளாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் (மத். *18:15-20*). விசுவாசிகளாகிய நாமல்லவா இனி வரப்போகும் நாட்களில் இவ்வுலகத்தை நியாயம் தீர்க்கப்போகிறோம்?

***ஈ. இஸ்ரவேல் மக்களுக்குப் பிரமாணங்களைப் போதித்தல் (உபா. 17:19.20, நெகே. 8:4-9).*** ஆசாரியரின் மற்றொரு பணி, இஸ்ரவேல் மக்களுக்கு தேவனுடைய பிரமாணங்களை எடுத்துரைத்துப் போதிப்பதாகும். மோசே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கையில் லேவியரின் ஒரு பொறுப்பாக இதை எடுத்துரைக்கிறான். "அவர்கள் (லேவியர்கள்) யாக்கோபுக்கு உம்முடைய (தேவனுடைய) நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய (தேவனுடைய) பிரமாணத்தையும் போதிப்பார்கள்" (உபா. *33:10*).

இதற்கு ஒப்பாக புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கு மேய்ப்பர், போதகர் ஆகிய வரங்கள் வழங்கப்பட்டுள்ளன (எபே. *4:13*). முதல் நூற்றாண்டு அந்தியோகியா பட்டணத்து திருச்சபையில் ஐந்து சகோ


தரர்கள் தீர்க்கதரிசிகளாயும் (வசனத்தைப் பகுத்துப் போதிக்கிறவர் களாயும்), போதகர்களாயும் இருந்தனர் (அப். 13:1).

*உ. எக்காளம் ஊதுதல்.* எக்காளம் ஊதுவதைப்பற்றிய தேவ கட்டளைகளை எண்ணாகமம் *10: 1-10* ஆகிய வசனங்களில் காண் கிறோம். ஒரே வெள்ளித் தகட்டால் இந்தப் பூரிகைகள் (எக்காளங் கள்) செய்யப்பட வேண்டும். இஸ்ரவேலில் ஆயிரமானவர்களுக்குத் தலைவர்களான பிரபுக்களைக் கூட்டுவதற்கும், சபையைக் கூட்டு வதற்கும், யுத்தத்திற்கு போகும்போதும், மகிழ்ச்சியின் நாட்களிலும் மற்றும் பண்டிகைகள் மாதப் பிறப்புகளின்போதும் இவை முழங் கப்பட வேண்டும். ஆரோனின் குமாரர்களாகிய ஆசாரியர்களின் பணி யாய் இது இருந்தது. இது தேவனுடைய சமுகத்தில் அவர்களுடைய ஞாபகக்குறியாக தேவனால் நியமிக்கப்பட்டிருந்தது.

# 13

# லேவியரின் கூடாரத் திருப்பணி

*(வேத பகுதி: எண். 4:1-49; 8:5-26)*



**பழைய ஏற்பாட்டு லேவியரின்** ஆசரிப்புக் கூடார சேவை, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் திருச்சபை ஊழியர்களாயுள்ள விசுவாசிகளின் ஊழியத்திற்கு நிழலாக உள்ளது. அவர்களது ஊழியம் ஆசரிப்பு கூடாரத்தையும் அதின் பணி முட்டுகளையும் இஸ்ரவேலரின் வனாந்திர பயணத்தில் ஒவ்வொரு இடமாகச் சுமந்து செல்வதும், கொடுக்கப்பட்ட தெய்வீக ஒழுங்கின் படியே செம்மையாக நிலைநாட்டுவதுமாகவும் இருந்தது. மேகஸ்தம்பம் உயர்ந்து நகர்ந்து செல்லும்போது, அதை தேவ நடத்துதலாகக் கொண்டு, கூடாரத்தைப் பெயர்த்துச் செல்வது அவர்களுடைய பொறுப்பாகும். லேவியருக்குக் கிடைத்த தேவ அழைப்பையும், ஊழியத்திற்கான தகுதியையும், பற்பல பணிக்கு யெகோவா தேவன் அவர்களை நியமித்ததையும் கூர்ந்து படிக்கும் போது, அவை நமக்கு ஆவிக்குரிய நல்ல பயனை வருவிக்கின்றன.

யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களில் லேவி மூன்றாவதாக லேயாளுக்குப் பிறந்தவன். தன் குமாரனான லேவியினுடைய இயற்கையான மாம்சீகப் பண்புகளை யாக்கோபே விவரித்துச் சொல்லியுள்ளான். (ஆதி. 49:5-7). அவன் சுய விரும்பி, கொடூரமானவன், அகங்காரி, இரகசிய ஆலோசனைக்காரன்; ஆயினும் தேவன் தம் அளவற்ற கிருபையினால் அவனுடைய குடும்பத்தைத் தேவனுடைய வீட்டின் பணிக்காகத் தெரிந்துகொண்டார். அவர்கள் தங்களுடைய

---

**குறிப்பு: இப்பகுதி ஜான் ரிட்சி அவர்கள் எழுதிய "வனாந்தரத்திலுள்ள கூடாரம்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.**

இயற்கையான போக்கின்படி தேவ சமுகத்தில் வருவதற்கும், தேவ மக்களுடன் ஐக்கியம் கொள்வதற்கும் தகுதியற்றவர்கள். ஆயினும் அவர்கள் கிருபையினால் சிமியோனிடமிருந்து பிரித்து விடப் பட்டனர். ஆரோன் "தேவனுடைய பிரதான ஆசாரியனாக" ஆகும் அழைப்பைப் பெற்றான் (எண். 18:2-4). இவ்வாறு கிருபையினால் அவர்களுடைய இயற்கையான சுபாவம் மாற்றப்பட்டு, இஸ்ரவேல் மக்களின் முதற்பேறானவர்களுக்குப் பதிலாக "அவர்கள் என்னுடையவர்கள்" (எண். 3:12,13) என்று தேவனால் அறிவிக்கப்பட்டு, உன்னத ஊழியத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நிலையில், அவர்கள் மரித்து உயிர்த்தவர்களாக, தேவனுக்காக ஜீவன் பெற்றவர்களாக, ஒரு புதிய நிலையில் நாட்டப்பட்டு இருந்தனர். இதற்கு ஒப்பாகவே இவ்வுலகில் தேவன் இன்றி நம்பிக்கை அற்று, தூர விலகி இருந்த புற இனத்து பாவிகளாகிய நாமும், கிருபையின் அடிப்படையில் தேவ அழைப்பைப் பெற்றுள்ளோம். கிறிஸ்துவுடனேகூட நாம் உயிர்ப்பிக்கப்பெற்று அவருடையவர்களாக மாற்றப்பட்டுள்ளோம். தேவ கிருபையினால் மட்டுமே நமக்குள்ள இப்போதைய நிலை, உண்டாயிருக்கிறது. நாம் அவருடையவர்களாயிருந்து, அவரில் அன்புகூர்ந்து அவரைச் சேவிக்கிறோம்.

இந்த அழைப்பை அடுத்து லேவியர்கள் இறைப்பணிக்கான ஆயத்தத்தைப் பெற்றனர். தேவ சமுகத்தில் கொண்டு வரப்பட்டுள்ள இவர்கள், தாங்கள் ஆற்றவேண்டிய திருப்பணிக்குத் தகுதியாக்கப் படவேண்டும். அவர்கள் "சுத்திகரிக்கப்பட்டு", இஸ்ரவேலரின் முழுச்சபையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, யெகோவா தேவனுக்கென்று முற்றும் கொடுக்கப்பட்டிருக்கின்றனர் (எண். 8:14, 16). இவ்வாறு அவர்கள் தேவனுக்கு உரியவர்களாகின்றனர். இதுவே அவர்கள் பெற்ற முதல் தகுதி. படிப்பும் அறிவுமல்ல, சமய குழுக்களினால் அங்கிகாரமும், பட்டமளிப்புமல்ல, மாறாக சுத்திகரிப்பும் பிரித்தெடுக்கப்படுதலுமே தேவ ஊழியத்திற்கு அவசியமானதாகும். இன்றும் கிறிஸ்துவின் ஊழியத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு அவசியமாயுள்ளது, "மனந்திரும்புதலும்", "மறுஜென்ம முழுக்குமே" தேவையின்றி எந்த ஒரு பாவியான மனிதனும் தேவ ஊழியனாக முடியாது. மனித முறைமைகளின்படி நியமிக்கப்படுகிறவர்கள் தேவனுடைய ஊழியர்கள் ஆகமாட்டார்கள்.

இவைமட்டும் லேவியரைத் தகுதியாக்கவில்லை. "அவர்கள் சர்வாங்க சவரம் பண்ணி, தங்கள் ஆடைகளைத் தோய்த்து" தங்களைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியவராயும் இருந்தனர். (எண்.

*8:7).* இதனையே தகுதியில்லாத உறவுகளிலிருந்தும், அந்நிய நுகத்திலிருந்தும் நாம் பிரிக்கப்படவேண்டும் எனப் புதிய ஏற்பாடு விவரிக்கிறது *(2 கொரி. 6:14-17).* "பிரியமானவர்களே மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்" *(2 கொரி. 7:1)* என்ற கட்டளையும் பெற்றுள்ளோம். நாம் இரட்சிக்கப்பட்ட பின்னர் களைந்துவிட வேண்டியவை பல உள்ளன *(கொலோ. 3:8,9).* சகல துர்க்குணம், கபடுகள், வஞ்சகங்கள், பொறாமைகள், எல்லாவித புறங்கூறுதல் போன்றவைகளை ஒழித்துவிட வேண்டும் *(1 பேதுரு 2:1,2).* இவ்வாறு ஊழியத்தில் வெளிப்படையாகப் பங்குகொள்வதற்கு முன்னர், சோதிக்கப்பட்டு குற்றம் சாட்டப்படாதவர்களாக இருக்க வேண்டும் *(1 தீமோ. 3:10).*

இதன் பின்னர் லேவியர்கள் ஆரோனும் அவன் குமாரரும் தேவனுக்குக் காணிக்கையும் தத்தமுமாகக் கொடுக்கப்பட்டனர் *(எண். 8:21 -ஐ யோவான் 17:10,11 உடன் ஒப்பிட்டுக் காண்க).* இவ்வாறு அவர்கள் 25 ஆண்டுகளுக்கு மட்டும் (மனித வாழ் நாட்களின் பெலமும், செழிப்புமுள்ள ஆண்டுகள் மட்டும்) ஆசரிப்புக் கூடாரத் திருப்பணிக்கென்று நியமிக்கப்பட்டனர் *(எண். 8:24-26).*

இஸ்ரவேல் மக்களுக்கிடையில் லேவி கோத்திரத்தாருக்கு பங்கும் சுதந்திரமும் இல்லை. யெகோவா தேவனே அவர்களுக்குச் சுதந்திரமாக இருந்தார். கர்த்தருக்கு இடப்படும் பலிகளே அவர்களின் பங்கு *(உபா. 18:1,2).* இவர்களுடைய தேவைகள் யாவும் அவர்களுடைய சகோதரர்கள் மூலம் போதுமான அளவு சந்திக்கப்பட்டு, எவ்விதக் குறைவும் இன்றிப் பராமரிக்கப்பட்டனர் *(எண். 35:4-8).* இம்முறையின்படியே புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ஊழியர்களின் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன. அவர்களுக்கு மாத சம்பளம் கிடையாது, நியமிக்கப்பட்ட ஊதியம் இல்லை. அவர்களுடைய தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்பட்டு வருகின்றன. இதுவே தேவ ஒழுங்கு. "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை" *(அப். 3:6)* எனக் கூறுவதில் அப்போஸ்தலர்கள் சற்றும் வெட்கப்படவில்லை. மற்றொரு அப்போஸ்தலனோ, "கிறிஸ்துவுக்காகச் சகலவற்றையும் நான் நஷ்டம் என விட்டேன்" என மிகுந்த மனரம்மியத்துடன் அறிக்கையிட்டார்.

## திருப்பணிகளின் அடிப்படையில் பாகுபாடு

தாங்கள் நிறைவேற்றுவதற்குப் பெற்றுக்கொண்ட பணிகளின் அடிப்படையில் லேவி குடும்பத்தார் மூன்று வகுப்பாகப் பகுக்கப் பட்டனர். அவை கோகாத், கெர்சோன், மெராரி ஆகிய மூன்று குடும் பங்களாகும். ஆசரிப்புக் கூடாரத்தில் குறிப்பிட்ட பகுதியைக் கவ னிக்கும்படியான பொறுப்புகளை இவர்கள் ஒவ்வொருவருக்கும் யெகோவா தேவன் கொடுத்திருந்தார். இவர்களுடைய இத்தகைய திருப்பணியைப் பிரதான ஆசாரியன் கண்காணித்து வந்தான். அவர் களிடையே மனக்கசப்பு, முறுமுறுப்பு, ஏற்றத் தாழ்வு ஆகிய எவை யும் காணப்படவில்லை.

மெராரி குடும்பத்தாருக்கு, கூடாரத்தின் பலகைகள், தாழ்ப் பாள்கள், தூண்கள், பாதங்கள் இவைகளுக்கடுத்த வேலைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அடித்தள ஊழியமாக இவர்களின் ஊழியம் அமைந்திருந்தது (எண். 4:29-33).

இவர்கள் தங்கள் பணிகளை முடித்த பின்னர் கெர்சோன் குடும் பத்தாரின் வேலை தொடங்கினது. இவர்களுக்குத் தொங்குதிரைகள், மூடும் திரைகள், கயிறுகள் ஆகியவற்றோடு இணைந்த வேலைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தன. இவர்கள் கூடாரத்தை வலுவாக்கி அழகுபடுத்தினர். இவ்விரு குடும்பத்தாரின் பணிகளும் ஒன்றோ டொன்று இணைந்து இருந்தன (எண். 10:17). ஆம், இவர்கள் "உடன் வேலையாட்களாக" பணியாற்றினர் (1 கொரி. 3:9).

இதையடுத்து கோகாத் புத்திரர் வந்தனர். இவர்கள் தங்கள் தோள்களில் பரிசுத்த பணிமுட்டுகளைச் சுமந்து வந்தனர். பலிபீடம், தொட்டி, பரிசுத்த இடத்தில் உள்ள பணிமுட்டுகளாகிய மேஜைகள், குத்து விளக்கு, கிருபாசனம், தொங்குதிரைகள் ஆகிய இவைகளுக் கடுத்த பணிகள் இவர்களுக்குரியதாயிருந்தன (எண். 3:29-31). இவர் களுடைய பணிவிடை ஆசரிப்புக் கூடாரத்தில் மிக பரிசுத்தமானவை களுக்கு அடுத்ததாகும் (எண். 4:4).

இவையாவும், இன்று நமக்கு அநேக ஆவிக்குரிய படிப்பினை களைத் தரக்கூடியவைகளாயுள்ளன. ஆசரிப்புக் கூடாரமும் அதின் ஆராதனைக்குரிய முறைமைகளும், புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய நம்முடைய தொழுகைக்கும் இறை பணிக்கும் தொடர்புடையவை யாகவே உள்ளன. தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யும்படி நாம் பயத்தோடும், பக்தியோடும் கிருபையைப் பற்றிக்கொண்டு அவ ரண்டை சேருவோமாக (எபி. 12:28).

இன்றைக்கு நாம் ஆற்ற வேண்டிய ஊழியங்கள், பழைய ஏற்பாட்டு முறைமைகளிலிருந்து வேறுபட்டதாகவே உள்ளது. இன்றைய ஊழியம் சடப்பொருளாக உள்ள ஒரு கூடாரத்துடனோ அல்லது ஒரு கட்டிடத்துடனோ தொடர்புடையதாக இல்லை; அது ஆவிக்குரியதாகவே இருப்பினும், பழைய ஏற்பாட்டுச் சட்டதிட்டங் களில் காணும் ஆவிக்குரிய உட்கருத்துகளுக்கு எவ்வித மாற்றமும் இல்லாததாகவே உள்ளது. இன்றைக்கு நாம் நிறைவேற்றும் ஊழியத் தின் இடம், தேவன் வாசஞ்செய்யும் வீடு ஆகும். அது ஜீவனுள்ள தேவனுடைய திருச்சபையாக உள்ளது (1 தீமோ. 3:15). அங்கு தேவ னுடைய ஆவியானவர் வாசம் செய்கிறார் (1 கொரி. 3:16). கிறிஸ்து வினால் கிருபையாக மீட்கப்பட்ட விசுவாசப் பெருமக்களே அந்த வீடாகவும், ஆலயமாகவும் உள்ளனர் (எபே. 2:21,22).

### புதிய ஏற்பாட்டு சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள்

லேவியின் மூன்று குடும்பங்களின் ஊழியங்களும் இன்று திருச் சபையில் நிலவும் ஊழியங்களுக்கு ஒரு நிழல் படமாக அமைந் துள்ளன.

1. அடித்தளமாக உள்ள மெராரியரின் ஊழியம் கிறிஸ்து வின் சுவிசேஷகனுடைய திருப்பணிக்கு ஒப்பாயுள்ளது.

2. கெர்சோனியர் தங்களுடைய திரைகள், மூடுதிரை கள், கயிறுகள் இவைகளுடன் ஆற்றும் வேலை, கூடா ரத்தை வலுவுள்ளதாக்கி அழகுபடுத்துகிறது. இன்றைய சபையிலுள்ள மேய்ப்பனுடைய பணிக்கு இது ஒத்திருக் கிறது.

3. கோகாத்தியர் பரிசுத்த ஸ்தலத்தின் பல பணிமுட்டு களைச் சுமக்கும் ஊழியமும், அதை அதனதனுடைய இடத்தில் முறைப்படி நிலை நாட்டுவதும், போதகனின் ஊழியத்திற்கு இசைந்திருக்கிறது.

சுவிசேஷகனுடைய ஊழியம் உலகளாவியதாகும். பாவிகள் உள்ள இடமெல்லாம் அவர்களுடைய பணித்தளமாகும். கிறிஸ்து வினுடைய கிருபையின் சுவிசேஷமே அவர்கள் வழங்கும் நற்செய்தி. பண்டை மெராரியரைப் போல, மீட்பின் வெள்ளிப் பாதங்களை யும், பூண்களையும் அவர்கள் சுமக்கிறார்கள். இதுவே பாவிகளுக்கு ஆதரவாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் அவனை நடத்துகிறபடி அவன் பற்பல இடங்களுக்கும் சென்று, சிலுவையில் பலியான

கிறிஸ்துவை அறிவிக்கிறான். இவ்வுலகமாகிய வனாந்திர நிலத்தில் வெள்ளிப் பாதங்களை நாட்டும் நற்பணி இதுவே. இந்த சுவிசேஷகர் கள் மனிதர்களைச் சீர்திருத்த முற்படுவதில்லை. சன்மார்க்க போதனை புகட்டுவதில்லை. அவர்களிடம் சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறார்கள். கிறிஸ்துவே இரட்சகர் - கிறிஸ்துவே ஆண்டவர் - கிறிஸ்துவே இரட்சிப்பின் அஸ்திபாரம் (அப். 4:12). கிறிஸ்துவே திருச்சபையின் மூலைக்கல் (மத். 16:18). கிறிஸ்துவே திருச்சபையின் சிரசு என அவர்கள் நிலைநாட்டுகிறார் கள். அவர்களுடைய கருத்தும் முயற்சியும், வேலையும் சேவையும் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குச் சீடராக்குவதேயாகும் (மத்தேயு 28:19,20). இவ்வாறு புதிய உள்ளூர் சபைகளில், புதிய ஆத்துமாக் களைச் சேர்க்கும் முயற்சியில் இன்றைய நற்செய்திப் பணியாளர்கள் (சுவிசேஷகர்கள்) ஈடுபட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து கெர்சோனியரின் ஊழியம் இடம் பெறு கிறது. தங்கள் சகோதரர்கள் கட்டியதை உறுதிப்படுத்தி, இரட்சிக்கப் பட்டவர்களைக் கிருபையில் கட்டுகின்றனர்; மூடு திரைகளினால் பாதுகாத்து, திரைகளைத் தொங்கவிட்டு அழகுபடுத்துகின்றனர். இதுவே மேய்ப்பனுடைய பணி. அவன் நற்செய்தியாளனுக்குக் கைகொடுத்து, அவனுடைய பணியைத் தொடருகிறான். அவன் மந்தையைப் போற்றிக் காத்து அதைப் பராமரிக்கிறான். அவன் புதிய விசுவாசிகளைத் தேடி, நசலானதை மேய்த்து, நொறுங்குண்டதைக் குணமாக்கி, இளைத்திருக்கிறதை ஆதரிக்கிறான். சிதறுண்டதைத் தேடிக் கண்டுபிடிக்கிறான். காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாக் கிறான். இந்த மேய்ப்பன், அப்போஸ்தலர் நடபடிகளில் காணும் பர்னபாவைப் போலிருந்து, சீப்புருதீவாரும், சிரேனே பட்டணத் தாரும் அந்தியோகியா பட்டணத்தில் ஆரம்பித்த ஊழியத்தைத் தொடர்ந்து, விசுவாசிகள் "கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத் திருக்கும்படி யாவருக்கும் புத்தி" சொல்லி வருகிறான் (அப்.11:20-24). இத்தகைய மிகவும் அவசியமான நல்ல ஊழியம் தடைபட்டு, சபைகளில் இல்லாதே போகும்போது, "என் கூடாரம் அழிந்து போயிற்று; என் கயிறுகளெல்லாம் அறுக்கப்பட்டு போயின. என் பிள்ளைகள் என்னை விட்டு போய்விட்டார்கள்; அவர்களில் ஒரு வனும் இல்லை, இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக் கட்டுவாரில்லை... மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டு" போய்விட்டது என்று கர்த்தர் அங்கலாய்க்கிறார் (எரே. 10:20,21). இன்றைய உள்ளூர் சபைகளின் நிலை இதுபோன்று உள்ளது

அல்லவா? இதைப் பற்றி கவலைகொண்டு அக்கறை காட்டும் விசுவாசிகள் உண்டா? நல்ல மேய்ப்பர்களைக் கர்த்தர் நம் சபைகளுக்குத் தரும்படி ஊக்கமாக ஜெபிப்போமாக! நாமும் உழைப்போமாக.

இவ்வாறு கூடாரம் நிலைநாட்டப்பட்டு அழகூட்டிய பின்னர், கோகாத்தியர் எழுகின்றனர். அவர்கள் பரிசுத்த பணிமுட்டுகளை அதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் அதனதன் ஒழுங்கின்படி, பரிசுத்த இடத்திலும், வெளிப்பிரகாரத்திலும் வைக்கின்றனர். இதுவே இன்றைய போதகனுடைய ஊழியம். இந்த பரிசுத்த பணிமுட்டுகள் ஒவ்வொன்றும் எதற்கு அடையாளமாக நிற்கின்றனவோ அதனை, அதன் பயனை எடுத்துரைக்கின்றனர். கிறிஸ்துவின் பலிமரணத்தினால் எவ்வாறு ஒரு பாவி ஏற்றுக்கொள்ளப்படுகிறான் என்பதை வெண்கலப் பலிபீடம் தெரிவிக்கிறது. வெண்கலக் கடற்தொட்டி அனுதின சுத்திகரிப்பின் அவசியத்தை உணர்த்துகிறது. இவ்வாறு சபைப் போதகன் பலிபீடம், மேஜை, குத்துவிளக்கு இவையாவும், விசுவாசிகள் உயிர்த்தெழுந்துள்ள கிறிஸ்துவுக்குள்ளாகப் பெற்றுள்ள நிலை, தூப மேஜையின் முன் அவர்களுக்குள்ள ஆராதனை, சமுகத்தப்ப மேஜையில் அவர்கள் பெறும் பெலன்கொடுக்கும் ஆகாரம், கிருபாசனத்தண்டை தேவனுடன் உள்ள ஐக்கிய உறவு ஆகியவைகளை விளக்கிப் போதிக்கிறான். சபையில் விசுவாசிகளுக்குக் திருவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்து, அடிப்படை வேதாகம உண்மைகளை விளக்கிச் சொல்லி, அவர்களுடைய விசுவாசத்தை வளர்ப்பது போதகனுடைய பொறுப்பாகும். இவ்வாறு ஆண்டவருடைய வேலை, அவருக்குள் நிறைவேற்றும் முயற்சிகளினால் வளர்ந்து, பெருகி வருகிறது. கிருபையும் சமாதானமும் நிலைபெறுகிறது. அப்போதைக்கப்போது தடைசெய்யும் பிசாசின் கிரியைகள் வரினும், கர்த்தருடைய வேலை இவ்வாறு பெருகி திருச்சபை வளர்கிறது. இந்நிலையில் கர்த்தர் மகிமை அடைகிறார்.

சாலொமோன் அரசனின் சிறப்பும் செழுமையுமுள்ள நாட்களில் லேவியர்கள் தங்களுக்குள் சீட்டுபோட்டுக் கொண்டு ஒய்ந்திருந்தது போலவே (*1 நாளா. 24:25-31*), ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி ஊழியத்திலும், திருச்சபையிலும், அவருடைய சத்திய வசனத்திலும் உழைத்தவர்கள், தங்கள் உழைப்பின் கிரியைகளுக்கான - இவ்வனாந்திர உலகில் அனுபவித்த பாடுகள், கண்ணீர்கள் மத்தியிலும் நிறைவேற்றின கிரியைகளுக்கான-- பலனையும் வெகுமதியையும் ஆயிரமாண்டு கிறிஸ்துவின் ஆட்சி

யில் பெற்று மகிழ்வர். அவ்வமையம் கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருப்பார். சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாயிருக்கும். அவ்வமையம் அவருடைய ஊழியர்கள் அவரைச் சேவித்து, அவருடைய நாமத்தைத் தங்கள் நெற்றியில் தரித்தவர்களாக, அவருடைய இன்ப சமுகத்தைத் தரிசித்து மகிழ்ந்து நிற்பார்கள் (வெளி. 22:3,4).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருநாமம் மகிமைப்படுவதாக!

## முடிவுரை

இவ்வாறு லேவியர்கள், ஆசாரியர்கள், பிரதான ஆசாரியன் ஆகியோரின் ஊழியங்கள் பல்நோக்குடையவையாகும். இன்றைய கிறிஸ்துவினுடைய சரீரமாகிய திருச்சபையின் அவயவங்களாகத் திகழும் நாம், பற்பல ஊழியங்களை நிறைவேற்ற வேண்டியது மிக அவசியமாக உள்ளது. இதனை நாம் பொறுப்புடன் நிறைவேற்ற, நாம் நம்மை கிறிஸ்துவுக்கு முற்றுமாக ஒப்புவித்தவர்களாக, அவருடைய மெய் சீடர்களாக விளங்கி, அந்தப் பிரதான ஆசாரியனின் வருகைக்கு ஆவலுடன் காத்திருப்போமாக. இதற்காக நாம் கர்த்தருடைய கிருபையை நாடுவோமாக!

***அடிக்குறிப்பு***

1. யாக்கோபு தன்னுடைய மகன் யோசேப்புக்கு செய்வித்த பலவர்ண ஆடை ஆதியாகமம் **37:3** –இல் "அங்கி" என்ற சொல்லால் தமிழ் வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய வார்த்தை "மூடுகிற" என்ற பொருளுள்ள "குடோனெத்" என்பதாம். மாறாக, யாத்திராகமம் **28:31** –இல் உபயோகிக்கப்பட்டுள்ள எபிரெயச்சொல் "வெளியே அணியும் மேல் ஆடை" என்ற பொருள் கொண்ட "மையின்" ஆகும். இச்சொல் திருமறையில் முதன்முறையாக இவ்விடத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# இந்நூல் எழுத உதவிய நூற்பட்டியல்

1. *பிரதான ஆசாரியனின் உடைகள்* A. Naismith M. A (out of print)

2. Truth & Tiding *மாதாந்திர பத்திரிக்கை* 99, Blanmora Drive Stoney Creek, ON, Canada L8G 4A9.

3. Ritchie Old Testament Commentaries, What the Bible Teaches - Exodus by John Grant Published by John Ritchie Ltd., Kilmarnock, Scotland, U.K.

4. God's Sanctury by C. H. Raven, Published by John Ritchie Ltd., Kilmarnock, Scotland, U.K.

5. Tabernacle in Wilderness by John Ritchie, John Ritchie Ltd., Kilmarnock, Scotland, U.K.


6. Notes on the Pentateuch by C. H. Mackintosh, published by Loizeaux Brothers, Napture, New Jersey.

7. Unger's Bible Dictionary, Moody Press, Chicago, USA.

8. Fausset's Bible Dictonary. Zondervan Publishing House, Grand Rapids, Michigan, USA.

# மோரியா வெளியீடுகள்

## திரு. வில்லியம் மெக்டொனால்டு அவர்களின் பயனுள்ள நூல்கள்




**BE WISE** ***Exposition of the book of Proverbs***
***A crisp and clear verse -by- verse exposition.***

William MacDonald

ISBN NO. 978-81-906129-9-9


Price Rs. 150/-

**இன்றைய இறைத்தூது**

சீரிய கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான இறைச் சத்தியங்கள் அடங்கிய தினசரித் தியான நூல்.

ISBN NO. 978-81-906129-7-5

விலை ரூ. 240/-







**மறக்கப்பட்ட கற்பனை – பரிசுத்தராயிருங்கள்**

தூய வாழ்க்கையின் அவசியத்தை வலியுறுத்தும் நூல்

ISBN NO. 978-81-906129-4-4

விலை ரூ. 75/-

**கிறிஸ்தவச் சீஷத்துவப் பயிற்சி – களஞ்சியம் – 1,2**

கிறிஸ்துவின் அடியார்களுக்கு ஏற்ற பயிற்சிநூல்

ISBN NO. 978-81-906129-6-8
ISBN NO. 978-81-907600-2-5

விலை ரூ. 75/-, 150/-






**இது ஒரு நல்ல கேள்வி**

கேள்வி பதில் முறையில் சுவிசேஷ விளக்கம்

ISBN NO. 978-81-906129-2-0

விலை ரூ. 15/-

**புதுமை மனிதர்கள்**

அறைகூவலாக அமையும் கிறிஸ்துவின் சாயலில் வாழ்ந்தோரின் வியத்தகு செயல்கள்

ISBN NO. 978-81-907600-3-3

விலை ரூ. 75/-



## மோரியாவின் இதர வெளியீடுகள்



**வேதாகமப் போதனைக் கோட்பாடுகளும் நடைமுறை ஒழுங்குகளும்**

விசுவாசிகள் அறிந்திருக்க வேண்டிய இறைச்சத்தியங்கள்

ந. ஜான் ஜெயானந்தம்

விலை ரூ. 35/-



**இன்றியமையா இறை உண்மைகள்**

விசுவாசிகள் பின்பற்ற வேண்டிய அடிப்படை போதனைகள்

ஜான் ரிட்சி

ISBN NO. 978-81-906129-8-2

விலை ரூ. 75/-



**இவர் எவ்வளவு பெரியவர்**

எபிரெயர் நிருபத்திற்கான விளக்கவுரை

இரா. கிருஷ்ணன் குட்டி

ISBN NO.978-81-906129-0-6

விலை ரூ. 120/-



**வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்**

வேதாகம நாட்டின் பண்பாட்டை விளக்கும் நூல்

விக்டர் சுந்தரராஜ்

ISBN NO. 978-81-907600-0-3

விலை ரூ. 30/-



**கொலோசெயர் நிருபம்**

இந்நிருபம் போதிக்கும் ஆவிக்குரிய செய்திகள்

தாம்ஸன் B. தாமஸ்

ISBN NO. 978-81-906129-3-7

விலை ரூ. 15/-



**இரட்சிப்பின் நித்திய பாதுகாப்பு**

இரட்சிப்பின் பாதுகாப்பை உறுதி செய்யும் இறைச் சத்தியங்கள்

ஒய். எசேக்கியேல்

ISBN NO. 978-81-907600-4-1

விலை ரூ. 30/-



**தூய ஆவியானவரின் சில செயலாக்கங்கள்**

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய தெளிவான இறை போதனை

ந. ஜான் ஜெயானந்தம்

ISBN NO. 978-81-907600-1-0

விலை ரூ. 30/-




**Vessels of Honour**

Fit for the Master's Use

Alfred Chote

ISBN NO. 978-81-906129-5-1

Price Rs. 45/-

---

**Moriah Ministries**
Post Box No. 2540, No. 57/51, East Park Road,
Shenoy Nagar, Chennai - 600 030, India
Email: <moriahministries@gmail.com> Phone: 91-044-2664 5010

பிரதான ஆசாரியனின்

# அலங்கார ஆடை

யெகோவாவின் கட்டளையின்படி மோசே உருவாக்கிய ஆசரிப்புக் கூடாரமும், ஆசாரியனும், அவன் அணியும் பரிசுத்த ஆடைகளும் மகா பிரதான ஆசாரியராக விளங்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அருமையான நிழல் படங்களாக இருக்கின்றன. அவற்றின் ஆவிக்குரிய உட்கருத்தை அறிந்துகொள்வதே இச்சிறு நூலின் நோக்கமாகும். இஸ்ரவேல் மக்களுடைய பிரதான ஆசாரியரின் அலங்கார ஆடைகளை நம் கண்முன் சித்திரமாக்கி, அதன் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் போதிக்க விரும்பும் இறைச் சத்தியங்களையும், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை ஆலோசனைகளையும் இந்நூல் சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

வேதாகமப் போதனை

ISBN 81-907600-5-x

9 788190 760058

மோரியா வெளியீடுகள்

REHOBOTH BIBLE CENTRE
Rs 58